www.padippakam.com

1-15 ஆகஸ்ட் '93 ரூ. 3.00


# புதிய ஜனநாயகம்



## கவர்ச்சி சரிவுக்கு முட்டுக் கொடுக்க 'ஜெ' உண்ணாவிரதம்

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்


● பீகாரைப் போலவே உ.பி.யிலும் உயர் சாதி நிலப்பிரபுக்கள் படை ஒன்றினைக் கட்டியிருக்கும் செய்தி தற்பொழுது வந்துள்ளது. அம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் கூட்டங்கள் நடத்தி உயர் சாதி இளைஞர்களை அணிதிரட்டி ஆயுதங்களை வழங்கிவரும் இவ்வமைப்பு, கிராமங்களில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. இது பற்றி இந்திய மக்கள் முன்னணியினர் கொடுத்த புகாரை அரசு மறுத்திருப்பதுடன், இத் தாக்குதல்களெல்லாம் நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள்தான் என்ற அவதூறையும் பரப்பி வருகிறது.

● சுற்றுலா ஆண்டு கொண்டாடி வரும் இந்திய அரசு கடந்த மார்ச்சில் ஜெர்மனியில் நடந்த சர்வதேச சுற்றுலா விழாவில் 'எது வேண்டுமானாலும் கிடைக்கும் இடம்' என விளம்பரப்படுத்தி கோவாவைப் பற்றிய செய்தி படத்தை திரையிட்டுள்ளது. இப்படம் பாலுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் கோவாவையும் அம் மாநிலப் பெண்களையும் இழிவுபடுத்துவதாகவும் உள்ளது எனக்கூறி கோவாவில் இயங்கிவரும் பல்வேறு மகளிர் அமைப்புகள் இதனைத் திரையிடுவதற்கு எதிராகப் போராட ஆரம்பித்தன. தற்போது அரசு இப்படத்தைத் தடை செய்துவிட்டாலும், சொந்த நாட்டுப் பெண்களையே இழிவுபடுத்தி அந்நியச் செலாவணியை ஈட்ட நினைக்கும் ஆள்வோரின் வக்கிர புத்தியை என்னவென்று கூறுவது?

● கேரளா மாநிலம் தலைச்சேரியிலுள்ள கூட்டுறவு மருத்துவமனை தேர்தலில் 'கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட்' கட்சியிடம் தோற்றுவிடுவோம் என அறிந்த 'மார்க்சிஸ்ட்' குண்டர்கள் ஓட்டுப் பெட்டியைக் கடத்திச் சென்றுள்ளனர். தடுக்க வந்த போலீசின் மீது கற்களை மட்டுமின்றி கை எறி குண்டுகளையும் வீசித் தாக்கியுள்ளனர். கடந்த பிப்ரவரியில் கண்ணனூரில் இக்குண்டர்படை கூட்டுறவு தேர்தலின் போது மிருகக் காட்சி சாலையைக் கொளுத்தி பயபீதியூட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

● மூன்று முறைத் தொடர்ச்சியாக 'தலாக்' எனக்கூறி முஸ்லீம் பெண்களை விவாகரத்து செய்வது செல்லத்தக்கதல்ல என 'ஜமாயத் அஹ்லீ ஹதித்' எனும் முஸ்லீம் அமைப்பு அறிவித்திருந்ததை ஜமாயத் உலீமா - இ - ஹிந்த் அமைப்பைச் சேர்ந்த மத அடிப்படைவாதிகள் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தீர்மானித்துள்ளனர். தொடர்ச்சியாக மூன்று முறை 'தலாக்' எனக்கூறி விவாகரத்து செய்த பெண்ணுடன் மீண்டும் சேர்ந்து வாழ்வது பாவமானது என்றும் இவ்வமைப்பு எச்சரித்துள்ளது. இதை 'அநீதி' எனக்கூறினாலும் ஷரியத் இப்படித்தான் கூறுகிறது என இவ்வமைப்பினர் நீலிக்கண்ணீர் வேறு வடித்துள்ளனர்.

● தாமோதர் ரௌத் - ஒரிஸ்ஸா மாநில மந்திரி. இவர் கடந்த ஆண்டு பஞ்சாயத்து போர்டு தலைவியாக இருந்த மலைஜாதி பெண்ணொருவரிடம் முறைகேடாக நடந்துள்ளார். இது பற்றி விசாரிக்க தேசிய மகளிர் கமிஷன் முன் ஆஜராக இவருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. மந்திரி என்ற அந்தஸ்தைக் காரணமாக வைத்து இதன் முன் மூன்று முறைத் தப்பித்துக் கொண்ட இவர் ஜூலை 5-ந் தேதி அக்கமிஷனின் விசாரணைக்கு வந்திருந்தார். அப்பொழுது பல்வேறு மகளிர் அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் அவரைக் 'கெரோ' செய்து, வளையல்களை மாட்டி விட்டுத் தக்க மரியாதை செய்து அனுப்பியுள்ளனர்.



● வியன்னாவில் நடந்து முடிந்த சர்வதேச மனித உரிமை கருத்தரங்கில் போஸ்னியாவில் நடந்து வரும் இனப்படுகொலையைக் கண்டித்து பாகிஸ்தான் தலைமையில் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றக் கோரியது. ஆரம்பத்தில் இதை எதிர்த்த ஏகாதிபத்திய நாடுகள் நீண்ட விவாதத்தின் பின்னரே ஓட்டெடுப்புக்கு ஒப்புக் கொண்டன. வெளியுலகுக்கு போஸ்னியாவின் இரட்சகனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்கா ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாத 54 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 'ஜனநாயகவாதி' யெல்ட்சினின் ரசியாதான் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த ஒரே நாடு.

● போரிஸ் பெக்கர் - ஜெர்மனியைச் சேர்ந்த சர்வதேசப் புகழ் வாய்ந்த டென்னிஸ் விளையாட்டு வீரர். இவர் பார்பரா என்ற ஜெர்மானி இனத்தைச் சேராத பெண்ணைத் திருமணம் செய்ய இருப்பது, நவீன நாஜிகளிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நாஜிகள், 'மண்ணின் மைந்தனை விட்டு ஒழிந்து போ' என இப்பெண்ணிற்கு எதிராக எங்கும் கூக்குரலிட்டு வருகின்றனர். இதனால், பெக்கர் தனது காதலியுடன் லண்டனில் நிரந்தரமாகத் தங்கிவிட முடிவெடுத்துள்ளார். இத்துடன் 2000-ம் ஆண்டில் ஜெர்மனி நடத்த உத்தேசித்துள்ள ஒலிம்பிக் போட்டிகள் 'ஆரிய இனவெறியைத் தான் கிளப்பிவிடும்' என எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

● வரதட்சணைக் கொடுப்பது, வாங்குவதை அரசு சட்டப்படி தடை செய்திருப்பினும், பீகாரில் மதுபானி நகருக்கு அருகில் ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரு வாரம் வரதட்சணைக் கொடுத்து திருமணத்தை நிச்சயித்துக் கொள்வது வெளிப்படையாக நடந்து வருகிறது. 'மைதிலி' எனும் பார்ப்பன பிரிவினரிடையே மட்டும் காணப்படும் இவ்வழக்கத்தின்படி சந்தைக்கு கொண்டு வரப்படும் மணமகனின் சமூக, பொருளாதார, கல்வி அந்தஸ்துக்கு ஏற்ப ரூ. 20,000 முதல் 5 லட்சம் வரை வரதட்சணையாகப் பெறப்படும். மகளிர் அமைப்புகள் இதற்கு எதிராக போராடிய பின்னும் அரசு கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. காரணம், வாங்குவது 'அவாள்' அல்லவா!

● பங்குச் சந்தை செய்திகளை வெளியிட்டு வந்த மே.வங்க 'மார்க்சிஸ்டு' கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான ''ஜனசக்தி'', இப்போது மேலும் ஒருபடி முன்னேறி மணமகன் - மணமகள் தேவை விளம்பரங்களையும் சாதி - மத அடிப்படையில் வெளியிடப்படுகிறது. மறைந்த 'மார்க்சிஸ்டு' தலைவரான தினேஷ் மஜும்தாரின் மகளுக்கு மணமகன் தேடி அண்மையில் ''ஜனசக்தி''யில் ஒரு விளம்பரம் வெளியாகியது. அதில் ''மார்க்சிய சிந்தனை கொண்ட பிராமண அல்லது கயாஸ்தயா சாதியைச் சேர்ந்த மணமகன் தேவை'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. போலிக் கம்யூனிஸ்டுகளோ, ''நாங்கள் வரதட்சணை முறையை ஏற்காதவர்களின் விளம்பரங்களையே வெளியிட்டு வருகிறோம்; சாதி-மதம் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமானது'' என்கின்றனர். எப்படியிருக்கிறது பூணூல் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை?



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

17-18

16-31 ஜூலை - 1-15 ஆக. '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

### காவிரி:

# ஜெயாவின் உள்நோக்கம் காங்கிரசின் நயவஞ்சகம்

**கா**விரி நீர்ப் பிரச்சினையில் உடனடியாக நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்தக்கோரி தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா காலவரையறை இல்லாத உண்ணாவிரதத்தை மேற்கொண்டது, முக்கியமாக மத்திய அரசுக்குக் கடும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது. ஜெயாவின் கோரிக்கையை ஏற்று இடைக்காலத் தீர்ப்பை அமுலாக்க இரண்டு கமிட்டிகளை அமைப்பதாக மத்திய அரசு வாக்களித்து உண்ணாவிரதத்தை முடிக்க வைத்தது; ஆனால் அந்த ஏற்பாட்டை கர்நாடக அரசு ஏற்க மறுத்து சண்டித்தனம் செய்யும் போது ஏதுமறியாது விழிக்கிறது. இந்த விவகாரத்தில் வழக்கம்போல அனைத்து இந்திய அரசியல் கட்சிகள் சந்தர்ப்பவாத நாடகமாடுகின்றன. தி.மு.க., பா.ம.க. போன்ற மாநிலக் கட்சிகளுக்கும் கூட ஜெயாவின் உண்ணாவிரதம் எதிர்பாராத சங்கடமான நிலையை ஏற்படுத்திவிட்டது.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் சொந்த அரசியல் ஆதாய நோக்கமுடையது என்பதில் சந்தேகமில்லை. சரிந்துவரும் ஜெயலலிதாவின் அரசியல் செல்வாக்கைத் தூக்கி நிறுத்த மீண்டும் கவர்ச்சி, அனுதாப அலையைக் கிளப்பிவிட வேண்டிய அவசியம் அவருக்குள்ளது. இதற்காகவே கோடிக்கணக்கான ரூபாய்கள் வாரி இறைக்கப்பட்டு, கூலிக்கு முழக்கமிடும் கூட்டம் திரட்டப்பட்டு, பத்திரிக்கை விளம்பரங்கள் உட்பட எல்லாக் கேலிக்கூத்துக்களும் அறிவிக்கப்படாத பொது வேலை நிறுத்தம் - கடையடைப்பு 'பந்த்'தும், தீக்குளிப்புகளும் நடக்கின்றன. இன்னொருபுறம் காங்கிரசின் சந்தர்ப்பவாதச் செயல்களுக்கும் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகளுக்கும் ஆத்திரமுற்ற ஜெயலலிதா பதிலடி கொடுக்கவும் வேண்டியுள்ளது. சென்னை குடிநீர் பிரச்சினைக்காக காங்கிரசு போராட்டங்கள் மேற்கொண்டது, ஜெயாவுக்கு எதிராக ஊழல் பட்டியல் தயாரித்து கவர்னரிடம் மனு தருவது, சுப்பிரமணியம் சுவாமி மூலமாக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஆதாயம் தேடுவது போன்றவற்றுக்கு எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. மேலும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் உடனடிப் பலனை வரவிருக்கும் பழநி, இராணிப்பேட்டை இடைத்தேர்தல்களில் அறுவடை செய்து கொள்ளவும் விரும்புகிறார். வெற்றிவிழா விளம்பரங்கள், கொண்டாட்டங்களால் தமிழக மக்களை மூச்சுத் திணற வைக்கிறது ஜெயா கும்பல்.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டத்தில் இப்படிப்பட்ட அரசியல் சுயநல உள்நோக்கங்கள் பல இருப்பினும், மத்திய அரசும், காங்கிரசும் கடைப்பிடிக்கும் நயவஞ்சனை, ஓரவஞ்சனை, சந்தர்ப்பவாத அரசியல் ஆகியவைதான் காவிரி நீர் பிரச்சினை நியாயமாகத் தீர்க்கப்படாமல் மீண்டும் மீண்டும் நெருக்கடியைத் தோற்றுவிக்கின்றது என்பதைக் காணத் தவறக்கூடாது. 1924-இல் 50 ஆண்டுகளுக்குப் போடப்பட்ட ''காவிரிநதி நீர் பங்கீடு ஒப்பந்த''த்தை மீண்டும் புதுப்பிக்க 1974-இல் இருந்து மேற்கொண்ட் பேச்சு வார்த்தைகள் தோல்வி கண்டபோது, நடுவர் மன்றத்துக்குப் பிரச்சினையை விட மறுத்து வந்தது, மத்திய காங்கிரசு அரசு; இதற்கிடையே ஒப்பந்தத்துக்கு விரோதமாக அணைகள் கட்டவும், பாசனப் பரப்பளவைப் பெருக்கிக் கொள்ளவும் கர்நாடகா அரசை அனுமதித்தது. காவிரியில் நீர் வரத்து குறைந்து நின்றுபோய் தஞ்சை, பஞ்சபூமியாகி தமிழக விவசாயிகள் பலமுறை போராடி உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு நடுவர் மன்றம் அமைக்கும் தீர்ப்புப் பெற்றனர். ஜனதா - தேசிய முன்னணி ஆட்சியில்தான் நடுவர் மன்றம் போடப்பட்டு, தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி. நீர் வழங்கும்படி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பும் வந்தது. கர்நாடக அரசு அத்தீர்ப்பை அமுல்படுத்த மறுத்ததோடு அங்கு வாழும் தமிழர்கள் மீது கொலை, கொள்ளை, கற்பழிப்புத் தாக்குதல்கள் நடத்தி ஆயிரக்கணக்கானோரை அகதிகளாக விரட்டியது. அதோடு அரசியல் சட்டத்துக்கு விரோதமாக மாநில நதி நீர் வளங்களின் மீது ஏகபோக உரிமைப் பிரகடனம் செய்தது; அப்போதும் தலையிட்டு இடைக்காலத் தீர்ப்பை அமுலாக்கும்படி கர்நாடக அரசை நிர்பந்திக்க மறுத்து,உச்ச நீதிமன்றத்துக்கு பிரச்சினையைத் தள்ளிவிட்டு தட்டிக் கழித்தது, மத்திய காங்கிரசு அரசு. அங்கும் தமிழகத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தும் அதை அமுலாக்க மறுத்து சண்டித்தனம் செய்கிறது, கர்நாடக அரசு. கடந்த இரண்டாண்டு நல்ல பருவமழைக்குப் பிறகும், இப்போது காவிரியில் நீர்வரத்து குறைந்து மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட்ட மத்திய ஆளும் காங்கிரசு, காவிரிநதி நீர் கட்டுப்பாட்டுக் குழு அமைத்து தமிழ்நாட்டுக்கு உரிய அளவு நீர் வழங்க நடவடிக்கை எடுக்கத் தவறும் அதேசமயம் மாநில காங்கிரசு காவிரிப் பிரச்சினைக்குத் தானே முன் கையெடுத்துப் போராடுவதாக நாடகமாடியது. போதிய அளவு நீர் வரத்து இருக்கும் போதே 205 டி.எம்.சி. நீர் வழங்கும்படியான இடைக்காலத் தீர்ப்பை ஏற்க மறுக்கும் கர்நாடக அரசு, இப்போது அங்கு மழையின்றி வறட்சி நிலவுவதாகவும், இருந்தும் தமிழ்நாட்டுக்கு உரிய அளவு நீர் விட்டிருப்பதாகவும் புளுகுகிறது. இது மேலும் நெருக்கடியை முற்றச் செய்தது. இந்நிலையில் ஜெயலலிதா காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டார். இதனால் ஏற்பட்ட நெருக்கடிக்குத் தீர்வுகாண காவிரி நீர் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புக் கொண்ட போதும், அதை ஏற்க மறுக்கும் கர்நாடக அரசுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாது மீண்டும் தட்டிக் கழித்துக் காலங்கடத்துகிறது மத்திய அரசு. ஆகவே ஜெயாவின் அரசியல் உள்நோக்கங்களைப் புரிந்து கொள்ளும் அதேசமயம், வாழப்பாடி - மூப்பனார் கும்பலின் பித்தலாட்டங்களையும், மத்திய காங்கிரசு அரசின் நயவஞ்சகத்தையும் எதிர்த்துப் போராடுவதுதான் தமிழர்களின் இன்றைய கடமையாக உள்ளது. ●

படிப்பகம்

www.padippakam.com

# செய்திப் பதிவுகள்



அரசியல் பகடைகள் ுல்ல; அரசியல் த்திரதாரிகளாக ன்கு மட சங்கர ஆச்சாரிகள்.

## மட சங்கராச்சாரிகள் மாநாடு

கடந்த ஜூன் 27-ந் தேதியன்று சிருங்கேரியில் கூடிய துவாரகா, பூரி, சிருங்கேரி, காஞ்சி — ஆகிய 4 மட சங்கராச்சாரிகள் அயோத்தி பிரச்சினைக்கு புதிய இந்துவெறித் தீர்வை முன்வைத்துள்ளனர். அயோத்தியில் அரசு கையகப்படுத்திய பகுதியை மதத் தலைவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்; இதில் அரசியல் கட்சிகள் தலையிடக்கூடாது என்று அவர்கள் கோரியுள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ்.; விசுவ இந்து பரிஷத், பாரதீய ஜனதா முதலான இந்துவெறி அமைப்புகளுக்குப் போட்டியாக, தன்னை இந்துத்துவ பிரதிநிதியாகக் காட்டிக் கொள்ளும் நோக்கத்தோடு, காங்கிரசின் மறைமுக ஏற்பாட்டின்படியே இக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. நான்கு மட சங்கராச்சாரிகளின் முடிவை காங்கிரசுக் கட்சி ஆதரித்துப் பிரச்சாரம் செய்வதிலிருந்தே அதன் உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

மசூதி இடிக்கப்பட்ட இடத்திலேயே ராமன் கோயில் கட்டவேண்டும் என்கிற இந்துவெறியர்களின் கோரிக்கையையே காங்கிரசும் சங்கராச்சாரிகள் மூலம் வலியுறுத்தியுள்ளது. ஆர்.எஸ்.எஸ்.; விசுவ இந்து பரிஷத்துக்குப் பின்னாலுள்ள சாமியார்கள் மட்டுமின்றி, அதற்கு வெளியிலுள்ள பாரம்பரிய இந்து மதத் தலைவர்கள்கூட அயோத்தியில் ராமர் கோயில் கட்ட விரும்புகிறார்கள் என்று இந்துவெறிக் காட்டுமிராண்டித்தனத்தை காங்கிரசு இதன் மூலம் நியாயப்படுத்துகிறது. மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் கட்டுவதையே பெரும்பான்மை இந்துமதத் தலைவர்கள் விரும்புவதாகக் காட்டி, முஸ்லீம்கள் இதை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நிர்பந்திக்கவும் முயற்சிக்கிறது.

வடநாட்டு இந்துவெறி சாமியார்கள், மகந்துகளைப் பிளவுபடுத்தி, காங்கிரசு ஆதரவு சாமியார்களின் கூட்டணி கட்ட, சந்திரசாமியைக் கொண்டு தடபுடலாக சோமயாகம் நடத்தி ஆதாயமடைய ஏற்கனவே காங்கிரசு முயற்சித்தது. இப்போது நான்கு மட சங்கராச்சாரிகளைக் கொண்டு இந்து வெறியர்களை தன்பக்கம் திரட்ட முயற்சிக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.; பாரதீய ஜனதாவுக்குப் போட்டியாக, காங்கிரசே புதியதொரு இந்து முன்னணியாக மாறி, இந்து வெறியர்களின் நோக்கத்தை நிறைவேற்றக் கிளம்பியுள்ளதையே இவை நிரூபிக்கின்றன.

## காங்கிரசுத் துரோகம் நாடு மறுகாலனியாகும்

கடந்த ஜூன் 24-ந் தேதியன்று கூடிய அன்னிய முதலீட்டுக்கான மந்திரிசபைக் கமிட்டி, ஒரே நாளில் கணக்கற்ற அன்னிய நிறுவனங்களின் கட்டுப்பாடற்ற கொள்ளைக்கு கதவை அகலத் திறந்து விட்டுள்ளது.

○ பிரான்சின் பியூஜெட் நிறுவனம் இந்தியாவின் பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து ஆண்டுக்கு 60,000 கார்களை உற்பத்தி செய்து, அவற்றை இறக்குமதி செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

○ 17 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து விரட்டப்பட்ட கோகோ-கோலா குளிர்பான நிறுவனம் நேரடியாக முழு உரிமையுடன் இந்தியாவில் குளிர்பான உற்பத்தி செய்து கொள்ள அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

○ பெப்சி குளிர்பான நிறுவனம் தனது அன்னிய முதலீட்டுப் பங்கை 51% ஆக உயர்த்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஏற்றுமதி தொடர்பாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

○ பிரிட்டனின் யுனெடெட் டிஸ்டிலரீஸ் எனும் சாராய நிறுவனம் இந்தியாவின் யூ.பி. நிறுவனத்தோடு கூட்டுச் சேர்ந்து, ஆண்டுக்கு 30,000 பெட்டிகள் அளவுக்கு உயர்ரக விஸ்கி தயாரிக்கவும் அவற்றை இறக்குமதி செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

○ மார்கன் ஸ்டான்லி, ஜீ கேபிடல் நிறுவனங்கள் அடுத்த இரு ஆண்டுகளில் ஏறத்தாழ 100 கோடி டாலர் அளவுக்கு இந்தியாவில் முதலீடு செய்ய தாராள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

○ நிப்பான் டென்ரோ எனும் ஜப்பானிய நிறுவனம் இந்தியாவில் 100 சதவீத அன்னிய மூலதனத்துடன் எஃகு ஆலை நிறுவிக் கொள்ளவும், உற்பத்தியானவற்றை முழுமையாக இறக்குமதி செய்து கொள்ளவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

○ இதேபோல சீ கிராம் எனும் நிறுவனம் 100 சதவீத அன்னிய மூலதனத்துடன் எரிசாராயம், பழச்சாறுகளைத் தயாரித்து முழுமையாக இறக்குமதி செய்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

காங்கிரசு கயவாளிகளின் புதிய பொருளாதாரக் கொள்கை, நாட்டை அன்னிய ஏகாதிபத்தியங்களுக்குத் தாரைவார்க்கத்தான் என்பதை இவை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

## விவசாயப் போராளிகளுக்குத் தூக்கு தண்டனை

நிலப்பிரபுத்துவ சுரண்டலும், அடக்குமுறையும் நிலவும் பீகாரில், வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்ட 10 கூலி விவசாயிகளுக்கு துக்குதண்டனை அளிக்குமாறு அண்மையில் கோர்ட்டுகள் தீர்ப்பளித்துள்ளன. கொடூரமான அடக்குமுறை, நிலப்பிரபுத்துவ குண்டர்களின் கும்பல் கற்பழிப்பு, குடிசைகள் எரிப்பு முதலான அட்டூழியங்களுக்கு எதிராக 1987 மே மாதத்தில் தால்சாக் - பாகோரா பகுதியிலுள்ள கூலி விவசாயிகள், நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினர். ஆயிரக்கணக்கில் கிளர்ந்தெழுந்த விவசாயிகள் 7 நிலப்பிரபுக்களின் குடும்பங்களை அழித்தொழித்தனர். இதன் தொடர்ச்சியாக 10 விவசாயிகள் கைது செய்யப்பட்டு, ஆறாண்டுகளுக்குப் பிறகு இப்போது அவர்களைத் தூக்கிலிடுமாறு அவுரங்காபாத், சிவாண் செசன்ஸ் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. மேல் கோர்ட்டுகளும் இத்தீர்ப்பை உறுதிப்படுத்தியுள்ளன. எந்தவொரு விவசாயப் போராளிக்கும் ஆயுள் தண்டனை அளிக்கக்கூட அவை முன்வரவில்லை.

இந்தியக் குற்றவியல் சட்டங்கள் தூக்கு தண்டனையை கடைசி எல்லையாக மட்டுமே பயன்படுத்தக் கோருகிறது. உச்சநீதி மன்றமோ, மிக அரிதான வழக்குகளில் மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com

தூக்கு தண்டனை அளிப்பதை மரபாகப் பின்பற்றக் கோருகிறது. இருப்பினும் பீகார் நீதிமன்றங்கள், நிலப்பிரபுகளுக்கு விசுவாசமாக ஊழியம் செய்யும் வகையில் கூலி விவசாயிகளுக்கு தூக்கு தண்டனை விதித்துள்ளது.

''தண்டனை விதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளார்களே தவிர, இவர்கள்தான் அழித்தொழிப்பில் ஈடுபட்டார்கள் என்று வழக்கில் நிரூபிக்கப்படவில்லை; மேலும் இவை தனிப்பட்ட விரோதத்தில் நடந்த தாக்குதல்கள் அல்ல; ஒரு வர்க்க எழுச்சியின் போது நடந்தவையாகும். சமூக, பொருளாதார சூழ்நிலைகளை வைத்துப் பார்க்காமல், வெறுமனே கிரிமினல் குற்றமாகக் கருதி தூக்கு தண்டனை அளிப்பது மனித உரிமைக்கே எதிரானது'' என்று மக்கள் ஜனநாயக உரிமைக் கழகங்கள் இத்தீர்ப்பைக் கண்டித்துள்ளன. இந்த வஞ்சகத் தீர்ப்பை எதிர்த்து மாவோயிஸ்டு கம்யூனிஸ்ட் மையம் எனும் நக்சல்பாரி புரட்சியாளர் குழுவினர் பாட்னாவில் ஊர்வலம் நடத்த முயன்றபோது, போலீசார் அதைத் தடுத்து முன்னணியாளர்களைக் கைது செய்துள்ளனர்.

சாதி அடிப்படையில், சட்டவிரோதமாக குண்டர்படை கட்டிக்கொண்டு கூலி விவசாயிகளைத் தாக்கி அட்டூழியம் புரிந்துவரும் நிலப்பிரபுக்களுக்குச் சுதந்திரம்; இதற்கெதிராகப் போராடிவரும் விவசாயப் போராளிகளுக்கு தூக்குத் தண்டனை. இதுதான் இந்தியாவின் 'ஜனநாயக' நீதி!

## ஊழல்மயமானது முதலாளித்துவம்

பங்குச் சந்தை தரகர் அர்ஷத் மேத்தாவிடமிருந்து பிரதமர் ராவ், ஒரு கோடி ரூபாய் 'நன்கொடை' பெற்ற விவகாரத்தைப் போலவே, பிரிட்டனில் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவுக்கு அசில் நாதிர் என்ற ஆசிய வர்த்தகரிடமிருந்து 'நன்கொடை' பெற்ற விவகாரம் அந்நாட்டு அரசியலில் சூடேறிய பிரச்சினையாகியுள்ளது. கடந்த தேர்தலின் போதும், அதற்குப் பின்னரும் பிரிட்டனில் வாழும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த தொழிலதிபர்களும் தரகர்களும் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் அளவுக்கு ஆளும் கட்சிக்கு 'நன்கொடை' அளித்துள்ளனர். போபர்ஸ் பீரங்கி ஊழலில் சிக்கிய இந்தியாவைச் சேர்ந்த இந்துஜா என்ற தரகர் மட்டும் 10 கோடி ரூபாய் 'நன்கொடை' கொடுத்துள்ளார்.

இத்தகைய லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவதற்கு வரம்பு விதிக்க வேண்டுமென முதலாளித்துவ அறிஞர்கள் கோரி வருகின்றனர். பிரிட்டன் மட்டுமல்ல; உலகெங்கும் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் லஞ்ச ஊழலும் கையூட்டும் சர்வ வியாபகமாகிவிட்டது.

ஜெர்மனியில் 4 முக்கிய அரசியல் கட்சிகள் ஆண்டுக்கு சராசரியாக 500 கோடி ரூபாய் அளவுக்கு முதலாளிகளிடமிருந்து நன்கொடை பெறுகின்றன. 4 லட்ச ரூபாய்க்கு மேலாக ஒரு தனிநபர் 'நன்கொடை' அளித்திருந்தால் அது பற்றிய விபரங்களை அரசியல் கட்சிகள் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று சட்டமிருந்தாலும் எந்தக் கட்சியும் அதை மதிப்பதில்லை.

ஜெர்மானிய வங்கிகள், அமெரிக்க ராணுவத் தளவாட உற்பத்தியாளர்கள், ஜப்பானிய மின்னணு தொழிலதிபர்கள், ஐரோப்பிய கட்டுமானத் தொழில் முதலாளிகள், இவை தவிர ரகசிய உலகப் பேர்வழிகள் அளிக்கும் தாராள நன்கொடைகளால் ஏகாதிபத்திய நாடுகளில் லஞ்சமும் ஊழலும் புழுத்து நாறுகிறது. அதைத் தொடர்ந்து பெரும்பாலான நாடுகளில், அரசியல் கட்சிகள் தமது ஆண்டு வரவு - செலவு கணக்கை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றும், குறிப்பிட்ட தொகைக்கு மேலாக நன்கொடை அளித்தவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும் என்றும் சட்டம் கொண்டு வரப்பட்டது. சில நாடுகளில் தேர்தலின் போது கட்சிகளுக்கு அரசே மானியம் அளிக்கவும் முடிவாகியுள்ளது. இருப்பினும் இச்சட்டங்களை செல்லாக் காசாக்கியும், சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டும் முதலாளித்துவ கட்சிகள் கோடி கோடியாய் லஞ்ச ஊழலில் மூழ்கித் திளைக்கின்றன.

இந்தியா மட்டுமின்றி, உலகெங்குமுள்ள முதலாளித்துவ அரசியல் கட்சிகள் அனைத்தும் பெருமுதலாளிகளின் கோட்டுப் பைக்குள்தான் இருக்கின்றன. அழுகி நாறும் இத்தகைய முதலாளித்துவ ஜனநாயகத்தைத்தான் உன்னதமானது என்று ஏகாதிபத்தியவாதிகள் உச்சிமுகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## நேபாள மக்களின் போர்க்கோலம்

நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பண்டாரியும், தலைமைக்குழு உறுப்பினர் அஷ்ரித்தும் கடந்த மே 16 அன்று ''ஜீப்''பில் சென்றபோது ஏற்பட்ட விபத்தில் மாண்டனர். வாகன ஓட்டி மட்டும் சிறுகாயங்களுடன் தப்பி, இந்திய அரசு வாகனமொன்றில் வந்து போலீசுக்குத் தகவல் கொடுத்தார். இந்த விபத்து நடந்த முறையும், வாகன ஓட்டி தப்பிவந்த முறையும் சந்தேகத்தை ஏற்படுத்துவதால் நீதி விசாரணை நடத்துமாறு கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரியதை பிரதமர் கொய்ரலா ஏற்க மறுத்துவிட்டார்.



நேபாளத்தில்
மீண்டும்
அரசியல்
நெருக்கடி.
ஜனநாயகத்
நிலைநாட்டும்
வரை
ஓயமாட்டோம்
என்று
இளைஞர்கள்,
மாணவர்கள்.

இதைத் தொடர்ந்து பகிரங்க விசாரணை நடத்தக் கோரியும், இந்திய உளவுத் துறையுடன் சேர்ந்து ஆளும் நேபாள காங்கிரசுக் கட்சி நடத்தி சதியே இக் கொலைகள் என்று குற்றம் சாட்டியும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகின்றன. பெருகிவரும் வேலையின்மை, பணவீக்கம், விலையேற்றம் காரணமாக கொய்ராலா அரசு மீது வெறுப்படைந்துள்ள மக்கள், இப்போராட்டங்களில் பெருந்திரளாகப் பங்கேற்று அவற்றை அரசியல் ஆர்ப்பாட்டமாக உயர்த்தி வருகிறார்கள். கடந்த ஜூலை 4-ம் தேதியன்று நடந்த நாடு தழுவிய கதவடைப்பு — வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது போலீசார் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

மன்னராட்சிக்கு எதிராக நேபாளி மக்கள் நடத்திய போராட்டத்தின் பலன்களைச் சிதைக்கும் வகையில், கொய்ராலா அரசு, மன்னரது விசுவாசிகளையே பஞ்சாயத்து அமைப்புகளின் அதிகாரத்தில் நியமித்துள்ளது. நீர் மின் திட்டம், வர்த்தகம் முதலானவற்றில் இந்திய மேலாதிக்கத்தை ஏற்று நாட்டை விற்கும் துரோகக் கும்பலாகச் செயல்படுகிறது. இவற்றைக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வருவதால் ஆளும் கொய்ரலா அரசு மக்களிடமிருந்து மேலும் தனிமைப்பட்டுப் போயுள்ளது. இதோடு ஆளும் நேபாள காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே கொய்ராலா கோஷ்டி, பட்டராய் கோஷ்டி, கட்சித் தலைவர் கணேஷ் மான்சிங் கோஷ்டிகளுக்கிடையே நடக்கும் நாய்ச்சண்டையால் ஆளும் கட்சிக்கு இருந்த செல்வாக்கும் அடியோடு போய்விட்டது.

படிப்பகம்

www.padippakam.com

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எதிர்த்தரப்பு அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்வதென்பது எல்லா பிற்போக்கு ஆட்சியாளர்களும் கடைபிடிக்கும் கடைசி உத்தி. மூண்டெழும் மக்கள் போராட்டங்களால் நேபாளத்தில் காங்கிரசு கட்சிக்கு இதுவே கடைசி ஆட்சியாக இருக்கப் போவதும் உறுதியாகிவிட்டது.

# தென்னாப்பிரிக்காவில் இரத்த ஆறு

தென்னாப்பிரிக்காவில் கறுப்பின மக்களிடையே தொடரும் மோதலின் விளைவாக இம்மாத முதல்வாரத்தில் மட்டும் 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 400-க்கும் மேலானோர் படுகாயமடைந்துள்ளனர்.

கறுப்பினப் போராளி மாண்டேலா தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக, அதிபர் டி கிளார்க் தலைமையிலான வெள்ளை இனவெறி சிறுபான்மை அரசு, கறுப்பின மக்களுக்கு ஜனநாயக உரிமையளிக்கவும் இதனடிப்படையில் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கவும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. இதை ஏற்க மறுக்கும் வெள்ளை இனவெறியர்கள், கறுப்பினத்தவரிடையே பிளவையும் மோதலையும் ஏற்படுத்தி குளிர்காயும் சதித்திட்டத்தோடு, கறுப்பினத்திலேயே துரோகி புத்தலேசி என்பவன் தலைமையில் இங்கதா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் ஒரு கூலிப் படையைக் கட்டி நிதியும் ஆயுத உதவியும் அளித்து தூண்டிவிட்டுள்ளனர். இக்கும்பல் கறுப்பின மக்களிடையே மோதலை வளர்த்து போராட்டத்தை சீர்குலைத்து வருவதோடு, கடந்த எட்டாண்டுகளில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர்கள், முன்னணியாளர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்துள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புதிய அரசியல் சட்டப்படி தேர்தல் நடத்தும் முயற்சியை தடுக்கும் நோக்கத்தோடு வெள்ளை இனவெறியர்களின் தூண்டுதலால் இங்கதா கும்பல் இப்போது கொலை வெறி பிடித்து அட்டூழியம் புரிந்து வருகிறது. தென்னாப்பிரிக்க அரசுக்கும் கறுப்பினத் தலைவர்களுக்குமிடையே நடக்கும் பேச்சுவார்த்தையைத் தடுக்கும் நோக்கத்தோடு கடந்த ஏப்ரல் மாதத்தில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான கிறிஸ் ஹனி சுட்டுக் கொல்லப்பட்டார். அதே நோக்கத்தோடு இப்போது தொடரும் மோதல்களினால் தென்னாப்பிரிக்காவில் மீண்டும் இரத்த ஆறு ஓடுகிறது.



நிறவெறிக் ாலைகளுக்கு எதிராக சிறுவர்கள் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

ஏகாதிபத்தியவாதிகளும், வெள்ளை இனவெறியர்களும் ஒருபோதும் ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப மாட்டார்கள்; அடிமைப்பட்ட மக்கள் போராடிப் பெற்ற அற்ப உரிமைகளைக்கூட நசுக்குவதில்தான் அவர்கள் குறியாய் இருக்கிறார்கள் என்பதை தென்னாப்பிரிக்க நிகழ்ச்சிகள் மீண்டும் உலகுக்கு எச்சரிக்கின்றன.

# ஏவுகணை தொழில்நுட்பம் ரஷ்யாவுக்கு அமெரிக்க தடை இந்திய அரசின் கோழைத்தனம்

போர் வெறியன் புஷ் ஆட்சியின்போது, ரஷ்யாவுடனான ராக்கெட் ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு இந்தியாவை மிரட்டிய அமெரிக்கா, இப்போது 'ஜனநாயகவாதி' கிளின்டன் ஆட்சியிலும் அதே மிரட்டலைத் தொடுத்துள்ளது. அமெரிக்க நிர்ப்பந்தத்தின் விளைவாக, ருஷ்யப் பிரதமர் தனது அமெரிக்கப் பயணத்தை கடைசி நேரத்தில் ரத்து செய்ததும், இந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிடுமோ என்ற பீதியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் யு.ஆர்.ராவ் ரஷ்யாவுக்குப் பறந்தார். இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே கடந்த ஆண்டில் 750 கோடி ரூபாய்க்கான ஏவுகணை ஒப்பந்தம் உருவானது. இதன்படி ரஷ்யா, மூன்று கிரையோஜெனிக் ராக்கெட் என்ஜின்களையும், தொழில் நுட்பத்தையும் அடுத்த இரு ஆண்டுகளில் இந்தியாவுக்கு அளிக்கும். இந்த ஒப்பந்தம், ஏவுகணைத் தொழில் நுட்ப கட்டுப்பாட்டு மையத்தின் (எம்.சி.டி.ஆர்) விதிகளுக்கு முரணானது என்று கூறி அமெரிக்கா எதிர்த்தது. ஒப்பந்தம் தொடர்ந்தால் இந்திய - ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களின் மீது தடை விதிக்கப்படும் என்று மிரட்டியது.

ஏறத்தாழ ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் அதே வகையில் இப்போது அமெரிக்கா மிரட்டுகிறது. அமெரிக்காவிடமிருந்து ஏவுகணைத் தொழில் நுட்பத்தை இந்தியா வாங்காததால், போர்த்தளவாட உற்பத்திப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது என்ற பெயரில் இப்படி நிர்ப்பந்தங்களைக் கொடுத்து மேலாதிக்கம் செய்ய அமெரிக்கா துடிக்கிறது. இதை எதிர்க்கத் துணிவின்றி, ஏவுகணை தொழில் நுட்பத்தை அமைதிப் பணிக்கே பயன்படுத்துவோம்; அனைத்து தரப்பினரையும் திருப்தி செய்யும் வகையில் விரைவில் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம் என்று இந்தியா அறிவித்து கெஞ்சிப் பார்த்தது.

மறுபுறம் பொருளாதாரரீதியில் ரஷ்யா பின்னடைந்து இருப்பதால், அதை சாதகமாக்கிக் கொண்டு அமெரிக்கா நிர்ப்பந்தங்களைக் கொடுத்து வருகிறது. இந்தியாவுடன் போட்ட கிரையோஜெனிக் ஒப்பந்தத்தை ரத்து செய்யாவிடில் வாக்களித்தபடி ரஷ்யாவுக்கு பொருளாதார உதவிகளைச் செய்ய மாட்டோம் என்று அண்மையில் ஜப்பானில் கூடிய ஏழு ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டத்தின்போது அமெரிக்கா மறைமுகமாக மிரட்டியது. இதன் விளைவாக ரஷ்யா அமெரிக்காவின் அடாவடித்தனத்துக்கு அடிபணிந்து, இந்தியாவுடனான ராக்கெட் ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டது.

ராக்கெட் தொழில்நுட்பத்தைப் பெற்று தெற்காசியாவில் ராணுவரீதியில் இந்தியா வலுவான நாடாகிவிடும் என்று குற்றம் சாட்டும் அமெரிக்கா, அதே சமயம் மேற்காசியாவில் ஏவுகணைகளைக் குவித்து அச்சுறுத்தும் இஸ்ரேலை மட்டும் கண்டுகொள்வதில்லை. அதேபோல பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்கப் போவதாக பீதியூட்டி வந்த அமெரிக்கா, இப்போது எந்த நடவடிக்கையுமின்றி மௌனம் சாதிக்கிறது. ஆயுதப் பரவலைத் தடுப்பது என்ற பெயரில் அமெரிக்கா நடத்தும் இரட்டை வேடத்துக்கு இது இன்னுமொரு சான்று.

அமெரிக்காவின் மிரட்டலால் ஒப்பந்தம் ரத்தான பிறகும்கூட, வெளிப்படையாக அமெரிக்காவைக் கண்டிக்க இந்தியா முன்வர வில்லை. அமெரிக்க மாமாவின் கோபத்துக்கு ஆளாகாத வகையில் வேதனையும் வருத்தமும் அடைவதாகப் புலம்புகிறது. இந்திய விஞ்ஞானிகளைக் கொண்டு சுயசார்புடன் ஏவுகணைத் தொழில்நுட்பத்தை வளர்க்கப் போவதாக வெற்றுச் சவடால் அடிக்கிறது. தொழில் நுட்ப பரிமாற்றத்துக்குக்கூட அமெரிக்காவிடம் கெஞ்சி அனுமதி பெற வேண்டிய நிலைக்கு நாட்டின் சுயாதிபத்திய உரிமையை அடகு வைத்துவிட்டு இந்திய ஆட்சியாளர்கள் வெட்கமின்றி நிற்பதை இது மீண்டும் நிரூபித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



# திருவரங்கம் தில்லுமுல்லுகள்

திருச்சி சிறீரங்கம் கோயிலைப் பற்றி தோண்ட தோண்ட பல உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அயோத்தி பாபர் மசூதி வளாகத்தில் புதைத்து வைத்து தோண்டி எடுத்த போலி வரலாற்று ஆதாரங்களைப் போலல்ல. மக்கள் மத்தியில் புதைந்து - புகைந்து கிடக்கிற, பார்ப்பனர்களால் புதைத்து மறைக்கப்பட்ட, பார்ப்பனர்களின் வாய்மொழியாகவே வருகிற உண்மை ஆதாரங்கள் இவை:

கருவறைக்குள் நுழைவதாக அறிவித்த போராளிகளை கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், அயோக்கியர்கள், வன்முறை - தீவிரவாத கும்பல் என்றெல்லாம் சித்தரித்த பார்ப்பனர்களின் யோக்கியதையைப் பாருங்கள்!

● ஆண்டாள் சன்னதியில் திருப்பாவையை விளக்கும் தஞ்சை ஓவிய வகையைச் சார்ந்த 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த காட்சிப் படங்கள் 32 இருந்தன. இதில் 30 படங்கள் ஹிட்லர் திருமலை என்பவனால் (அறங்காவலரோ, அர்ச்சகரோ அல்லாத வெளியாளான இவன் கோயில் விவகாரங்களில் தலையிட்டு கொள்ளையடித்து வருகிறான்) வெளிநாடுகளுக்கு கடத்தி பல இலட்சங்களுக்கு விற்கப்பட்டது. இரகசிய போலீசாரால் பிடிக்கப்பட்ட இவன் நீதிமன்றத்தில் நிர்வாகத்திடமிருந்து (அப்பொழுது E.O.-வாக இருந்தவர் ராதாகிருஷ்ணன் என்கிற ஊழல் பேர்வழி) பணம் பெற்றுதான் இதை செய்ததாக ஒத்துக் கொண்டுள்ளான்.

● வைர வியாபாரியான நாராயண செட்டி என்ற அறங்காவலர் ஒருமுறை ரங்கநாதர் நகையில் வைரம் ஒன்று குறைந்ததால் தனது சொந்த செலவில் தருவதாக கூறி போலி கல்லை கொடுத்து ஏமாற்றி அகப்பட்டு கொண்டார்.

● கோவில் நிலங்களை அறங்காவலர்கள் குத்தகை எடுக்கக்கூடாது என்ற விதியை மீறி உத்தம நம்பி என்ற அறங்காவலர் குத்தகை எடுத்துள்ளார். மேலும் இவரும் E.O. ராதாகிருஷ்ணனும், சாரதாஸ் துணிக்கடை உரிமையாளரும் கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்தை பளிங்கு கல்லால் புதுப்பித்து தந்தபொழுது முறைகேடாக தமது வீட்டிற்கும் பளிங்குகளை பதித்துக் கொண்டார்கள்.

● ரங்கநாதனுக்கு பூஜை மலர்கள் 'புனிதமாக' இருக்க வேண்டும் என்பதற்காக காவிரி கரையில் மதுரகவி ஆழ்வார் நந்தவனம் என்று தனி தோட்டம் உள்ளது. இதில் 10 ஏக்கரை ஹிட்லர் திருமலை மூலம் விற்க ரகசிய ஏற்பாடு நடக்கிறது.

● முன்னாள் எம்.எல்.ஏ. தீட்சதர், அருகிலுள்ள அகிலாண்டேஸ்வரி கோவில் நிலம் 3 ஏக்கரை முறைகேடாக வைத்துள்ளதை திருப்பி ஒப்படைக்குமாறு நீதிமன்றத்தில் தீர்ப்பாகியும் இன்னும் நிலம் அவரிடமே உள்ளது.'

● ஒரு வருடத்திற்கு முன்பு ஆண்டாள் சன்னதியில் பூஜைக்கான வெள்ளிப் பாத்திரங்கள் காணவில்லை. பிறகு கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது. காணாமல் போனது எப்படி? திருடியவர் யார்? அவருக்கு என்ன தண்டனை? இவை அனைத்தும் மறைக்கப்பட்டது. இது போன்ற பல திருட்டுக்கள் மறைக்கப்பட்டதை கூறி திருடியவன் பார்ப்பானாக அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்? சூத்திரனாக இருந்தால் சும்மா விட்டிருபப்பார்களா? என்று சிறீரங்கத்து மக்கள் கேள்வி எழுப்பினர்.

● பத்து வருடங்களுக்கு முன்பு வெங்கடாசலம் என்ற ஒரு ''ஆடிட்டர்'' கோவில் திருட்டுக்கள் பலவற்றைக் கண்டுபிடித்ததற்காக கடத்தி செல்லப்பட்டு சிங்கபெருமாள் கோவிலருகில் அடித்துக் கொல்லப்பட்டார். முன்னாள் அ.தி.மு.க. மந்திரி சௌந்தரராஜன் பெயரும் இதில் அடிபட்டது. இக்கொலை தற்கொலையென (பிரேத பரிசோதனையின்றி) கூறி எரித்து மறைத்துவிட்டார்கள், பார்ப்பனர்கள்.

● மே 1 கருவறை நுழைவுப் போராட்டத்தைக் கண்டித்து நடத்திய பார்ப்பனர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட சௌந்தரராஜன், பல நபர்களிடம் வசூல் செய்து சிறீரங்கம் பெருமாளுக்கு 108 தங்க புஷ்ப மாலை போட்டவர். இம்மாலை போட்ட கையோடு, நகை செய்ததில் பாக்கியுள்ளதாக கூறி அந்த மாலை நகைக்கடைக்காரரிடமே திரும்பி போனது. அது இன்றுவரை பெருமாள் கழுத்துக்கு வரவில்லை!

● பொதுவாக தற்போதுள்ள E.O. தனபால் பற்றி மக்களிடம் நல்ல கருத்துள்ளது. அவரைப் பற்றி மக்கள் சில தகவலை தந்தனர். சமச்சடங்கான 'தர்ப்பணம்' கோவில் உள்ளே நடத்தக்கூடாது. ஆனால் நல்ல வசூல் என்பதால் பார்ப்பனர்கள் கோயிலில் நடத்தி வந்ததை E.O. தனபால் தடுத்து நிறுத்தியுள்ளார். மே-1க்கு முன்பு கருவறை போராட்டத்தை முறியடிப்பதற்காக தேங்காய் உடைப்பு பிரார்த்தனை, ராமாயண - மகாபாரத சொற்பொழிவுகளை கோவில் உள்ளே நடத்த பார்ப்பனர்கள் அனுமதி கேட்டுள்ளனர். இந்து முன்னணி வெறியர்கள், கோவில் ஊழியர்போல் உள்ளேயிருக்க ஏதாவது துடைப்பது, கூட்டுவது போன்ற வேலைகள் தருமாறும் கேட்டுள்ளனர். E.O. தனபால் நடுநிலைமையோடு இவற்றுக்கு அனுமதி மறுத்துள்ளார். இதனால் பார்ப்பனர்கள் E.O. மீது ஆத்திரமாக இருப்பதோடு அவரை பலவகையில் மிரட்டுவதாகவும் ம.க.இ.க.வினரின் 'கையாளா' என்று சோதிப்பதாகவும் தெரியவருகிறது.

மேலும் சிறீரங்கத்து அக்ரஹாரத்தில் தண்ணீர் கேட்டு வாங்கி குடித்தால் செம்பில் தண்ணீர் தெளித்து எடுப்பது, கடைகளில் பார்ப்பனர்கள் காய்கறி, பழம், பூ வாங்கும்போது நம்மை தொட்டுவிடாமல் காசை வாங்குவது, கொடுப்பது, திரையரங்கம் போன்ற பொது இடங்களில் நமக்கு அருகே உட்கார விரும்பாதது, ஜீயர் ஆற்றுக்கு குளிக்கப் போகும்போது பிறரது நிழல்கூட அவர்மீது படக்கூடது என சங்கூதி நம்மை விலகச் சொல்வது போன்ற தீண்டாமை பாராட்டும் செயல்களை சிறீரங்கத்து மக்கள் மனக்கொதிப்போடு நம்மிடம் கூறினர். கோ.சத்தியசீலன், ரவி போன்ற பார்ப்பனர் அல்லாத சொற்பொழிவாளர்கள் ராமாயண - மகாபாரத சொற்பொழிவு நடத்தினால் பார்ப்பனர்கள் யாரும் அதில் கலந்து கொள்ளாததோடு பேச்சாளர்களுக்கு மிரட்டலும் விடப்படுகிறது. இவ்வளவு தூரம் தீண்டாமைப் பாராட்டும் பார்ப்பனர்கள், குறைவான பாரமான பல்லக்குகளை மட்டும் தாங்கள் தூக்கிக் கொண்டு, மிகப் பாரமானது என்பதால் யானை வாகனம், கருட வாகனம் முதலானவைகளை தூக்குவதற்கு 'டெண்டர்' விட்டு சூத்திரர்களை நியமிக்கிறார்கள். முஸ்லீம்கள் சிறீரங்கம் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் துலுக்க நாச்சியார் என்பவருக்கு தனிவழிபாடும், ரங்கநாதனுக்கு 'லுங்கி கட்டி ரொட்டி தரும்' சடங்கு ஒன்றும் முறையாக பார்ப்பனர்களால் நடத்தப்படுகிறது. முஸ்லீம்கள் இந்நாட்டைவிட்டு ஓடவேண்டுமென்றால் ரங்கநாதனுமல்லவா ஓட வேண்டும். முஸ்லீம்களோடு உறவுள்ளவர்கள் தேசத்துரோகிகள் என்றால் சிறீரங்கத்து கோவில் பார்ப்பான்களும் தேசத்துரோகிகள் இல்லையா?

எனவே, பார்ப்பன பராதீய ஜனதாவின் இந்து ஒற்றுமை எவ்வளவு போலியானது, முஸ்லீம் துவேசம் எவ்வளவு வஞ்சகமானது, பார்ப்பன முன்னணியின் கருவறை நுழைவுப் போராளிகள் பற்றிய பிரச்சாரமும் எவ்வளவு அபத்தமானது என்பவை சொல்லாமல் புரியக்கூடியது. இனி ஆர்.எஸ்.எஸ். கும்பல் அயோத்தி, மதுரா, காசி என்று வாய்திறந்தால் நாமும் சிறீரங்கம், சிதம்பரம், காஞ்சிபுரம் என வாய்திறப்போம்.

தகவல் தொகுப்பு: தாஸ்

படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க.வில் சலசலப்பு

## வாரிசு விவகாரம்: வை.கோ.வா? ஸ்டாலினா?

நீண்டகாலமாகவே புகைந்து கொண்டிருந்த தி.மு.க. உட்கட்சித்தகராறு கடந்த மாதம் பகிரங்கமாக வெடித்தது. அக்கட்சியினரையும் அதன் தலைமையையும் கலக்கிவிட்டது. சென்னை நகர குடிநீர் பஞ்சத்துக்குக் காரணமான ஜெயலலிதா ஆட்சியைக் கண்டித்து காங்கிரசார் நடத்திய கடையடைப்பு அளவுக்குக் கூட தி.மு.க.-வின் சாலைமறியல் வீச்சாக இல்லை. உட்கட்சி தகராறு காரணமாக தி.மு.க. ஊழியர்கள் உற்சாகமிழந்து இருப்பதையே இது காட்டுகிறது.

வேரும் விழுதும் இல்லாத தனிமரமாக இருந்தவர்தான் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன். ''இவர் என்ன கட்சி அணிகளின் ஆதரவோடு கட்சித்தேர்தலில் நின்று ஜெயித்து வந்த துணைப் பொதுச் செயலாளரா? நியமனம் செய்யப்பட்டவர்தானே'' என்று சில நாட்களுக்கு முன்பதான் கருணாநிதியால் உதாசீனமாகப் பேசப்பட்டவர். ஆனால் அவரையே பதவியில் இருந்தும் கட்சியில் இருந்தும் நீக்குவதற்கு தனது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான அரசியல் அனுபவத்தால் திரட்டிய தந்திரங்களைக் கருணாநிதி பிரயோகிக்க வேண்டியிருந்தது. ''கருவின் குற்றம்'' எனக் கவிதை எழுதிய நாஞ்சில் மனோகரன் ''என் பிறப்பைக் குறை கூறிவிட்டாரே!'' என்ற எடுத்துக் கூறி அன்பழகன் முன்பு கண்கலங்க வேண்டியிருந்தது.

என்றைக்கு இருந்தாலும் ஒரு நாள் பகிரங்கமாக வெடிக்கக் கூடியதுதான் புகைந்து கொண்டிருக்கும் தி.மு.க. உட்கட்சித் தகராறு; இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் இது இவ்வளவு சீக்கிரம், இந்தத் தருணத்தில் வெடிக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

எந்தநேரத்திலும் அடியோடு வீழ்ந்துவிடும், இன்னொரு தேர்தலை எதிர்கொள்ளும் நம்பிக்கை இழந்த கூடாரமாகவே ஜெலலிதாவின் கட்சியும் ஆட்சியும் உள்ளது. தமிழகத்தின் பெரும்பான்மை மக்கள் ஆதரவை இழந்து, வெறுப்புக்குள்ளாகி இருக்கிறது. அதற்கு முட்டுக் கொடுத்துவந்த காங்கிரசுடனான உறவும் முறிந்து, கட்சியைப் பிளக்கவும் ஆட்சியைக் கவிழ்க்கவும் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இப்போது தேர்தல் வைத்தாலும் தி.மு.க. வெற்றி பெறும், கருணாநிதி மீண்டும் முதல்வராவார் என்று இரண்டு ஆங்கில ஏடுகளும், எதிரியான சோ-வின் ''துக்ளக்'' கருத்துக்கணிப்புகளும் கூறுகின்றன. வெண்ணெய் திரண்டு வரும்போது யாராவது தாமே தாழியை உடைப்பார்களா? என்று தி.மு.க. பிரமுகர்களும் அணிகளும் குமுறுகிறார்கள்; அரசியல் பார்வையாளர்கள் வியக்கிறார்கள்.

கருணாநிதி பல வெற்றி-தோல்விகளைச் சந்தித்த பழுத்த அனுபவசாலி. ''இன்றைய வெற்றி - தோல்வி நமக்குப் பொருட்டல்ல. இந்தக் கழகம் ஒரு இலட்சிய அமைப்பு. இறுதி வெற்றியே கழகத்தின் இலட்சியம்'' என்று அடிக்கடி சொல்வார். அதுதான் முக்கியம்; வரும் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிப்பதுமட்டுமல்ல கருணாநிதியின் இலட்சியம். தனக்குப் பிறகு பலகோடி ரூபாய் சொத்துடைய கட்சியிலும், ஆட்சியிலும் தனது பரம்பரை வாரிசுகளின் தலைமை நிறுவப்படுவதை இப்போதே உத்திரவாதப் படுத்தவேண்டும் என்று அயராது பாடுபடுகிறார்.

எம்.ஜி.ஆர். சாவுக்குப் பிறகு அ.தி.மு.க. வில் நடந்ததைப் போல வாரிசுச் சண்டை நடக்கக் கூடாது என்று கருணாநிதி கவலையும் எச்சரிக்கையும் அடைகிறார். இந்திரா சாவுக்குப் பிறகு காங்கிரசில் நடந்ததைப் போல நெருடலின்றி, சுப காரியமாகத் தனது வாரிசுப் பட்டம் சூட்டப்பட வேண்டும் என்று தவிக்கிறார்.

காங்கிரசு, அ.தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே தலையாட்டிகளான ஆட்டு மந்தைகளை மட்டுமே கொண்டது தான். மேலும் எம்.ஜி.ஆர்., ஜெயா, இந்திராவைப் போல கருணாநிதி ஒரு பெருந்திரள் கவர்ச்சியை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. கட்சி சார்ந்த அணிகளிடையே கருணாநிதி ஏற்படுத்தியிருக்கும் உரைவீச்சுக் கவர்ச்சி, அவரது தலைமையை ஏற்றுக் கொள்ளும் அளவுக்குத்தான் உள்ளது. அது அவர் கைகாட்டும் வாரிசுகளின் தலைமையையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

பத்தாண்டுகளுக்கு மேலாக பதவியில் இல்லாத கட்சியைக் கட்டி வளர்த்ததற்காக, பதவியைப் பிடிக்கும் வாய்ப்பு வரும் நேரத்தில் உரிய பங்கு கேட்கும் கட்சிப் பிரமுகர்களின் முயற்சியைத் தடுத்திட முடியாது. கருணாநிதியிடம் உள்ள கவர்ச்சிகர அரசியல் பண்புகளை இன்னொரு தலைமையிடம் — வை.கோபாலசாமியிடம் காணும் பிரமுகர்களும் அணிகளும் அவரை முன்னிறுத்தித் தமக்கு உரிய பங்கைக் கேட்கின்றனர். கருணாநிதி வாழ்நாளிலேயே அவரது தலைமையையே எதிர்த்து அணி சேருவதும் கலகம் செய்வதும் அதிருப்தியாளர்கள் விரும்பாததுதான். ஆனால் கருணாநிதி தனது வாரிசு பரம்பரை உரிமையை உத்திரவாதப்படுத்திக் கொள்வதற்காக அடுத்தடுத்துச் செய்யும் களையெடுப்பு நடவடிக்கைதான் இப்போதே உட்கட்சித் தகராறு வெடிக்கச் செய்துவிட்டது.

''தி.மு.க.-வில் உட்கட்சித் தகராறோ, பிளவுக்கான வாய்ப்போ கிடையாது. எல்லாம் பத்திரிக்கைகளின் கட்டுக் கதைகள்; கற்பனைகள்; ஊகம் - வதந்திகள்தாம்'' என்று ஆரம்பத்தில் திடலடியாக மறுத்தார் கருணாநிதி.

பிறகு, ''மத்திய, மாநில உளவு அமைப்புகள் தி.மு.க.வைப் பிளவுபடுத்தும் சதிவேலைகளில் இறங்கியுள்ளது. கழகத்துக்குள் ஊடுருவி, ஐந்தாம் படைகளை உருவாக்க பணத்தை வாரி இறைக்கிறது. சமயம் வரும்போது ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவேன்'' என்ற வெளிக்காரணத்தைக் காட்டினார், கருணாநிதி.

இப்போது, ''மத்திய, மாநில உளவு அமைப்புகளின் சதிகளுக்குப் பலியான சில விஷமிகள், பெருந் தொகையைப் பெற்றுக் கொண்டு கழகத்துக்குள் பிளவு வேலைகளில் ஈடுபடுகிறார்கள். நான் பனங்காட்டு நரி; இந்த சல சலப்புக்கு அஞ்சமாட்டேன்'' என்று எச்சரிக்கும் அளவுக்கு உட்கட்சித் தகராறு முற்றியது.

திடீரென்று ஒரு நாள் நாஞ்சில் மனோகரன் நீக்கம் பற்றிய அறிவிப்பு வந்தபோது தி.மு.க. அணிகளும் ஆதரவாளர்களும் அதிர்ச்சிக்குள்ளாகினர். அறக்கட்டளை நியமனத்தில் நாஞ்சில் மனோகரனுக்கு பங்கு கிடைக்காததால், கட்சியின் மூன்று மூத்த மாவட்டச் செயலாளர்கள் தூண்டுதல் பேரில் ''கருவின் குற்றம்'' என்ற கவிதை எழுதி கருணாநிதியை அவமானப்படுத்தியதால் வந்த விளைவு என்று கூறப்படுகிறது. ஆனால் தி.மு.க. வின் பல கோடி சொத்துக்களைக் கட்டுப்படுத்தும் பதவித் தகராறு மட்டுமல்ல. கருணாநிதிக்கு பிறகு அவரது மகன் ஸ்டாலினா? வை.கோ.வா? யார் தி.மு.க. வுக்கு தலைமையேற்பது என்பதுதான் அடிப்படைக் காரணம்; இது இப்போது பகிரங்கமான உண்மையாகிவிட்டது.

''என் மகன் அரசியலில் நுழைவது தவறா? நேரு பரம்பரையில் அப்படி நடக்கவில்லையா? நடிகர் ராஜேந்தரின் மகன் சிலம்பரசன் நடிகனாக வில்லையா? அவரச நிலை ஆட்சியின் போது சிறை - சித்திரவதைக் குள்ளாக்கியதுதான் ஸ்டாலின் அரசியலுக்கு வரக் காரணமானது'' என்று கருணாநிதி விளக்கமளிக்கிறார்.

ஸ்டாலின் அரசியலில் நுழைவதையும், திறமையும் உழைப்பும் செலுத்தி தலைமைக்கு உயர்வதையும் யாரும் எதிர்க்கவில்லை. ஆனால் திடீரென்று இளைஞரணித் தலைவராகத் திணிக்கப்பட்டு,

**இப்போது ''கருவின் குற்றம்'' கவிதைக்காக தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்புட்ட மனோகரனுடன் அவரது கவிதை நூலை முன்பு வெளியிட்டு பாராட்டிய கருணாநிதி**





படிப்பகம்

கட்சி பொதுக் கூட்டம், மாநாடுகளில், ''கட்-அவுட்'' களில் கருணாநிதிக்கு அடுத்த இடமளித்து, பெரியார் - அண்ணா - கருணாநிதி வரிசையில் ஸ்டாலினையும் வைத்துத் துதிபாடும்படி கட்சியினர் நிர்பந்திக்கப்படுகின்றனர். அவரசநிலை ஆட்சிக் கொடுமையை அனுபவித்த எல்லா இளைஞர்களுக்கும் இப்படி வாய்ப்பளிக்கப்பட்டதா? இல்லையே!

இதுமட்டுமல்ல, ஸ்டாலின் தலைமைக்கு விசுவாசமாக இல்லாதவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள், ஸ்டாலினது எடுபிடிகளுடைய கோள்மூட்டுதலுக்கு இலக்கானவர்கள் பழி வாங்கப்பட்டனர். கட்சித் தேர்தல்களிலும், பொதுத் தேர்தல்களிலும் மந்திரி சபையிலும் ஸ்டாலின் விசுவாசிகளுக்கே இடமளிக்கப்பட்டது. ஸ்டாலினது தலைமைக்குப் போட்டியாளராக வளர்ந்து வருபவர் என்று கருதப்பட்ட வை.கோ. கட்சி அரங்கங்களில் தோன்றாத வாறு கடந்த சில ஆண்டுகளாகவே தடை செய்யப்பட்டார். புலிகளுடன் வை.கோ.-வுக்குள்ள நெருக்கம் அதற்கான காரணமாகக் காட்டப்பட்டது. ஆனால் இவையே கட்சிக்குள் வை.கோ. மீதான அனுதாபத்தையும் ஆதரவையும் அதிகமாக்கி வருகிறது.

தி.மு.க.-வில் வெடித்த உட்கட்சித் தகராறின் இந்தச் சுற்றில் கோபாலபுரம் குடும்பத்தினர் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், பழனிவேல்ராஜன், பொன்முடி போன்ற அடியும் முடியும் இல்லாத கோபாலபுரம் குடும்பத்து விசுவாசிகளை வைத்து மட்டும் கட்சி நடத்திவிட முடியாது. வீரபாண்டி ஆறுமுகம், பொன். முத்துராமலிங்கம், கோவை கண்ணப்பன், நெல்லை லட்சுமணன், செஞ்சி ராமச்சந்திரன் போன்ற வலுவான சுயபலமிக்க மாவட்டத் தலைமையை களையெடுக்கும் முயற்சி கழகத்தையே பலவீனப் படுத்தவே உதவும். பாசம் கண்களை மறைக்கிறதே தவிர, பழுத்த அரசியல் அனுபவசாலி கருணாநிதிக்கு இது தெரியவில்லை. தற்போது வெடித்த உட்கட்சித் தகராறே தி.மு.க. அணிகளிடையே விரக்தியையும் சோர்வையும் விதைத்துவிட்டது. அதோடு கட்டுக் கோப்பான கட்சி என்கிற பிரமை கருணாநிதியாலேயே தகர்க்கப்பட்டு விட்டது. பிழைப்புவாத, கவர்ச்சிவாத அடிப்படையை மட்டுமே வைத்துக் கொண்டு எத்தனை தலைமுறைக்கு அரசியல் நடத்த முடியும்?

வை.கோ. தலைமையிலான பிரிவும் கூட இதே அடிப்படைகளைத்தான் கொண்டிருக்கிறது; கூடவே உழைப்புக்குரிய மதிப்பளிக்கப்படாமல் காரணமின்றிப் பழிவாங்கப்படுகிறார்கள் என்கிற அனுதாபமும் இருக்கிறது. வேறு இலட்சியமோ சிந்தாந்தமோ கிடையாது. தமிழின உணர்வு, விடுதலை என்பது கூட பருண்மையான, தெளிவான, குறிப்பான திட்டமோ, நடைமுறையோ கொண்டதில்லை. வோட்டுக்கும் உரைவீச்சுக்குமான கருவிகளாகத்தான் உள்ளது. இப்படிப்பட்ட பிழைப்புவாத, கவர்ச்சிவாத அரசியலுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் தோள் கொடுப்பது என்பதை தி.மு.க. இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

● ஆர்.கே.

# கருவறையில் நுழைந்த போராளிகளுக்குப் பாராட்டு! திருச்சி மக்கள் பேராதரவு!

மே-24 அன்று திருவரங்கம் கருவறையில் நுழைந்ததற்காகக் கைது செய்யப்பட்டு பொய் வழக்கு தொடுக்கப்பட்ட 31 தோழர்களுக்கு பாராட்டு தெரிவிக்குமுகத்தான் ஜூன் -29 அன்று திருச்சி புத்தூர் 4 ரோடில் ம.க.இ.க. வின் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ரயில்வே தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் முருகானந்தம் தலைமை தாங்கினார். போராட்டத்திற்குத் தலைமை தாங்கி கருவறைக்குள் முதலில் கால்வைத்த ம.க.இ.க. திருச்சி செயலர் தோழர் முத்து, கோயிலுக்குள் இந்து முன்னணிப் பார்ப்பனக் காலிகள் நடத்திய வெறியாட்டத்தை விளக்கிப் பேசினார். அடுத்து பேசிய தஞ்சை ம.க.இ.க. செயலர் தோழர் காளியப்பன் வளர்ந்து வரும் பாரதிய ஜனதா எனும் பார்ப்பன பாசிச அபாயத்தை விளக்கிப் பேசினார்.

இறுதி நிகழ்ச்சியாக 'அசுரகானம்' கலை நிகழ்ச்சி நடைபெற்றது. கருவறை நுழைவு குறித்த பாடலும், சாமியாரவை அம்பலப்படுத்தும் பாடலும் வரிக்கு வரி மக்களின் கரவொலியைப் பெற்றன.

மாலை 7-30 க்குத் தொடங்கிய பொதுக்கூட்டம் இரவு 12.45 க்கு முடிவடைந்தது. விரிவான ஒலி, ஒளி ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வந்திருந்த சுமார் 2000 த்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும், பல்வேறு கட்சியினரும் துவக்க முதல் இறுதிவரை இம்மியளவும் அசையாமல், கலையாமல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்தனர். பாதுகாப்புக்கு வந்திருந்த காவல் துறையினர் பலரும் நன்கொடையளித்தனர்.




சிறீரங்கம் நகராட்சிப் பகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதால் திருச்சி நகரில் நடத்தப்பட்ட இக்கூட்டத்திற்கு சிறீரங்கம் பகுதியிலிருந்து அனைத்து கட்சியினரும் இளைஞர்களும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர். சிறீரங்கத்தில் கூட்டம் நடத்த ம.க.இ.க. விற்கு அனுமதி மறுத்த காவல்துறை இந்து முன்னணிக்கு அனுமதியளித்தது. கருவறை நுழைவைக் கண்டித்து ராம.கோபாலன் பேசிய இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 200 பேரும் பார்ப்பனர்களே என்பது குறிப்பிடத்தக்கது. ''மே -24 அன்று கோயிலுக்குள் நாய்கள் நுழைந்து விட்டன'' என்று பேசித் தனது பார்ப்பனத் திமிரை வெளிப்படுத்திய ராம கோபாலன் மற்றும் இந்து முன்னணிக் கும்பலை மக்கள் தாக்கிவிடுவார்களோ என்ற அச்சத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவுடன் ஆயுத போலீசு பாதுகாத்து நின்றது. 'அவாளை' மட்டுமல்ல, அரங்கநாதனையும் இனி ஆயுத போலீசுதான் 'காப்பாற்ற' முடியும். திருச்சி - புத்தூர் கூட்டமும் மக்களின் பேராதரவும் இதையே நிரூபித்தன.

சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தை வெற்றிக் கூட்டங்கள் சென்னையில் சைதை, சேத்துப்பட்டு, ஆவடி, மண்ணடி ஆகிய பகுதிகளிலும், தஞ்சையிலும் மக்களின் பெருத்த வரவேற்போடு நடந்தன. குடந்தை, மேட்டுப்பாளையம், பொன்னாகரம் ஆகிய ஊர்களில் பகுத்தறிவுள்ள பேரெண்ணிக்கையிலா மக்கள் கலந்து கொண்டதோடு, கேள்வி-பதில் நேரத்தில் குழப்பும் நோக்கத்தில் கேள்விகளை எழுப்பியவர்களோடு தாங்களே விவாதத்தில் ஈடுபட்டுத் தக்க பதிலடிகளும் கொடுத்தனர்.

வெற்றிக் கூட்டங்கள், மற்றும் விரிவான பிரச்சாரம் தொடர்ந்து நடைபெறுகின்றன. பார்ப்பனீய இந்துமத வெறிப் பாசிசத்துக்கெதிராக கருத்து ரீதியாக தமிழக மக்கள் ஓரணியாகத் திரள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி வருகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# நர்மதா: பேரழிவுத் திட்டம்

## மூன்று லட்சம் ஆதிவாசிகளை அகதிகளாக்கும் சுற்றுச்சூழலை நாசம் செய்யும்

மணிபெலி - மகாராஷ்டிராவின் துலே மாவட்டத்தில் நர்மதை ஆற்றின் கரையிலுள்ள சிறிய கிராமம். மே மாத இரவின் பால் நிலவில் நர்மதை ஆற்றில் அலைகள் வெள்ளியாய் மின்னிக் கொண்டிருந்தன. அந்த நள்ளிரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கடந்த மே 28-ந் தேதியன்று 800-க்கும் மேற்பட்ட போலீசார் அக்கிராமத்தை முற்றுகையிட்டனர். கிராமத்திலுள்ள மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். மறுநாள் காலையில் அவர்களது குடிசைகள் பிய்த்தெறியப்பட்டு, "புல்டோசரால்" இடித்துத் தள்ளப்பட்டன. இதை எதிர்த்து "புல்டோசர்" முன்னே அமர்ந்து மறியல் செய்யத் தொடங்கியதும் கிராம மக்களைப் போலீசு மிருகத்தனமாகத் தாக்கியது. போலீசார் அம்மக்களை நாயைப் போல அடித்து தரையிலே இழுத்துச் சென்று "வேன்"களில் ஏற்றிச் சென்றனர். இந்த அட்டூழியத்தைப் படம் பிடித்த ஒரு பத்திரிகை நிருபரின் "காமிரா"வை உடைத்து நொறுக்கிய போலீசார், அவரையும் பிடித்து இழுத்துச் சென்றனர். மணிபெலியைப் போலவே சுற்றிலுமுள்ள 12 கிராமங்களிலும் இதே போன்ற அட்டூழியங்கள் நடந்தன.

மணிபெலி - நர்மதா அணைக்கட்டு திட்டத்தினால் அடுத்துவரும் மழைக்காலத்தில் மூழ்கப் போகும் முதல் கிராமம் இதுதான். இத்திட்டத்தால் ஏற்படும் கடுமையான பாதிப்புகளின் விளைவாக, பாதிக்கப்படும் இக்கிராம மக்கள் "நர்மதா பச்சோவ் அந்தோலன்" (நர்மதையைக் காக்கும் போராட்ட இயக்கம்) எனும் அமைப்பின் தலைமையில் போராடி வருகின்றனர். இவ்வியக்கத்தின் போராட்டக் களமாக உள்ள மணிபெலி கிராமம், அணைக்கட்டு பகுதியிலிருந்து 5.6 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. உரிய நிவாரண ஏற்பாடுகளைச் செய்யாமல் கட்டாயமாகத் தங்களை வெளியேற்றுவதை எதிர்த்து மணிபெலி கிராம மக்களும், நர்மதா போராட்ட இயக்கத்தினரும் "சமர்ப்பண்" எனும் நீரில் மூழ்கி மாளும் போராட்டத்தை அறிவித்தனர். இதனால் ஆத்திரமடைந்த மகாராஷ்டிர அரசு, அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றி கைது செய்து, கிராமத்தையே தரைமட்டமாக்கியுள்ளது. போராட்ட இயக்கத்தினரின் தற்கொலை முயற்சியைத் தடுக்கவே இந்நடவடிக்கையை மேற்கொண்டதாக அது நியாயம் கற்பிக்கிறது.

நர்மதை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் சர்தார் சரோவர் அணையில் நீர்மட்டம் உயர உயர, மணிபெலியைப் போலவே மகாராஷ்டிராவில் 33 கிராமங்களும், குஜராத்தில் 19 கிராமங்களும், ம.பி.யில் 193 கிராமங்களும் வரும் மழைக்காலத்தில் அடுத்தடுத்து மூழ்கிப் போகும். அதுமட்டுமின்றி, 13,000 ஹெக்டேர் அளவுக்கு வளமான காட்டுப் பகுதிகள் அழிந்து போகும். அரிதான மூலிகைகள், காட்டு மரங்கள், பறவைகள், விலங்குகள் — எல்லாவற்றையும்விட, இப் பிராந்தியத்தின் இயற்கை சூழ்ந்த அழகும் பண்பாடும் அழிந்து போகும். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு நிர்கதியாய் விரட்டப்படுவார்கள்.

1280 கி.மீ. நீளமுள்ள நர்மதை நதியில் அணைகளைக் கட்டி பாசனத்தைப் பெருக்கவும், மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்தைத் தடுக்கவும் மூன்று தலைமுறைக்கு முன்பு திட்டம் தீட்டப்பட்டது. போதிய நிதி ஆதாரமின்றி முடங்கிக் கிடந்த இத்திட்டத்திற்கு உலக வங்கியும் ஏகாதிபத்திய நாடுகளும் கடனுதவி செய்ய முன்வந்ததும், இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு "நர்மதா பள்ளத்தாக்குத் திட்டம்" என அழைக்கப்பட்டது. உலகின் மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படும் நர்மதா பள்ளத்தாக்குத் திட்டம் — குஜராத்தில் சர்தார் சரோவர் திட்டம், ம.பி.யில் நர்மதா சாகர் திட்டம் எனும் இரு பெரும் அணைக்கட்டுத் திட்டங்களை உள்ளடக்கியது. இதுதவிர 30 பெரிய அணைகள், 135 நடுத்தர அணைகள், 3000 சிறிய அணைகள் நர்மதை நதியிலும், அதன் 41 கிளை ஆறுகளிலும் கட்டப்பட உள்ளன.

இவற்றில் சர்தார் சரோவர் திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நர்மதா சாகர் திட்டம் இன்னும் துவங்கப்படவில்லை. சர்தார் சரோவர் திட்டத்தில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு பணிகள் நிறைவடைந்து விட்டன. அணையின் உயரம் படிப்படியாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அதன் அருகிலுள்ள கிராமங்களும், காடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக நீரில் மூழ்கி வருகின்றன.

"ஒரு லட்சம் மக்களின் வாழ்வைப் பறிப்பதோடு அல்லாமல், 13,000 ஹெக்டேர் பரப்பளவுக்கு காடுகள் அழிக்கப்படுவதால் இத்திட்டம் முற்றாக மக்களுக்கே எதிரானது. காடுகள் அழிக்கப்படுவதால் சுற்றுச் சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டு, நிலநடுக்க அபாயமும் ஏற்படும். காடுகள் அழிவதால், நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழையளவு குறைந்து போய், நர்மதை ஆறே சுருங்கிவிடும். இதுதவிர, வெளியேற்றப்படும் மக்களுக்கு உரிய நிவாரண - புனர்வாழ்வுத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை" என்று கூறி சுற்றுச்சூழல்வாதிகளும் தன்னார்வக் குழுக்களும் இத்திட்டத்தை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடி வருகின்றன.

"பாதிப்புகளைக் கணக்கில் கொண்டு உரிய நிவாரண நடவடிக்கைகளைச் செய்துள்ளோம். வெளியேற்றப்படும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஏக்கர் நிலமும், இலவச வீடும் நிவாரண நிதியும் கொடுத்துள்ளோம். கட்ச், சௌராஷ்டிரா பிராந்தியத்திலுள்ள 50 லட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் மகத்தான திட்டம் இது. இத்திட்டத்தை எதிர்ப்பது மக்கள் நலனுக்கே எதிரானது" என்று ஆட்சியாளர்களும் குறிப்பாக, குஜராத் முதல்வர் சிமன் பாய் பட்டேலும் எதிர்ப்பாளர்களைச் சாடுகின்றனர்.

1985-ம் ஆண்டின் உலக வங்கி கடனு



நர்மதா திட்டத்தால் வாழ்விழந்த விவசாயிகள் நகர்ப்புற சேரிகளில் உதிரித் தொழிலாளர்களாக....



படிப்பகம்

www.padippakam.com

தவி ஒப்பந்தப்படி, வெளியேற்றப்படும் மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை தக்கவைத்துக் கொள்ளும் வகையில், பாசனப் பகுதியில் 5 ஏக்கர் நிலமும் வீடும் தரப்படவேண்டும் என்று முடிவாகியுள்ளது. ஆனால் குஜராத் அரசோ, பாசன வசதியற்ற பகுதியில் ஒரு துண்டு தரிசு நிலத்தைக் கொடுக்கிறது. பாசனப் பகுதிகளில் நிலத்தின் விலை இப்போது உயர்ந்துவிட்டதால், அவற்றைக் கையகப்படுத்தி விநியோகிக்க போதிய நிதியில்லை என்று கையை விரிக்கிறது. மேலும் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் குஜராத் மக்களுக்கு மட்டும்தான் அச்சலுகை கிடைக்கிறது. மகாராஷ்டிரா, ம.பி. மாநிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவோரில் ஏற்கனவே நிலம் வைத்திருந்தவர்களுக்கு மட்டுமே இச்சலுகை தரப்படும் என்று குஜராத் அரசு ஒதுங்கிக் கொள்கிறது. ம.பி., மகாராஷ்டிர அரசுகளோ குஜராத் அரசுதான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென வாதிடுகின்றன. இதனால், வெளியேற்றப்படும் 70% நிலமற்ற தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள்ளுக்கு எவ்வித நிவாரண உதவியும் இன்றுவரை கிடைக்கவில்லை.

ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக, ''இந்தியா டுடே'' முதலான பத்திரிகைகள், ''வெளியேற்றப்பட்டு குஜராத்தில் குடியேறியவர்கள் எல்லா வசதிகளுடன் குட்டி ஜமீன்தாராகி விட்டார்கள்'' என்று கயிறு திரித்துக் கொண்டிருக்கும்போது, மணிபெலியிலிருந்து குஜராத்திலுள்ள பர்வெட்டா கிராமத்தில் குடியமர்த்தப்பட்ட ஆதிவாசிகள் தமது நிலப் பட்டாக்களை மகாராஷ்டிர வருவாய்த்துறை அமைச்சரிடமே வீசி எறிந்து விட்டனர். ''பர்வெட்டா கிராமம் பாசன வசதியற்ற பாறைகளைக் கொண்ட பூமி. ஜோவார், பஜ்ரா போன்ற காட்டுப் பருப்பு வகைகளைக்கூட அங்கு பயிரிட முடியாது. உணவுக்கும், விறகுக்கும், பிழைப்புக்கும் நாங்கள் காட்டை நம்பியிருந்தோம். இப்போது அதையும் இழந்து விட்டோம். இனி நாங்கள் எப்படி வாழ்வது?'' என்கிறார்கள், 1986-ல் இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள்.

இதேபோல, சர்தார் சரோவர் திட்டத்தால் குஜராத்தில் முதலில் மூழ்கிப்போகும் கிராமமான வத்காமிலிருந்து வெளியேற்றப்பட்டு, மாலூ எனும் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டவர்களில் பெரும்பாலோர் மீண்டும் திரும்பி வந்துவிட்டனர். ''பாறை நிலத்தைக் கொடுத்து எங்களை ஏய்த்து விட்டார்கள்'' என்று அவர்கள் வேதனையில் குமுறுகிறார்கள்.

''இங்கே எங்களுக்கு ஓரளவுக்காவது வேலை கிடைக்கும். மொழியும் பண்பாடும் வேறுபட்ட குஜராத் மாநிலத்தில் நாங்கள் எப்படி பிழைக்க முடியும்? அதுவும் தரிசு நிலத்தில் யார்தான் குடியேறுவார்கள்?'' என்று ம.பி.யிலுள்ள ஆதிவாசிகள் ஆத்திரத்தோடு கேட்கிறார்கள். ''கேதத் மஸ்தூர் சேத்னா சங்'' எனும் ஆதிவாசிகளின் போராட்ட அமைப்பில் திரண்டுள்ள இவர்கள், வில்-அம்புகளை ஏந்தி, கட்டுமானப் பணிக்கு வரும் வாகனங்களையும் அதிகாரிகளையும் வழிமறித்து விரட்டியடிக்கிறார்கள். தொலைதூரத்தில் வாகனங்கள் வரும்போதே, எச்சரிக்கை ஒலியெழுப்பி, ஆதிவாசிகள் அணிதிரண்டு மறியல் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். போலீசைக் கொண்டு அவர்களை அடித்து விரட்டிய பிறகே வாகனங்கள் முன்னேற முடிகிறது.




''ஐ.எம்.எஃப்., உலக வங்கியே ஒழிந்துபோ'' என்று முழக்கமிடும் ஆதிவாசிப் பெண்கள்....

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கிராமங்கள்தோறும் தமது ஊக்கமான பங்கேற்போடு போராடி வருகிறார்கள். எல்லா குடிசைகளிலும் ''நர்மதா பச்சாவ் அந்தோலன்'' மற்றும் அதன் கூட்டமைப்புகளின் கொடிகள் பறக்கின்றன. நேற்றுவரை அறியாமை இருளில் மூழ்கியிருந்த இம்மக்கள். இன்று தன்னெழுச்சியாகத் திரண்டு போராடுமளவுக்கு இவ்வியக்கம் செல்வாக்குப் பெற்றுள்ளது. இதுதவிர சுற்றுச்சூழல் வாதிகள், மனித உரிமை இயக்கத்தினர் இத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகள், மக்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்து தொடர்ச்சியாகப் போராடத் தொடங்கியதும் நர்மதை பாதுகாப்பு இயக்கம் ஒரு சக்திமிக்க பேரியக்கமாக வளர்ந்துள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த ஆட்சியாளர்கள் ஒருபுறம் போராட்ட இயக்கத்தினர் மீது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையை ஏவிவிட்டனர். மறுபுறம், குடிநீர் திட்டத்தையே தடுக்கிறார்கள் என்று கட்ச் வளைகுடா பகுதியிலுள்ள மக்களை உசுப்பிவிட்டு, நர்மதை திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து குஜராத்தில் ஆர்ப்பாட்டங்கள் -பேரணிகளை நடத்தினர். குறிப்பாக, குஜராத் முதல்வர் சிமன்பாய் பட்டேல், ''நர்மதா பிரிகேட்'' என்ற பெயரில் ஒரு குண்டர் படையைக் கட்டி, போராட்ட இயக்கத்தினர் மீது திட்டமிட்டே தாக்குதல் நடத்தி வருகிறார். பட்டேலின் ஏற்பாட்டின்படி, இத்திட்டத்தால் ஆதாயமடையவுள்ள பணக்கார விவசாயிகளின் சார்பில் 2,000 பேர் டெல்லிக்குச் சென்று, இத்திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் நாங்கள் ரத்தம் சிந்தவும் தயங்கமாட்டோம் என்பதற்கு அடையாளமாக ரத்ததானம் செய்தனர்.

ஆட்சியாளர் நடத்திய எதிர்போராட்டமும் அடக்குமுறையும் அவர்களை மேலும் தனிமைப்படுத்தவும், நர்மதா போராட்ட இயக்கத்தை மேலும் பிரபலப்படுத்துவதிலும் போய் முடிந்தது. பாதிக்கப்படும் மக்களின் விடாப்பிடியான போராட்டம், சுற்றுச்சூழல்வாதிகளின் தொடர்ச்சியான நிர்ப்பந்தம் காரணமாக, சர்தார் சரோவர் திட்டத்துக்கு கடனுதவி செய்ய ஜப்பான் மறுத்துவிட்டது. சர்வதேச அளவில் சுற்றுச்சூழல்வாதிகள் - மனித உரிமைக் காப்பு இயக்கத்தினர் நடத்திய பிரச்சாரம் -நிர்ப்பந்தம் காரணமாக, கடந்த ஆண்டில் சுற்றுச் சூழல்வாதிகள் - நிலவியலாளர்களைக் கொண்ட குழுவை அனுப்பி, அதன் ஆய்வறிக்கையின்படி கடனுதவி செய்வது பற்றிய இறுதி முடிவு எடுப்பதாக உலக வங்கி ஒப்புக் கொண்டது. பிரஸ்போர்டு மோர்ஸ் என்பவர் தலைமையிலான இக்குழுவின் ஆய் வறிக்கை, இத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளை அம்பலப்படுத்திக் காட்டியது. நிவாரண நடவடிக்கைகள் பெயரளவுக்கே நிறைவேற்றப்பட்டுள்ளதையும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியது. இருப்பினும் உலக வங்கி, இவற்றைப் பூசிமெழுகி கடனுதவி செய்வதிலேயே குறியாய் இருந்தது. பின்னர், ''உலக வங்கியே வெளியேறு!'' என பாதிக்கப்பட்ட மக்களும் சுற்றுச்சூழல் வாதிகளும் கடந்த ஆண்டில் நடத்திய போராட்டங்கள், சர்வதேச அளவில் எழுந்த நிர்ப்பந்தம் காரணமாக இவ்வாண்டு துவக்கத்தில் உலக வங்கி இத்திட்டத்திலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தது.

இதனால் ஆத்திரமடைந்து ஆட்சியாளர்கள், உள்நாட்டிலேயே நிதிதிரட்டி எப்பாடுபட்டேனும் இத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கொக்கரிக்கின்றனர். குஜராத்தின் நீர்ப்பாசன ஆண்டு வரவு — செலவுத் திட்டத்தில் 80% தொகையை சர்தார் சரோவர் திட்டத்துக்கு ஒதுக்கீடு

படிப்பகம்

www.padippakam.com

செய்தும், வெளிநாட்டில் வாழும் இந்தியர்களிடம் இத்திட்டத்திற்கான அரசு பத்திரங்களை விற்றும் நிதி திரட்டுவதில் குஜராத் அரசு முனைப்பாக உள்ளது. இதன் மூலம் சர்வதேச ரகசிய உலகப் பேர்வழிகள் தமது கருப்புப் பணத்தை இந்திய பினாமிகள் மூலம் முதலீடு செய்ய அரசே வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

உலக வங்கி இத்திட்டத்திலிருந்து விலகிக் கொண்டது இந்திய ஆட்சியாளர்களுக்கு இன்னொரு வகையில் வாய்ப்பாகிப் போனது. இப்போது நிவாரண நடவடிக்கைகளைக் கண்காணிக்க எந்த அந்நிய நிறுவனமும் நிர்பந்தமும் கிடையாது. தேர்தல் வாக்குறுதிகளைப் போல, நிவாரண நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டதாக கணக்கு காட்டி ஏய்க்க ஆட்சியாளர்களுக்கு இது சாதகமாகிவிட்டது. எனவே சர்தார் சரோவர் கட்டுமானப் பணிகளிலும், மக்களை கட்டாய வெளியேற்றம் செய்வதிலும் அடக்குமுறையை ஏவுவதிலும் அவர்கள் இரட்டிப்பு வெறியைக் காட்டினார்கள். கடந்த மே மாத இறுதியில், ''நர்மதா பச்சாவ் அந்தோலன்'' தலைவரும், சமூக சேவகியுமான மேதாபட்கர், பரோடாவில் ஒரு கருத்தரங்கு நடத்த முற்பட்டபோது, காங்கிரசு குண்டர்கள் அரங்கத்தை நாசப்படுத்தி கூட்டத்தில் பங்கேற்றவர்களையும் தாக்கினர். பின்னர் இந்த குண்டர்கள் முதல்வர் சிமன்பாய் பட்டேலின் வீட்டில் விருந்துண்டனர். இச்செய்தியை வடநாட்டுப் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்னரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், ''லோக் அதிகார் சங்'' எனும் மக்கள் உரிமைக்கான அமைப்பு உயர்நீதி மன்றத்தில் குஜராத் அரசு மீது கிரிமினல் வழக்கு தொடுத்துள்ளது.

இந்நிலையில் தொடர்ச்சியான அடக்குமுறை, கட்டாய வெளியேற்றம், காங்கிரசு குண்டர்களின் அட்டூழியம் முதலான வற்றை இனியும் சகித்துக் கொள்ள முடியாது என்று போராட்ட இயக்கத்தினரும் பாதிக்கப்பட்ட மக்களும் ''சமர்ப்பண்'' எனும் நீரில் மூழ்கி மாளும் போராட்டத்தை அறிவித்தனர். இதைத் தடுக்கும் நோக்கத்தோடுதான் கடந்த மே மாத இறுதியில் மணிபெலியில் மகாராஷ்டிர போலீசு காட்டுமிராண்டித்தனத்தை ஏவியது. மணிபெலி கிராமத்தில் யாரும் நுழையக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, கிராம மக்கள் நிவாரண நடவடிக்கைகளை ஏற்று சுய விருப்பத்தோடு வெளியேறுவதாக கிராமத் தலைவரை நிர்பந்தித்து கட்டாய உறுதிமொழியையும் அரசு வாங்கியது. இதேபோல மகாராஷ்டிராவில் 12 கிராமங்களிலும், குஜராத்தில் 14 கிராமங்களிலும் அட்டூழியங்கள் நடந்தன.

அதைத் தொடர்ந்து, நர்மதா பச்சாவ் அந்தோலன் இயக்கத்தினர் மேதா பட்கர் தலைமையில் 5,000-க்கும் மேலான ஆதிவாசி - பழங்குடி மக்களைத் திரட்டி பம்பாய் நகரில் எழுச்சிமிகு கண்டன ஊர்வலத்தை நடத்தினர். மத்திய அரசு சர்தார் சரோவர் திட்டத்தை நிறுத்திவைத்து மறு ஆய்வு செய்யாத வரை போராட்டம் தொட

## சர்தார் சரோவர் திட்டம்: வரலாற்றுக் குறிப்புகள்

1947: நர்மதை ஆற்றின் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தவும், பாசன வசதியைப் பெருக்கவும், மின்சாரம் தயாரிக்கவும் உள்ள வாய்ப்புகளைப் பரிசீலிக்க மத்திய நீர்வழி, பாசனக் கமிஷன் நிறுவப்பட்டது.

1956: மத்திய நதிநீர் மற்றும் மின்சாரக் கமிஷன் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட இக்கமிஷன், 160 அடி உயரத்துக்கு அணைகட்டலாம் என்றும் அதன் மூலம் 4.4 லட்சம் ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறமுடியும் என்றும் பரிந்துரைத்தது.

1959: மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களும் பயன் பெறும் வகையில் குஜராத்தில், நவகான் அருகே அணையைக் கட்டுவதென்றும், சர்தார் வல்லபாய் பட்டேல் நினைவாக சர்தார் சரோவர் திட்டம் என பெயர் சூட்டவும் முடிவாகியது.

1979: இத்திட்டத்திற்காக குஜராத் நீர்ப் பாசனத்துறை அமெரிக்காவிடமிருந்து 10 கோடி டாலர் கடன் வாங்கியது. இத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளை ஆராய, நர்மதா மறுபரிசீலனைக் கமிட்டி நிறுவப்பட்டது.

1983: இத்திட்டத்தால் வெளியேற்றப்படும் குஜராத் மக்கள், நிவாரண - மறுவாழ்வு ஏற்பாடுகளைக் கோரி மிகப் பெரிய ஊர்வலத்தை நடத்தினர்.

1985: இத்திட்டத்துக்கு உலக வங்கி 750 கோடி ரூபாய் முதல் தவணைக் கடனாக வழங்கியது. நீர்மின் திட்டத்துக்கு ஜப்பான் கடனுதவி அளிக்க முன்வந்தது. இதன்படி ஜப்பானிடமிருந்து மின் சாதனங்களை வாங்க முடிவாகியது.

1987: வனவளம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகம் இத்திட்டத்துக்கு சில நிபந்தனைகளுடன் கூடிய ஒப்புதல் அளித்தது.

● இத்திட்டத்தை பல கோணங்களில் எதிர்க்கும் தன்னார்வக் குழுக்கள் ஒன்றிணைந்து ''நர்மதா பச்சோ அந்தோலன்'' (நர்மதையை காக்கும் போராட்ட இயக்கம்) என்ற அமைப்பை நிறுவின. அரசின் நர்மதை கட்டுப்பாட்டு ஆணையகத்திடம் மனு கொடுத்ததோடு, இவ்வமைப்பின் பிரதிநிதிகளும், சுற்றுச் சூழல் வாதிகளும் உலக வங்கியின் அன்றைய தலைவர் கோனபிளிடம் முறையிட்டனர்.

● பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச வீடும், 5 ஏக்கர் நிலமும், நாளொன்றுக்கு ரூ.15 வீதம் நிவாரண உதவியும் செய்யப் போவதாக குஜராத் அரசு அறிவித்தது.

1988: குஜராத், ம.பி., மகாராஷ்டிரா மாநிலங்களைச் சேர்ந்த வெளியேற்றப்படும் மக்கள் இத்திட்டத்துக்கு எதிராக மிகப் பெரிய அளவில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர்.

1989: கால்கட், ஹர்சூட் ஆகிய இடங்களில் அடுத்தடுத்து 60,000 க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடந்தன.

● நிவாரண - புனர்வாழ்வு நடவடிக்கைகளையும், சுற்றுச் சூழல் பாதிப்புகளையும் பற்றி ஆய்வு செய்ய உலக வங்கியின் குழு சுற்றுப் பயணம் செய்தது.

1990: இத்திட்டத்தால் மழைக் காலங்களில் மூழ்கும் அபாயத்திலுள்ள கிராமங்களைக் காப்பாற்றக்கோரி, சமூக சேவகியும் நர்மதா போராட்ட இயக்கத் தலைவருமான மேதா பட்கர் தன் ஆதரவாளர்களுடன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

● மேதா பட்கரும் காந்நீய சமூக சேவருமான பாபா ஆம்தேயும் தமது ஆதரவாளர்களுடன் குஜராத்திலிருந்து தொடங்கி நடத்திய 'நீண்ட பயணம்' பாதி வழியிலேயே தடுக்கப்பட்டது. போராட்ட இயக்கத்தினர் 22 நாட்கள் தொடர் உண்ணாவிரதமிருந்தனர். ஜனவரியில் நடந்த தர்ணா போராட்டத்தை போலீசார் அடக்கினர்.

● போராட்ட இயக்கத்தினர் ஜப்பானிய சுற்றுச் சூழல்வாதிகளுடன் சேர்ந்து பிரச்சாரம் செய்து நிர்பந்தித்ததன் விளைவாக, இத்திட்டத்திற்கு ஜப்பான் கடனுதவி அளிக்க மறுத்து விட்டது.

1991: ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் சுற்றுச் சூழல் வாதிகள் எதிர்ப்பு பிரச்சாரம் செய்ததும், உலக வங்கி இத்திட்டத்துக்கு கடனுதவி செய்யக்கூடாது என்று ஐரோப்பிய சமூக நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

● பிரஸ்போர்டு மோர்ஸ் தலைமையிலான சுற்றுச் சூழல்வாதிகளின் குழு இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து அளிக்கும் ஆய்வறிக்கையின்படி, கடனுதவி பற்றி முடிவு செய்வதாக உலக வங்கி அறிவித்தது.

● நோபல் பரிசுக்கு இணையாக கருதப்படும் ''வாழும் உரிமைக்கான விருது'' நர்மதா பச்சோ அந்தோலனுக்கு வழங்கப்பட்டது.

1992: அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் நர்மதா திட்டம் பற்றி பன்னாட்டு விஞ்ஞானிகள், சுற்றுச்சூழல்வாதிகளைக் கொண்ட கருத்தரங்கம் நடைபெற்றது.

● அமெரிக்காவின் கோல்டுமேன் நிறுவனம், சிறந்த சுற்றுச்சூழல்வாதிக்கான விருதை மேதாபட்கருக்கு வழங்கியது.

● மணிபெலி கிராமத்தில் நீரில் மூழ்கி மாளும் போராட்டத்தை அறிவித்து சுற்றுச் சூழல்வாதிகள் கைதாயினர்.

1993: சர்வதேச அளவில் எழுந்த நிர்பந்தம் காரணமாக இத்திட்டத்திலிருந்து விலகிக் கொள்வதாக உலக வங்கி அறிவித்தது.

● உள்நாட்டு நிதி மூலாதாரங்களைக் கொண்டும், உறுதிக் காப்பு பத்திரங்களை வெளியிட்டு வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடமிருந்து நிதி திரட்டியும் இத்திட்டத்தை நிறைவேற்றப் போவதாக அரசு அறிவித்தது.

● சுற்றுச் சூழல் வாதிகளின் தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக, இத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவைத்து மாற்றுத் திட்டங்களைப் பரிசீலிக்க பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

ரும் என்று ஜூன் 3-ம் தேதி முதலாக மேதா பட்கர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். இப்போராட்டத்தை ஆதரித்து பம்பாயிலும், டெல்லியில் நீர்வளத்துறை அமைச்சகத்தின் முன்பும் அந்தோலன் மட்டுமின்றி பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பொதுமக்கள் கருத்தும் போராட்டமும் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெள்ளமெனப் பெருகத் தொடங்கியதும், உண்ணாவிரதப் போராட்டம் 14-வது நாளை எட்டிய பிறகு, ஜூன் 17-ந் தேதியன்று கோரிக்கையை ஏற்பதாக மத்திய அரசு அறிவித்தது. 4 மாநில அரசுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டு நர்மதா பச்சாவ் அந்தோலன், சுற்றுச்சூழல்வாதிகள், மனித உரிமை இயக்கத்தினர், பாதிக்கப்படும் மக்கள் என அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவதாகவும், அதுவரை கட்டுமானப் பணிகளையும் கட்டாய வெளியேற்றத்தையும் நிறுத்தி வைப்பதாகவும், மாற்றுத் திட்டங்களைப் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகவும் மத்திய நீர் வளத்துறை அமைச்சர் வி.சி.சுக்லா அறிவித்துள்ளார்.




**நர்மதா பேரழிவுத் திட்டத்திற்கெதிராக போர்க்கொடி ஏந்தியுள்ள போராளி மேதா பட்கேர்...**

சர்தார் சரோவர் திட்டத்தால் பாதிக்கப்பட்டு, எட்டாண்டுகளாகப் போராட்டத்தை நடத்திவரும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கும், தலைமையேற்று வழிநடத்தும் நர்மதா பச்சாவ் அந்தோலன் இயக்கத்தினருக்கும் கிடைத்த முதல்வெற்றி இது. இருப்பினும் மக்கள் போராட்டத்துக்கு மதிப்பளித்து மத்திய அரசு பணிந்து விட்டதாகக் கருத முடியாது. போராடும் மக்களின் கோபாவேசத்தைத் திசைதிருப்பி சாந்தப்படுத்தி பேச்சுவார்த்தையை முடிவேயில்லாமல் இழுத்தடிப்பது, போராட்ட இயக்கத்தினரைப் பிளவுபடுத்தி ஒரு பிரிவினரை விலைபேசுவது என்கிற நரித்தனத்தோடுதான் காங்கிரசுப் பெருச்சாளிகள் இப்போது பேச்சு வார்த்தைக்கு முன்வந்துள்ளனர். இதோடு, சட்ட சபை கலைக்கப்பட்ட ம.பி.யில் மீண்டும் தேர்தல் நடத்துவதற்கான காலக்கெடு நெருங்கிவிட்டதால், பழங்குடி மக்களின் ஓட்டுக்களைக் கைப்பற்றும் நோக்கத்தோடுதான் காங்கிரசுக் கயவாளிகள் கோரிக்கையை ஏற்பதாக நாடகமாடுகிறார்கள். போராட்டம் தீவிரமடைவதால் ஆட்சியாளர்கள் தற்காலிகமாகப் பின்வாங்கி மீண்டும் பாய்வதற்கே காத்திருக்கிறார்கள்.

ஏனெனில் இத்திட்டத்தால் ஆதாயமடையப் போவது ஓட்டுப் பொறுக்கிகளும் அவர்களது கூட்டாளிகளான கட்டுமான ஒப்பந்தக்காரர்கள், நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியவாதிகளும்தான். இந்த நோக்கத்தோடுதான், உரம், பூச்சிமருந்து, விதைகள் முதலானவற்றுக்கான தமது சந்தைக்காக, ஏழை நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் நவீன விவசாய முறைகளைப் புகுத்துகின்றன. இதற்காக பெரும் அணைகளைக் கட்டி நீர்ப்பாசனத்தைப் பெருக்கி அதன்மூலம் தமக்குத் தேவையான கச்சாப் பொருள் - உணவு தானியங்களை உற்பத்தி செய்ய ஊக்குவித்து அவற்றைத் தமது நாட்டுக்கு வாரிச் செல்கின்றன. இத்தகைய திட்டங்களுக்காக இங்கே காடுகளை அழிப்பதும் ஏகாதிபத்தியங்கள்தான். காடுகள் அழிவதால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறி, காடு வளர்ப்புத் திட்டத்துக்கு நிதியுதவி செய்து கடன் வலையில் சிக்க வைப்பதும் ஏகாதிபத்தியங்கள்தான். மொத்தத்தில் ஏகாதிபத்தியங்கள், நிலப்பிரபுக்கள், தரகுப் பெருமுதலாளிகளின் நலன்களுக்காகவே இங்கே மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

நர்மதா திட்டத்தை எதிர்க்கும் பல்வேறு தன்னார்வக் குழுக்களுக்கும் ஏகாதிபத்தியங்கள்தான் 'நன்கொடை' தருகிறது. ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு இத்தன்னார்வக் குழுக்கள் மனித உரிமைக்கான இயக்கங்களைத் தீவிரமாக நடத்தின. இன்று அவற்றை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அணு உலை எதிர்ப்பு என்று கிளம்பியுள்ளனர். குறிப்பாக, ரியோவில் நடந்த சுற்றுச்சூழல் மாநாட்டுக்குப் பிறகு, இத்தகைய இயக்கங்களை நடத்துவதென்பது தன்னார்வக் குழுக்கள், குட்டி முதலாளித்துவ சக்திகளின் புதிய வகை பேஷனாகிவிட்டது. தமக்கு அதிகம் பாதிப்பில்லாத போராட்டம் என்பதால் குட்டி முதலாளித்துவ சக்திகள் இவற்றில் ஊக்கமாகப் பங்கேற்பதும், தம்மை ஒரு சுற்றுச்சூழல்வாதியாகக் காட்டிக் கொள்வதும், ''இயற்கைக்குத் திரும்புவது'', ''இயற்கை உணவு'' முதலானவற்றைப் பின்பற்றுவதும் இன்று புதிய வகை போக்காக வளர்ந்துள்ளது.

வர்க்கப் போராட்டத்தைவிட, சுற்றுச்சூழல்தான் இன்றைய தலையாயப் பிரச்சினை; அது வர்க்கப் போராட்டம், அரசியல் போராட்டங்களுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய பிரச்சினை என்று இவர்கள் வாதிடுகிறார்கள். அடுத்தடுத்து எரியும் பிரச்சினைகளை நாடு எதிர்கொண்ட போதிலும் அவற்றுக்காக இத்தன்னார்வக் குழுக்கள் போராட முன்வரவில்லை. நர்மதா போராட்ட இயக்கத்தை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக வளர்த்தெடுக்கவும் இவர்கள் தயாராக இல்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் என்கிற வரம்போடு, குறுகிய பொருளாதாரவாதப் போராட்டங்களையே இவர்கள் தீவிரமாக நடத்தி வருகிறார்கள்.

இருப்பினும் சர்தார் சரோவர் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி அவர்கள் கூறும் நியாயமான வாதங்களையோ, பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டத்தையோ நாம் சிறுமைப்படுத்தி புறக்கணித்துவிட முடியாது. ஏற்கனவே பல்வேறு அணைக்கட்டுத் திட்டங்களால் ஏறத்தாழ 6 லட்சம் மக்கள் அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்படும் மக்களுக்கு வேலை வாய்ப்பு, குடியிருப்பு, நிவாரண உதவிகள் அனைத்தும் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளன. இத்தகைய பெரும் திட்டங்கள் கால இலக்கிற்குள் நிறைவேறாமல் தாமதப்படுவதால், திட்டச் செலவு அதிகரித்து பற்றாக்குறை ஏற்படுவதும், அதனால் திட்டத்தேயே தள்ளிப் போடுவதும், மீண்டும் ஏகாதிபத்தியங்களிடம் கடன் வாங்கி திவாலாவதும்தான் தொடர்ந்து நடக்கிறது.

எனவே மக்கள் நலனைப் புறக்கணித்துவிட்டு ஆளும் வர்க்கங்கள் - ஏகாதிபத்தியங்களின் குறுகிய நலனுக்கான இத்தகைய திட்டங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு கோரியும், குறிப்பாக வெளியேற்றப்படும் பழங்குடி மக்களுக்கு மறுவாழ்வு கோரியும், ஓட்டுப் பொறுக்கிகள் - அதிகாரிகளின் கொள்ளையையும் விரயத்தையும் எதிர்த்து நாம் போராட வேண்டும். அதே சமயம் மக்களின் கரங்களில் அதிகாரம் இல்லாமல், மக்கள் நலனுக்கான வளர்ச்சித் திட்டங்களை சாதிக்கவும் முடியாது என்பதை உழைக்கும் மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

●நாதன்



படிப்பகம்

www.padippakam.com

# கல்வி வியாபார

## பெற்றோர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுக்கும்

தேர்வுகள் முடிந்து பள்ளி இறுதியாண்டு மற்றும் மேனிலைப் பள்ளி முடிவுகள் வெளிவந்து விட்டன. 'அடுத்து எந்தப் பள்ளியில் அல்லது கல்லூரியில் சேர்வது?', 'எந்தப் பாடத்தை எடுத்துப் படித்தால் வேலைக்கு ஓரளவாவது உத்திரவாதம் கிடைக்கும்?', 'கல்லூரி கட்டணச் செலவுகளை எப்படி ஈடுகட்டுவது?' - இவை போன்ற கேள்விகள்தான் பெரும்பாலான பெற்றோர்களின் மனதிலும், மாணவர்களின் சிந்தனையிலும் தற்சமயம் மலை போல் எழுந்து நிற்பவை.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை பள்ளிகளில் / கல்லூரிகளில் சேர்வது இன்றுள்ள அளவுக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருந்தது கிடையாது. ஆனால் இன்று நிலைமையே தலைகீழ். 'பெருகிவரும் மக்கள் தொகைதான்' என வேலையில்லா திண்டாட்டத்திற்கு அரசு கூறும் நொண்டிச் சாக்கைப் போல் இதற்கும் காரணம் கூற முடியாது. 'புதிய கல்விக் கொள்கை' என்ற பெயரில் அரசு ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை பள்ளிகளையும், கல்லூரிகளையும் தனியார் திறந்து கொள்ள அனுமதியளித்து செயல்படுத்தி வருவதுதான், அடிப்படை கல்வி பெறுவதற்குக் கூட ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

'எங்கள் பள்ளியில் நூறு சதவீத மாணவர் தேர்ச்சி', 'எங்கள் பள்ளி மாணவர் / மாணவிதான் மாநில அளவில் முதலாவதாகத் தேறியுள்ளார்' எனத் தனியார் ஆங்கிலப் பள்ளிகள் விளம்பரங்களின் மூலம் பெற்றோர்களுக்குப் பொறி வைத்துக் கொண்டிருக்கையில், மிகப் பெரிய கல்வி வியாபாரியான தனியார் தொழிற்கல்வி நிறுவனத்தார் அனைவரும் நாடெங்கும் அரசுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

கடந்த பிப்ரவரியில் மோகினி எனும் மாணவி தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் தனியார் கல்வி நிறுவனங்கள் நன்கொடைக் கட்டணம் (Capitation fee) மாணவர்களிடமிருந்து பெறுவதைத் தடை செய்து தீர்ப்பளித்தது. அத்தீர்ப்பிலேயே நன்கொடைக் கட்டணத்திற்குப் பதிலாக, அந்நிறுவனங்கள் தங்களுடைய கல்விச் செலவுகளுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை வருடாந்திர கட்டணமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சாதகமான வழியினையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து தனியார் தொழிற்கல்வி நிறுவனங்கள் 50 சதவீத இடங்களை அரசு / அரசு மானியம் பெறும் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கட்டணத்திற்கும், மீதமுள்ள 50 சதவீத இடங்களை அந்தந்த மாநில அரசுகள் நிர்ணயிக்கும் கட்டணத்திற்கும் ஒதுக்க வேண்டுமென்றும், 100 சதவீத இடங்களையும் தகுதி அடிப்படையில் அரசு தேர்ந்தெடுத்துள்ள மாணவ / மாணவியர்க்கே ஒதுக்க வேண்டும் என்றும் பணித்துள்ளது.

இதன் முன்பு வரை 70 முதல் 80 சதவீத இடங்களை அரசு பரிந்துரைத்துள்ள மாணவர்களுக்கும், 20 முதல் 30 சதவீத இடங்களை தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள மாணவர்களுக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஒதுக்கி வந்தன. 100 சதவீத மாணவர்களிடமிருந்தும் தாங்கள் நிர்ணயித்திருந்த நன்கொடைக் கட்டணத்தை வசூலிக்கவும் உரிமை பெற்றிருந்தன. நிர்வாகத்தினரது இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டிருப்பது, மாநில அரசுகள் நிர்ணயித்துள்ள கட்டணங்கள் தங்களது முதலீட்டிற்கான வருவாயைப் பெற்றுத் தராது என்ற காரணங்களைக் கூறி இவர்கள் அந்தந்த மாநில அரசுகளுடன் மோதிக் கொண்டிருக்கின்றனர்.

மாநில அரசுகளும் தங்களது பங்குக்கு இக்கல்வி வியாபாரிகளை நட்டாற்றில் விட்டுவிடவில்லை. மகாராஷ்டிராவில் அலோபதி மருத்துவ கல்விக்கு வருடக் கட்டணமாக ரூ. 1,71,500 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொறியியல் கல்விக்கு கல்லூரி அளித்துள்ள வசதிக்கேற்ப ரூ. 32,000 முதல் 72,000/- வரை. கர்நாடகாவிலோ இக்கட்டணம் முறையே 55,000 மற்றும் 20,000 ஆகும். தமிழ்நாட்டில் 26,250 மற்றும் 45,500/-. தனியார் கல்வி நிறுவனங்கள் கோருவதோ மருத்துவக் கல்விக்கு ரூபாய் இரண்டரை லட்சம்; பொறியியலுக்கு எழுபதாயிரம். அதே சமயம் பம்பாயிலிருந்து வெளிவரும் பொறியியல் பத்திரிகையொன்று, 'வருடத்தில் 200 மாணவர்களைச் சேர்க்கும் ஒரு தனியார் பொறியியல் கல்வி நிறுவனம் வருடக் கட்டணமாக ரூ. 14,000/- வசூலித்தால், அக்கல்லூரி தொடங்கப்பட்ட ஏழாவது வருடத்திலிருந்து வருடத்திற்கு 67 லட்சம் வரை இலாபமாக ஈட்டுமென' எழுதுகிறது. இம்மாணவர் சேர்க்கை என்பதும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. உதாரணமாக, மகாராஷ்டிராவில் முதலாண்டில் 300 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமெனில் கர்நாடகாவில் 400 மாணவர்களைச் சேர்க்கலாம்.

கர்நாடகாவில் தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கம், முதல் வருட படிப்புக்கு மாணவர்களைச் சேர்க்கப் போவதில்லை எனத் தீர்மானம் போட்டு மாநில அரசினை மிரட்டியுள்ளது. தமிழ்நாட்டில் முன்னாள் எம்.பி.சண்முகம் தலைமையில் இயங்கும் இச்சங்கம் ஏற்கனவே இதுபோன்ற மிரட்டலை மாநில அரசுக்கு அனுப்பிவிட்டது. மகாராஷ்டிராவிலோ கட்டணம் செலுத்திப் பயிலும் அனைத்து இடங்களையும் நிரப்பிய பின்தான் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடங்கப்படும் என மறைமுக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தமிழ்நாட்டில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தகுதிகளில் அரசு சில மாற்றங்கள் கொண்டு வந்துள்ளதையடுத்து தஞ்சாவூரில் இயங்கி வரும் பொறியியல் கல்லூரி 'மாநில அரசு தேர்வுகளை நடத்தக்கூடாது' எனக் கோரி வழக்கு தொடுத்துள்ளது. உயர்



கல்லூரிகளில் அனுமதி கேட்டு காத்துக் கிடக்கும் கூட்டம்...



படிப்பகம்

www.padippakam.com

# ...ில் நெருக்கடி

## ...ாணிகளுக்கு மறுபெயர் சுயநிதிக் கல்லூரிகள்



...ல்லூரிகளில் கொள்ளைக்கெதிராக கொதித்தெழுந்துள்ள மாணவர் - ...ளைஞர் கூட்டம்...

...தி மன்றம் 'நுழைவுத் தேர்வு முடிவுகளை ...ர்ப்பு வரும்வரை வெளியிடக் கூடாது' ...ன்ற நிபந்தனையின் கீழ் மாநில அரசி ...னத் தேர்வு நடத்த அனுமதித்துள்ளது.

இத்தனியார் கல்வி நிறுவனங்களைத் ...தோடங்கி நடத்தி வருபவர்கள் யாரென்று ...ாருங்கள். தமிழ்நாட்டில் சாராய உடை ...ார், கள்ளச் சாராய அதிபதி ஜேப்பியார்; ...ிழைப்புவாதி வீரமணி; முன்னாள் எம்.பி. ...ண்முகம்; கள்ளப்பண மோசடிப் பேர்வழி ...ங்காரு அடிகள்; கர்நாடகாவில் பெஜா ...ர், சிரிகேரி, சித்தாகங்கா, தர்மசாலா மடா ...பதிகள்; ஒக்காலிகா மற்றும் லிங்காயத் ...ாதி சங்கங்கள். மகாராஷ்டிராவில் நிதி மந் ...ரி அதிக். இது தவிர சிறுபான்மை சமூகத்தி ...ர் என்ற பெயரில் கள்ளப்பண பேர்வழி ...ள். மறுபுறம் இவர்கள் நடத்திவரும் கல்லூ ...களில் பெரும்பாலானவை போதுமான ...ள்கட்டுமான வசதிகளின்றி கூரைக் கொட் ...கைகளிலும், வாடகை வீடுகளிலும் ...பங்கி வருவது ஊரறிந்த ரகசியம். தங்க ...ன் ஓட்டு வங்கியும், கஜானாவும் பாதிக் ...படும் என்ற அச்சம் காரணமாகவே ஆட் ...பாளர்கள் இச்சமூக விரோத கும்பல் ...ாடும் முட்டுக்கட்டைகளை எதிர்த்து, கல் ...ரிகள் திறக்கப்பட வேண்டிய காலம் ...ருங்கியும் கூட இறுதியான முடிவு எத ...னயும் அறிவிக்காதுள்ளனர். நீதிமன்றங்க ...ம் தங்கள் பங்குக்கு கட்டண நிர்ண ...ப்பை எதிர்த்த வழக்குகளின் தீர்ப்பை ஒத் ...வைத்து ஓர் இழுபறி நிலையை உருவாக் ...ுள்ளன.

1960-களிலிருந்தே நாட்டில் துளிர் விட ஆரம்பித்த இப்போக்கு இன்று ஒரு விஷ மரமாக ஆழமாக வேர்பிடித்துப் போயுள்ளது. கர்நாடகாவில் மட்டும் 61 தனியார் தொழில் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. ஆனால் அரசு நடத்தி வருவதோ வெறும் 9 கல்லூரிகள் மட்டுமே. ஆந்திராவில் ஒரே தவணையில் 12 தனியர் மருத்துவக் கல்லூரிகளைத் திறக்க அனுமதியளித்ததன் காரணமாகப் பதவியிலிருந்து விரட்டப்பட்டார் ஜனார்த்தன ரெட்டி. ஆனால் திடீரென முழித்துக்கொண்டு கல்வி பெறுவது குடிமகனின் அடிப்படை உரிமை எனத் தீர்ப்பளிக்கும் உச்சநீதி மன்றம், தனியார் கல்வி நிலையங்களைத் திறக்க அனுமதிக்கும் அரசின் கொள்கையைக் கண்டிக்கத் தயாராயில்லை. மாணவர்களைச் சேர்த்த பின்னர் நிர்வாகங்கள் மறைமுக வழிகளில் வசூலிக்கும் பல்வேறு கட்டணங்களை இத்தீர்ப்பால் ஒழித்துவிட முடியாது. மேலும் கட்டணம் செலுத்தி கல்வி பெறும் இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக்கியிருப்பதன் மூலம் மாதாந்திர ஊதியம் பெற்று வாழும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்களின் வாய்ப்புகூட தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. ஏழை மாணவர்களோ இனி இதனைப் பற்றிக் கனவு கூட காண முடியாது.

தனியார் தொழில் கல்வி நிறுவனங்கள் மட்டுமின்றி அரசு மற்றும் மானியம் பெறும் கலைக் கல்லூரிகள்கூட இன்று இப்பாதையில்தான் அடியொற்றிச் செல்லுகின்றன. வணிகவியல், இரசாயனவியல் துறைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குக் கூடுதலான போட்டியின் காரணமாக லஞ்சம் வாங்குவது, நன்கொடை பெறுவது என்பது ஒவ்வொரு வருடமும் நடந்து வரும் வழமையான நிகழ்ச்சி. எல்லாக் கல்லூரிகளிலும் கணிப்பொறி விஞ்ஞானம் கட்டணம் செலுத்தி கற்கும் துறையாகத்தான் நடந்து வருகிறது. திறந்தவெளிப் பல்கலைக்கழகமும், தொலைதூரக் கல்வி முறையும் எவ்வித முறையான, நேரடியான பயிற்சி வகுப்புகளுமின்றி காசு பறிக்கும் நோக்கத்துடனேயே பல்வேறு புதுப்புது பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு நடத்தப்படுகின்றன. சமீபத்தில் கல்லூரிக் கட்டணங்களை மாற்றியமைத்துள்ள அரசு, வழமையான விஞ்ஞான பாடத்திட்டங்களை வேலை கிடைக்கும் நோக்கத்துடன் செயல்முறை சார்ந்து மாற்றியமைக்கப் போவதாக அறிவித்துள்ளது. இம்மாற்றம் பணம் பறிப்பதற்கும், ஆசிரியர்கள் வேலை இழக்கச் செய்வதற்குமான ஓர் உத்தி எனக் குற்றஞ்சாட்டி ஆசிரியர் சங்கங்கள் எதிர்த்துள்ளன.

கல்லூரிகளின் லட்சணமே இதுவென்றால் எவ்விதக் கண்காணிப்புமின்றி கிராமம் / நகரம் என்ற பேதமில்லாது புற்றீசல் போல் பெருத்துவரும் நர்சரி / மெட்ரிகுலேஷன் பள்ளிகளைப் பற்றிக் கூற வேண்டியதேயில்லை. மாட்டுக் கொட்டில்கள்தான் இவர்களது கல்விச்சாலைகள். கல்விக் கட்டணத்துடன் நன்கொடை வசூலிப்பது, புத்தகங்கள், நோட்டுக்கள், சீருடைகள் போன்றவற்றைத் தங்கள் பள்ளியிலேயே வாங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தி கூடுதல் விலையில் விற்று கொள்ளை இலாபமடைவதுடன் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பொதி சுமக்கும் கழுதைகளாக இவை மாற்றி வருகின்றன.

போதிய நிதி வசதியின்மை காரணமாக ஆரம்பக் கல்விமுறை நசிந்து வருவதை ஆதங்கத்துடன் ஏற்றுக்கொள்ளும் அரசு ஒவ்வொரு வருடாந்திர பட்ஜெட்டிலும் கல்விக்காக ஒதுக்கும் தொகையைச் சுருக்கிக் கொண்டுதான் வருகிறது. தொழில் நுட்பங்களுக்கும் அந்நிய நாடுகளையே சார்ந்திருப்பதால் உயர் கல்வியினைக்கூட கை கழுவிக் கொண்டுதானுள்ளது. நிலவும் சமூக அமைப்பில் கல்வி என்பது அத்தியாவசியத் தேவையாக இருப்பதால் மறுபுறம் இது கல்வித்துறையில் சமூக விரோத கும்பல்களின் ஆதிக்கத்தைத்தான் ஏற்படுத்தி வருகிறது. மேலும் பெருகிவரும் விலையேற்றம், கல்விக்குக் கூடுதல் மானியம் ஒதுக்காதது போன்றவை கல்விக்கான செலவைக் கூடுதலாக்கி பெருவாரியான உழைக்கும் மக்களின் குடும்பங்களிலிருந்து வரும் மாணவர்கள் கல்வி பெற இயலாத நிலையை உருவாக்கும் அரசு, வேலைக்கானத் தகுதியை உயர்த்துவது, வேலையிலிருந்து கல்வியைப் பிரிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தான் பொறுப்பல்ல என எளிதாக கை கழுவிக் கொள்ளும்!

● ரஹீம்

படிப்பகம்

www.padippakam.com

# உலகம் முழுவதும் மேலாதிக்கப் படைகள்

*''சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது; உலக அமைதிக்கும் சமாதானத்துக்குமான போக்குகளே இன்று வளர்ந்து வருகின்றன'' என்று ஏகாதிபத்தியவாதிகள் பெருமையாகப் பசப்பினார்கள். இவ்வனைத்தும் அப்பட்டமான பித்தலாட்டம் என்பதை போஸ்னியா, சோமாலியா, கம்பூச்சியா, மொசாம்பிக் முதலான நாடுகளில் ஏகாதிபத்தியப் படை குவிப்பும், ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலும் அம்பலப்படுத்திக் காட்டி விட்டன. ஜனநாயகம் - மனித உரிமை மீட்பு, பயங்கரவாத எதிர்ப்பு என்கிற பெயரில் ஏழை நாடுகளை ஆக்கிரமிப்பதை ஏகாதிபத்தியங்கள் தமது புதிய மறுகாலனியாதிக்க உத்தியாக மேற்கொண்டு வருகின்றன.*


சோமாலியா - மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோரைக் காவு கொண்டு பட்டினிச் சாவுகளால் நிலை குலைந்து போன ஏழை ஆப்பிரிக்க நாடு. அங்கே பட்டினியால் பரிதவிக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்திடவும், இந்த அற்ப உதவிகளைச் செய்ய முடியாமல் உணவுப் பொருட்களைத் தட்டிப் பறித்துச் செல்லும் சோமாலிய யுத்தப் பிரபுக்கள், குண்டர்கள் கும்பலை நசுக்கவும் அங்கே அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் குவிக்கப்பட்டன. ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் இந்த அமைதிப் படையின் செயல்பாட்டுக்கு ''நம்பிக்கையை நிலைநாட்டும் நடவடிக்கை'' என்று பெருமையாகப் பெயர் சூட்டப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பரில் சோமாலியாவுக்கு வந்திறங்கிய அமைதிப் படைகள், அடுத்த சில நாட்களிலேயே உணவுக்காக வரிசையாக நிற்காத குற்றத்துக்காக எலும்பும் தோலுமான சோமாலிய மக்களையே தாக்கத் தொடங்கின. ஒவ்வொரு நாளும் உணவு வழங்கீடு நடக்கும்போது அது பெருங்கலவரமாகவே முடிந்தது. அமைதிப்படை வீரர்கள் பூட்சு காலால் எட்டி உதைத்து ஆபாச வார்த்தைகளால் ஏசி சோமாலிய மக்களை அடிமைகளைப் போல் நடத்தினார்கள். உணவுப் பொருட்களைக் கள்வாடிச் செல்லும் குண்டர்படையைச் சேர்ந்தவர்கள் என்று அப்பாவிகள் சோதனையிடப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். ஏழை நாட்டைச் சேர்ந்த, அதுவும் கறுப்பினத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற இனவெறி அகங்காரத்தோடு அமைதிப்படை எகத்தாளம் போட்டது. ஆனாலும் இவை யாவும் சோமாலியாவை பட்டினிப் பாதாளத்திலிருந்து மீட்கும் நடவடிக்கைகளாகவே சித்தரிக்கப்பட்டன.

அதேசமயம் அமைதிப்படையின் வருகையால் சோமாலிய இனக் குழுக்களுக்கிடையிலான மோதலும், குண்டர்களின் தாக்குதலும் ஒழிந்துவிடவில்லை. செஞ்சிலுவைச் சங்க வாகனங்களை வழிமறித்துக் கொள்ளையிடுவதும் தாக்குவதும் தொடரவே செய்தன. குறிப்பாக முன்னாள் ஜெனரல் அய்தித் தலைமையிலான கும்பல் உணவுப் பொருட்களைக் கொள்ளையிட்டு பெருந்தலைவலி கொடுத்து வந்தது. அய்தித் கும்பலும் சில இனக் குழுக்களும் தமது ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் ஐ.நா. படைகள் நுழைவதை எதிர்த்ததோடு, சோமாலியாவிலிருந்து ஐ.நா. படைகளை வெளியேறக் கோரி எதிர்த்தாக்குதலும் நடத்தி வந்தன. இனக் குழுக்களின் தாக்குதல் — அமைதிப் படையின் எதிர்த்தாக்குதல் என சோமாலியா ரணகளமாகிப் போனது.

### அமைதிப் படையா? ஆக்கிரமிப்புப் படையா?

இந்நிலையில் கடந்த ஜூன் 5-ந் தேதியன்று அய்தித் கும்பல் நடத்திய எதிர்த்தாக்குதலில் அமைதிப் படையில் அங்கம் வகித்த 20 பாகிஸ்தானிய சிப்பாய்கள் மாண்டு போனார்கள். இச் செய்தியை




**சோமாலியாவிலிருந்து போஸ்னியா புறப்படும் அமெரிக்க இராணுவத்தைக் குறிக்கும் கேலிச்சித்திரம்**

அறிந்ததும் அமெரிக்கா அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தது. தனது தலைமையிலான படைக்கே சவால் விடுமளவுக்கு ஒரு சிறு கும்பல் ஆட்டம் போடுவதை ஒருக்காலும் அனுமதிக்கவே முடியாது என்று கொக்கரித்தது. தனது கைப்பாவையான ஐ.நா. மன்றத்தின் ஒப்புதலுடன் கடந்த ஜூன் 12-ம் தேதியன்று தலைநகர் மொகதிஷூவில் அய்தித் கும்பல் பதுங்கியுள்ள இடங்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறிக் கொண்டு குடியிருப்புப் பகுதிகள் மீதே காட்டுமிராண்டித்தனமான வான்வழித் தாக்குதலை அமெரிக்கா நடத்தியது.

ஜெனரல் அய்தித் கும்பலை நசுக்குவதற்காக போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் பீரங்கிகளும் அமெரிக்காவால் ஏவிவிடப்பட்டன. இதோடு அமெரிக்கா தலைமையிலான அமைதிப் படைகள் தரை வழியேயும் தாக்குதலை நடத்தின. அய்தித் கும்பலைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்: அக்கும்பலைக் கைது செய்து தண்டனை அளிக்க வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் அமெரிக்காவின் அடாவடித்தனத்துக்கு ஒப்புதல் அளித்தது. தலைநகர் மொகாதிஷூவை ஐ.நா. கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருமாறு ஐ.நா. கூட்டுப் படையின் அமெரிக்கத் தலைவரான ஜெனரல் கோலின் போவெல்லுக்கு உத்திரவுகள் பறந்தன. இதற்கிடையே 4 அமெரிக்கப் பீரங்கிப் படகுகளும் 2,000 அதிரடிப் படைவீரர்களும் சோமாலியாவை முற்றுகையிட்டன. இத்தாக்குதலுக்கு ''தொடர் நம்பிக்கையூட்டும் நடவடிக்கை'' எனவும் பெயர் சூட்டப்பட்டது.

அய்தித் கும்பலை நசுக்குவது என்ற பெயரில் அமெரிக்கா நடத்திய இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 50-க்கும் மேற்பட்ட சோமாலிய மக்கள் மாண்டு போனார்கள். குறிப்பாக பெண்களும் குழந்தைகளுமே இதில் அதிகம்.

### ''அமெரிக்க நாய்களே, நாட்டைவிட்டு வெளியேறு!''

உதவி என்ற பெயரில் உள்ளே நுழைந்து தங்கள் உயிரையே பறிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

அமைதிப் படைக்கு எதிராக சோமாலிய மக்கள் ஆத்திரத்துடன் கிளர்ந்தெழுந்தார்கள். பட்டினி கிடந்தாலும் தங்கள் சுயமரியாதையை இழந்துவிட அவர்கள் ஒரு போதும் தயாராக இல்லை. அமைதிப் படையின் தாக்குதலால் மாண்டு போனவர்களின் இறுதி ஊர்வலம் அரசியல் ஆர்ப்பாட்டமாகத் திரும்பியது. தலைநகர் மொகதிஷுவில் பல்லாயிரக்கணக்கான சோமாலிய மக்கள், "அமெரிக்க நாய்களே, வெளியேறு! அமைதிப் படையின் அட்டூழியம் ஒழிக!" என்று முழங்கியபடியே மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். அம்பலப்பட்டு ஆத்திரமடைந்த பன்னாட்டு அமைதிப்படை - குறிப்பாக பாகிஸ்தானிய படை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வெறித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 20-க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்தது. 50-க்கும் மேலானோர் படுகாயம



கம்போடியாவில் போலி ஜனநாயகத் தேர்தலையும் ஐ.நா. படைகளே நடத்தின.

டைந்தனர். இந்த வெட்கக்கேடான தாக்குதலுக்கும் ஐ.நா. மன்றம் அங்கீகாரம் அளித்து நியாயப்படுத்தியுள்ளது.

மனிதாபிமான நிவாரண உதவி, பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்பது, நிவாரண உதவி செய்வோர்க்கு பாதுகாப்பு அளிப்பது என்ற பெயரில் சோமாலியாவில் நுழைந்தது அமெரிக்கா. அதன் உண்மையான நோக்கம், சோமாலியாவின் சுயாதிபத்திய உரிமையை நசுக்கி, அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவதுதான் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. கையளவேயான அய்த்தித் கலகக் கும்பலைக் கட்டுப்படுத்த அதிரடிப் படையிலிருந்து ஏவுகணை, போர் விமானங்கள், போர்க் கப்பல்கள், ஹெலிகாப்டர்கள் என பெருமளவு ராணுவத்தைக் கொண்டு போய் குவித்தவுடனேயே அதன் ஆக்கிரமிப்பு — மேலாதிக்க நோக்கம் நிரூபணமாகிவிட்டது. பஞ்சம் பாரித்த சோமாலியா இன்று அமெரிக்காவின் புதிய வகை காலனியாக அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

உலகின் தனிப்பெரும் ராணுவ வல்லரசாக மேலாதிக்கம் செலுத்தும் அமெரிக்காவின் அடாவடித்தனத்துக்கு அண்மைக் கால உதாரணம்தான் சோமாலியா. சோமாலியா மட்டுமின்றி, வளைகுடா, யூகோஸ்லாவியா, ஆப்கான், மொசாம்பிக், கம்பூச்சியா முதலான நாடுகளிலும் பன்னாட்டு அமைதிப்படை என்ற பெயரில் தனது மேலாதிக்கத்தை படிப்படியாக நிறுவுவதையே அமெரிக்க வல்லரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

● கம்பூச்சியாவில் சோவியத் ஆதரவு பொம்மை அரசுக்கு எதிராக போராளிகள் நடத்திவரும் விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், மோசடித் தேர்தல் நடத்தி தமது விசுவாச அரசை நிலைநாட்டவும் ஏகாதிபத்தியங்கள் கம்பூச்சிய விவகாரத்தில் தலையிடத் தொடங்கின. ஜனநாயகத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவது என்ற பெயரில், ஐ.நா. மன்ற ஆதரவுடன் ஏகாதிபத்தியப் படைகள் கம்பூச்சியாவை ஆக்கிரமித்துக் கொண்டன. ஏகாதிபத்திய 'அமைதிப்' படைகள் போராளிகள் மீது தாக்குதல் நடத்தியதோடு, தமது விசுவாச ஆளுங்கட்சியின் வெற்றிக்காக தேர்தல் மோசடிகளிலும் ஈடுபட்டன. ஆனாலும் ஆளுங்கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற முடியாமல் தோல்வியடைந்தது. தேர்தல் முடிந்த பின்னரும், மீண்டும் உள்நாட்டுப் போருக்கான அபாயம் நிலவுவதாகக் கூறிக்கொண்டு அமைதிப்படைகள் இன்னமும் கம்பூச்சியாவில் நிலை கொண்டுள்ளன.

● இதேபோல அங்கோலா, மொசாம்பிக், லைபீரியா, ஜைரே முதலான ஆப்பிரிக்க நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது என்ற பெயரில் ஏகாதிபத்தியப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன.

● ஏற்கனவே தென் அமெரிக்க, மத்திய அமெரிக்க நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, போதை மருந்துக் கடத்தலைத் தடுப்பது என்ற பெயரில் அமெரிக்கா தனது படைகளைக் குவித்துள்ளது.

● அணு ஆயுதப் பரவல் தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு என்ற முகாந்திரங்களைக் காட்டி வடகொரியாவிலும் லிபியாவிலும் தலையிட அமெரிக்கா இப்போது தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

### புதிய வகையில் மறுகாலனியாதிக்கம்

உலகின் மிகப்பெரும் ராணுவ மேலாதிக்க வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியத்தின் சிதைவைத் தொடர்ந்து, "இனி பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது; பதற்றம் தணிந்துவிட்டது; ஆயுத உற்பத்திக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும் அவசியமில்லாமல் போய்விட்டது; இனி யுத்தமே கிடையாது; அமைதிக்கும் சமாதானத்துக்குமான பாதையில் உலகம் பீடுநடைபோடத் தொடங்கிவிட்டது" என்று ஏகாதிபத்தியவாதிகள் காதுகிழிபடக் கூச்சலிட்டார்கள். ஏகாதிபத்தியங்கள் சைவப் புலியாக மாறிவிட்டதாகப் பசப்பினார்கள்.

இவையனைத்தும் எவ்வளவு பெரிய மோசடி என்பதை பனாமா, ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தங்களும் தற்போது சோமாலியா, யூகோஸ்லாவியாவில் தொடரும் அடாவடித்தனங்களும் நிரூபித்துக் காட்டிவிட்டன. ஏகாதிபத்தியங்கள் ஒருக்காலும் சைவப் புலியாக மாறிவிடாது; ஏகாதிபத்தியங்கள் நீடிக்கும் வரை ஆக்கிரமிப்பு யுத்தங்களும் காலனியாதிக்கமும் ஒழிந்துவிடாது என்கிற மார்க்சிய உண்மையை மீண்டும் மெய்ப்பித்துக் காட்டிவிட்டன.

முன்பு சோவியத் ஒன்றியம் ஒரு வல்லரசாக நீடித்தபோது, கம்யூனிச அபாயத்தை முறியடிப்பது என்ற பெயரில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், குறிப்பாக ஐரோப்பாவிலும் தனது படைகளையும் அணு ஆயுத ஏவுகணைகளையும் அமெரிக்கா கொண்டு போய் குவித்தது. தனது மேலாதிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கம்யூனிச எதிர்ப்பு போர்வையில் மூடிமறைத்து நியாயப்படுத்தியது.

இப்போது ஜனநாயகம் - மனித உரிமை மீட்பு, பயங்கரவாத எதிர்ப்பு, போதை மருந்து தடுப்பு என்கிற பெயரில் புதிய எதிரிகளைக் காட்டி தமது ஆக்கிரமிப்புகளை ஏகாதிபத்தியவாதிகள் நியாயப்படுத்தி வருகிறார்கள். அவர்களின் எதிரிகள் தற்காலிகமானவர்கள். நாளை புதிய எதிரிகள்கூடத் தோன்றுவார்கள். ஆனால் ஆக்கிரமிப்பும் மேலாதிக்கமும் நிலையானது; ஒருக்காலும் அது மாறிவிடாது.

தங்கள் ஆக்கிரமிப்பு நோக்கங்களை மூடி மறைக்க ஏகாதிபத்தியப் படைகளுடன் ஏழை நாட்டுப் படைகளையும் அவர்கள் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அதற்கு சர்வதேச அமைதிப் படை என்று பெயர் சூட்டி ஜனரஞ்சகத் தோற்றத்தையும் அளிக்கிறார்கள். முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் சார்பு நாடுகளைக் கைப்பற்றவும், மேலாதிக்கம் செலுத்தவும், உலகை மறுபங்

படிப்பகம்

www.padippakam.com

கீடு செய்யவும் இந்த அமைதிப் படைக ளைக் கொண்டு போய்க் குவிக்கிறார்கள். உண்மையில் இது ஒருவகை மறுகாலனியா திக்கம்தான். ஏழை நாடுகளில் தமது விசு வாச பொம்மை அரசை நிறுவி காலனியா திக்கத்தை தொடர்வதென்பது ஏகாதிபத்தி யங்களின் பழைய நடவடிக்கையாகிவிட் டது. இப்போது ஜனநாயகம் - மனித உரிமை மீட்பு என்ற பெயரில் சர்வதேச அமைதிப் படையைக் கொண்டு நேரடி ராணுவ ஆக்கிரமிப்பு செய்வது அவர்க ளின் புதிய உத்தியாக உள்ளது.

### ஏகாதிபத்தியங்களிடையே கூட்டும் போட்டியும்

ஏகாதிபத்தியவாதிகள் உலகை மறு பங்கீடு செய்வதிலும் ஆக்கிரமிப்பதிலும் ஓரணியில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். அதே சமயம் ஒவ்வொரு ஏகாதிபத்தியமும் தமது சொந்த ஆதாயத்திற்காகவும் மேலாதிக்க நோக்கங்களுக்காகவும் முரண்பட்டு மோதிக்கொள்கின்றன. மேலாதிக்கப் போட்டியில் வெல்வதற்காக முன்பு அமெ ரிக்காவும் சோவியத் ஒன்றிய வல்லரசும் நாய்ச்சண்டையில் ஈடுபட்டதைப் போல, இப்போது அமெரிக்கா, ரஷியா, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன், ஜப்பான் ஆகிய ஏகாதி பத்தியங்கள் தீராத சண்டையில் இறங்கியுள் ளன. யூகோஸ்லாவிய விவகாரம் அவர்க ளின் நாய்ச்சண்டைக்கு எடுப்பான உதார ணமாகத் திகழ்கிறது.

யூகோஸ்லாவியா தனித்தனி நாடுக ளாகச் சிதறுண்ட பிறகு, செர்பிய இனவெறி யர்கள் நடத்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் போஸ்னியா சுடுகாடாக மாறி வருகிறது. போஸ்னியாவைக் கைப்பற்றும் நோக்கத்துடன் செர்பியர்களும் குரோஷியர் களும் நடத்தும் தாக்குதலாலும் வரைமுறை யற்ற பாலியல் வன்முறைகளாலும் போஸ் னிய முஸ்லீம்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாகி அல்லற்படுகிறார்கள். போஸ் னியாவில் தொடரும் செர்பிய காட்டுமி ராண்டித்தனத்துக்கு எதிரான உலக மக்க ளின் கண்டனத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, ஏகாதிபத்தியங்கள் போஸ்னியா வில் தலையிடத் தொடங்கின.

இருப்பினும், இப்பிராந்தியத்தில் யார் மேலாதிக்கம் செலுத்துவது என்பதில் ஏகா திபத்தியங்களிடையே போட்டாபோட்டி நிலவுகிறது. இப்பிராந்தியத்தில் தனது படைகளைக் குவிப்பதன் மூலம் ஐரோப்பா வையே மேலாதிக்கம் செய்ய அமெரிக்கா துடிக்கிறது. அமெரிக்காவின் முயற்சியை ஐரோப்பிய சமூக நாடுகள் கடுமையாக எதிர்க்கின்றன. செர்பியப் படைகள் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் குண்டு வீசித் தாக்குவது, போஸ்னிய படைக ளுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் அளிப் பது என்று அமெரிக்கா முன்வைத்த ஆலோ சனையை பிரான்சும் ஜெர்மனியும் கடுமை யாக எதிர்த்து நிராகரித்துவிட்டன. அமெ ரிக்கப் படைகளுக்குப் பதிலாக, ஐரோப் பிய சமூக நாடுகளின் படைகளை ''ஐரோப் பிய தற்காப்புப் படை'' என்ற பெயரில் அனுப்ப முயற்சிக்கின்றன. இதன் காரண மாகவே போஸ்னிய விவகாரத்தில் ஏகாதி பத்தியங்களிடையே உடன்பாடோ ஒற்று மையோ ஏற்படவில்லை. போஸ்னிய முஸ் லீம்கள் மீதான செர்பியாவின் இனவெறித் தாக்குதலும் ஓயவில்லை.

இருப்பினும் உலக மக்களிடம் தமது நாய்ச்சண்டை அம்பலப்பட்டுவிடாதிருக்க, தற்காலிக சமரசத்துக்கு அவர்கள் உடன்பட் டுள்ளனர். இதன்படி போஸ்னிய மக்க ளைப் பாதுகாத்து நிவாரண உதவிகளைச் செய்யும் வகையில் 6 இடங்களில் ''பாது காப்பு புகலிடங்களை'' அமைப்பது, இவற்றை ஐரோப்பிய சமூக நாடுகளின் படைகள் பாதுகாப்பது, அமெரிக்கப் படை கள் போஸ்னியாவுக்குள் நுழையக் கூடாது, அவசியமேற்படும் போது மட்டும் அமெ ரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தலாம் என்று உடன்பாடாகியுள்ளது.

செர்பிய இனவெறித் தாக்குதலை முறி யடிப்பது, போஸ்னியாவில் அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில் ஏகாதிபத் தியங்கள் தமது படைகளைக் குவித்து ஆக் கிரமித்துள்ள நிலையில், இனி போஸ்னியா சுதந்திர நாடாக நீடிக்க அடிப்படையே இல்லை. போஸ்னிய மக்கள் தமது உணவுக் கும் பாதுகாப்புக்கும் இனி ஏகாதிபத்தியங் களை நிரந்தரமாகச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்க னவே சோமாலியாவை இந்த நிலைக்குத் தள்ளி அடிமைப்படுத்தி விட்டனர்.



போஸ்னியா: அமைதிப்படையா? ஆக்கிரமிப்புப் படையா?

### கசாப்புக்காரர்களின் காருண்ய நாடகம்

இதிலே கொடுமை என்னவென்றால் போஸ்னியா, சோமாலியாவின் இன்றைய நிலைக்கு மூலகாரணமே ஏகாதிபத்தியங் கள்தான். முன்னாள் யூகோஸ்லாவியாவி லிருந்து குரோஷியா தனிநாடாகப் பிரிந்து கலகம் செய்தபோது, குரோஷிய விடுத லையை ஐரோப்பிய சமூக நாடுகள் — குறிப்பாக ஜெர்மனி — அவசரமாக ஆத ரித்து அங்கீகரித்தன. இதைப் பார்த்து நம் பிக்கை அடைந்த போஸ்னியா, மாண்டே நீக்ரோ முதலான தேசிய இனங்களும் தனி நாடாகப் பிரிந்ததும் இனவெறி மோதல்க ளால் யூகோஸ்லாவியா நொறுங்கிச் சிதைந் தது. யூகோஸ்லாவியாவின் பெரும் பான்மை தேசிய இனமான செர்பியர்களை இதன் மூலம் வலுவிழக்கச் செய்த பிறகு ஏகாதிபத்தியங்கள் தலையிட்டு ஆதிக்கம் செலுத்துவது மிகச் சுலபமாகிவிட்டது. பிரி வினையையும் இனவெறியையும் தூண்டி விட்ட அவர்களே இன்று இனவெறித் தாக் குதலைத் தடுக்கும் அமைதிப் படையாக வலம் வருகிறார்கள்.

இதேபோல சோமாலியாவின் பஞ்சத் துக்கும் பட்டினிச் சாவுகளுக்கும் காரண மாக இருந்தது ஏகாதிபத்தியங்கள்தான். ஐ.எம்.எஃப்.பின் கடன் சுமை, உலக வங்கி யின் நிர்பந்தம், சுயசார்புக்கு எதிரான விவ சாயக் கொள்கைகள் என படிப்படியாக சோமாலியா பஞ்ச பூமியாக்கப்பட்டது. ஏகாதிபத்தியங்கள் உறிஞ்சிக் கொழுத்த பிறகு, எலும்பும் தோலுமான லட்சக்கணக் கான சோமாலிய மக்கள் பட்டினியால் மாண்டு போனார்கள். சோமாலியாவைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிய அதே ஏகாதி பத்தியவாதிகள்தான் இன்று நிவாரண உத விகளைச் செய்யும் இரட்சகர்களாக வலம் வருகிறார்கள்.

### போர்வெறிப் பாதையில் 'ஜனநாயகவாதி' கிளிண்டன்

உதவி — ஜனநாயகம் — மனித உரிமை மீட்பு என்ற பெயரில் படைகளைக் குவித்து உலகை மறுபங்கீடு செய்து ஆதிக் கம் செலுத்தும் ஏகாதிபத்தியங்களுக்கு இத் தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இன் னொரு வகையில் அவசியமாக இருக்கின் றன. ஏகாதிபத்திய நாடுகளில் பெருகிவ ரும் நெருக்கடிகளிலிருந்து மக்களின் கவ னத்தைத் திசை திருப்பவும், இற்றுவிழுப் தமது அரசியல் செல்வாக்கை தூக்கி நிறுத்த வும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இத்தகைய சாகசவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அவசியமாகிவிட்டன. உலகின் மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவின் அதி பர் கிளிண்டன் ஆட்சிக்கு வந்த 4 மாதங்க ளிலேயே தனது செல்வாக்கு சரிய தொடங்கியதும், அதை தூக்கி நிறுத்த போர்வெறியன் புஷ்ஷின் பாதையிலேயே இப்போது கிளம்பியிருக்கிறார்.

இராணுவச் செலவுகளுக்கு வெட்டு பற்றாக்குறை பட்ஜெட்டைக் குறைப்பது நல்வாழ்வுத் திட்டங்களுக்கு முன்னுரிமை என்ற பெயரில் அமெரிக்க அதிபர் கிளின் டன் கொண்டு வந்த அதிரடித் திட்டங்க எல்லாம் மக்களிடம் அம்பலப்பட்டு பு வாணமாகிவிட்டது. அண்மையில் டைம் சி.என்.என். ஆகிய பத்திரிகை, தகவ ஒளிபரப்பு நிறுவனங்கள் நடத்திய ஆ

படிப்பகம்

www.padippakam.com

வின்படி வெறும் 35% மக்கள் மட்டுமே
கிளிண்டனை ஆதரிக்கிறார்கள். அமெரிக்
க் குடியரசுத் தலைவர்களிலேயே வரலாறு
காணாத அளவுக்கு மிக அற்பமாக செல்
வாக்கு பெற்ற நிலையில் கிளிண்டன் உள்
ளார் என்று அமெரிக்கப் பத்திரிகைகளே
ரிகசிக்கின்றன. எனவேதான் உள்நாட்டு
நெருக்கடியை திசைதிருப்பவும், இற்று
விழும் செல்வாக்கை தூக்கி நிறுத்தவும்
ஜனநாயகவாதி' கிளிண்டன் பகிரங்கமா
வே ஆக்கிரமிப்புப் போரில் இறங்கி யிருக்
கிறார்.

உலகில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர
இயக்கங்கள் பிளவுபட்டு பலவீனமாக
இருப்பதாலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு
தசிய விடுதலை இயக்கங்கள் பின்னடை
வுக்குள்ளாகி இருப்பதாலும், தேசிய முத
லாளிய, குட்டி முதலாளிய இயக்கங்கள்
வீரியமும் உறுதியுமின்றிக் கிடப்பதாலும்
இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு ஏகாதி
பத்தியங்கள் மேலும் மூர்க்கமாகவும்
வெளிப்படையாகவும் தமது ஆக்கிரமிப்பு
நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்
றன. உதவி, ஜனநாயகம், மனித உரிமை
என்ற பெயரில் சோமாலியா, போஸ்னியா,
கம்பூச்சியா, மொசாம்பிக் முதலான நாடுக
ளில் படைகளைக் குவித்துள்ள ஏகாதிபத்தி
யங்கள், இப்படி எந்தவொரு மூடுதிரையு
மின்றி வெளிப்படையாகவே ஜைரே,
லைபீரியா முதலான ஆப்பிரிக்க நாடுகளில்
தமது படைகளைக் கொண்டு போய் குவித்
துள்ளன.

ஜனநாயகம், மனித உரிமை பற்றி கூப்
பாடு போடும் இதே ஏகாதிபத்தியங்கள்,
தமது விசுவாசிகள் ஆளும் நாடுகளில் பாசி
ச காட்டுமிராண்டித்தனத்தைக் கட்ட
விழ்த்து விட்டாலும் அதைக் கண்டுகொள்
வதே இல்லை. உதாரணமாக, அமெரிக்கா
வின் கூலிப்படை நாடாகத் திகழும் இஸ்
ரேல், இனவெறி, ஆக்கிரமிப்பு, மனித
உரிமை மீறல், அணு ஆயுதக் குவிப்பு,
பயங்கரவாத நடவடிக்கைகள் என எல்லா
வகையிலும் நிரூபிக்கப்பட்ட காட்டுமி
ராண்டி நாடாகத் திகழ்கிறது. ஐ.நா. மன்றத்
தின் உத்திரவுகளையே துச்சமாக மதித்து
கொட்டமடிக்கிறது. ஆனாலும் அமெரிக்கா
உள்ளிட்டு எந்த ஏகாதிபத்திய நாய்களும்
இதை எதிர்ப்பதில்லை; இராணுவத் தலை
யீடு செய்யவும் முன்வரவில்லை. மாறாக,
இஸ்ரேலை இன்னமும் ஆதரித்தே வருகின்
றன.

இந்நிலையில், மறுகாலனியாதிக்க
ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடத்திவரும்
ஏகாதிபத்தியங்களையும், அவற்றின் நடவ
டிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்து நியா
யப்படுத்தும் ஐ.நா. மன்றத்தின் மோசடிக
ளையும் அம்பலப்படுத்தி முறியடிக்க
வேண்டும். ஏகாதிபத்தியங்களுக்கு எதி
ராக ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் நடத்
தும் போராட்டங்களுக்கு ஆதரவாக உல
கெங்குமுள்ள மக்கள் ஓரணியில் திரண்டு
போர்ந்தெழ வேண்டும். இன்றைய ஏகாதி
பத்திய ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும்,
நாளைய வெற்றியை உறுதிப்படுத்தவும்
இது அவசியமாகும்.

● மனோகரன்

## ஈராக்கில் மீண்டும் அமெரிக்க அடாவடி

முன்னாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷை ரகசியமாகக் கொலை சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டி, ஈராக் மீது காட்டுமிராண்டித்தனமான ஏவுகணைத் தாக்குதலை அண்மையில் அமெரிக்கா நடத்தியுள்ளது. செங்கடல் மற்றும் வளைகுடாப் பிராந்தியத்திலுள்ள அமெரிக்கப் போர்க் கப்பல்களிலிருந்து கடந்த ஜூன் 27-ந் தேதியன்று, ஈராக்கின் உளவு நிறுவனத் தலைமையகத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலால் அதன் இரு கட்டிடங்களும் அருகிலிருந்த குடியிருப்புக் கட்டிடங்களும் தரைமட்டமாகி நொறுங்கி விழுந்தன. ஈராக்கின் புகழ்பெற்ற பெண் ஓவியர் உட்பட ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக 15-க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் இத்தாக்குதலில் மாண்டு போயினர். 50-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஓர் ஆக்கிரமிப்பு யுத்த நடவடிக்கையைப் போல ஏறத்தாழ 350 கோடி ரூபாய் செலவில் தொடர்ச்சியாக 26 ஏவுகணைகள் ஈராக் மீது ஏவப்பட்டுள்ளன. அமெரிக்க உளவுத்துறை சேகரித்த தகவலின்படி, இரு மாதங்களுக்கு முன்பாகவே முன்னாள் அதிபர் புஷ்ஷை தீர்த்துக் கட்டும் சதி மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தனது தாக்குதலுக்கு நியாயம் கற்பித்துள்ளார், 'ஜனநாயக' அதிபர் கிளிண்டன். பிரிட்டன், ரஷ்யா உள்ளிட்ட மேலைநாடுகள் அமெரிக்காவின் கோழைத்தனமான இத்தாக்குதலை ஆதரித்துள்ளன.

ஈராக் இப்படியொரு சதியில் ஈடுபட்டதற்கான ஆதாரம் எதையும் அமெரிக்கா இன்றுவரை வெளியிடவில்லை. மேலும் இப்படியொரு சதியில் ஈராக் ஈடுபட்டிருப்பது உண்மையானால், அதற்கான விசாரணையும் நடத்தப்படவில்லை. ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்துவது பற்றி ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலிடமும் அமெரிக்கா முன் அனுமதி பெறவில்லை. இத்திடீர் தாக்குதலால் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைப் பற்றி அறிந்திருந்த போதிலும், முன்னெச்சரிக்கையைக்கூட அமெரிக்கா தரவில்லை. "யாரையும் கேட்கவேண்டியதில்லை; நான் வைத்ததுதான் சட்டம்; என்னை எதிர்ப்போரை பழிவாங்கியே தீருவேன்" என்று அடாவடித்தனமாக கொக்கரிக்கிறது அமெரிக்கா.

ஏற்கனவே கடந்த பிப்ரவரி மாதத்தில் ஈராக்கின் அணு ஆயுத ஆற்றலை அழித்து, குர்து இன மக்களைக் காப்பாற்றப் போவதாகக் கூறிக் கொண்டு அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது. அதுவும் போதாதென்று ஈராக்கின் போர் விமான தளங்கள், ராடார் சாதனங்களையும் தாக்கியதோடு, ஈராக்கைச் சுற்றி பெருமளவு படைகளைக் குவித்து தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறது.

இது ஈராக்கின் அதிபர் சதாம் உசைனை மிரட்டிப் பணியவைக்கும் நடவடிக்கை மட்டுமல்ல; நாளை இப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி எந்தவொரு ஏழை நாட்டின் மீதும் ஆக்கிரமிப்பு தாக்குதல் நடத்துவதற்கான ஒத்திகை தான் இது. இதோடு மேற்காசியாவில் மேலாதிக்கம் செலுத்துவதற்கான நடவடிக்கையின் ஒரு அங்கம்தான் இது. ஈராக்கைத் தொடர்ந்து இப்போது சூடான் மீதும் ஈரான்மீதும் தாக்குதல் நடத்தப் போவதாக அமெரிக்கா மிரட்டி வருகிறது.

போர்வெறியின் புஷ்ஷுக்குப் பதிலாக 'ஜனநாயக'வாதி கிளிண்டன் அதிபராக வந்துள்ளதால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை ஒருபோதும் மாறிவிடாது. ஏகாதிபத்தியவாதிகள் வீழ்த்தப்படாதவரை, தமது ஆயுதங்களைக் கீழே போட்டு ஒருபோதும் புத்தர்களாகிவிட மாட்டார்கள் என்பதையே ஈராக் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலால் மாண்டு போனவர்களின் இறுதி ஊர்வலம்: ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டம்**



படிப்பகம்

# மீண்டும் அதே கேள்வி: பார்ப்பனரா




● நான் தொடர்ந்து படித்துவரும் நல்ல, முற்போக்கான பத்திரிகை 'புதிய ஜனநாயகம்'. ஆனால் உங்கள் அமைப்பு பார்ப்பனத் தலைமை உள்ள அமைப்பாம். ''என்னதான் முற்போக்காகப் பேசினாலும் எழுதினாலும் பார்ப்பனியம் புரட்சி செய்யாது'' என்று வாதிடும் இங்குள்ள சில அன்பர்களுக்கு என்னால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. இதற்குத் தெளிவானதொரு பதில் அளிக்கவும்

— எஸ்.குமார், கும்பகோணம்

● டாக்டர் அம்பேத்கார், ''பார்ப்பான் புரட்சி செய்ய மாட்டான்'' என்று கூறியுள்ளார். சமுக, பண்பாடு, பொருளாதாரப் புரட்சிக்கே இவ்வாறு கூறியுள்ளார். நமது மார்க்சிய அரசியல் புரட்சிக்கு நிச்சயம் அவரது கூற்று மிகச் சரியாகப் பொருந்தும். ஆதிக்க உணர்வு எல்லா மனிதர்க்கும் இயற்கைதான் எனினும் பார்ப்பனர்களுக்கு வளர்ப்பு முறையில் அது ஏற்பட்டுள்ளது. தற்போது சமுக, பொருளாதார சூழ்நிலைகளால் புரட்சிகர இயக்கங்களில் சேர்ந்து புரட்சிக்கு பாடுபடலாம். தக்க சூழ்நிலை வரும் போது அவர்களது ஆதிக்க உணர்வு வெளிப்படும். அது புரட்சிகர அமைப்பைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும். எனவே அவர்களை அமைப்புத் தலைமைக்கு ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதே அமைப்புக்கு உகந்ததாக இருக்கும் என நினைக்கிறேன். தங்கள் பதில் என்ன?

— நிரந்தரன், பெரிய புறங்கணி

☆ தமிழினவாதிகளின் ''தாயகம்'', திராவிடர் கழகத்தின் ''உண்மை'' ஆகிய ஏடுகள் மூலம் அறிய வந்ததாகக் கூறிக் கொண்டு, இதேபோன்று, எமது அமைப்பில் ''பார்ப்பனத் தலைமை'' என்கிற கேள்விக்கு சரியாக ஓராண்டுக்கு முன்பு (1992 ஜூனில்) புதிய ஜனநாயகத்தில் பதில் எழுதியுள்ளோம். ஓராண்டாகியும் எமது விளக்கத்திற்கு மறுப்போ, பதிலோ சொல்ல எவருமே துணியவில்லை. அதற்கான மறுப்பும் பதிலும் அவர்களிடம் கிடையாது. ஆனால் கொஞ்சமும் நேர்மையற்ற முறையில் தமது அவதூறுகளை மட்டும் பரப்பி வருவதாகத் தெரிகிறது. நாம் முன்பு அளித்த பதில் சாராம்சமாகப் பின்வருமாறு:

1. பிறப்பால் பார்ப்பனர்களாகவும், இருப்பால் சூத்திரர்களாகவும் - பஞ்சமர்களாகவும் வாழும் ஒருசில தோழர்கள், எமது அமைப்பின் முக்கியப் பொறுப்புகளில் இருப்பது உண்மையே! இதை நாங்கள் பகிரங்கப்படுத்தவோ, மூடிமறைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர்கள்தான் எமது அமைப்பின் தலைமையாக இருப்பதாகக் கூறுவது அப்பட்டமான பொய்யும் அவதூறுமாகும். அதே சமயம் அவர்கள் மற்ற பிற தோழர்களைப் போலவே கடின உழைப்பும் அர்ப்பணிப்பும், சித்தாந்த - கொள்கை உறுதியும் தகுதியும் அனுபவமும் மக்களையும் புரட்சியையும் நேசிப்பதும் இருப்பின் ஜனநாயகபூர்வமான முறையில் தலைமைக்கு வரவும் தடை ஏதும் கிடையாது; ஏனென்றால் இந்த அமைப்புக்குள் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு எதுவும் கிடையாது. இன்ன சாதிப் பிறப்புடையவர்கள் தலைமைக்கு வரலாம் அல்லது வரக்கூடாது என்கிற விதி எதுவும் எமது அமைப்பில் கிடையாது. இது ஒரு மார்க்சிய - லெனினிய அமைப்பு. இங்கே சாதி அடிப்படையிலான கம்யூனிஸ்டுகளிடையே வகைப்பிரிவுகள் இல்லை. ஏனென்றால் சமுதாயத்தில் சாதியை ஒழிப்பதற்கு முன் புரட்சிகர அமைப்புகளில் சாதியை ஒழித்திட வேண்டும் என்பதுதான் எமது கொள்கை. அதுமட்டுமல்ல; எமது அமைப்பின் அரசியல், சித்தாந்த, கொள்கை மற்றும் அமைப்பு முடிவுகள் முற்றிலும் ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. அப்படி இருக்கும் போது இது பார்ப்பனத் தலைமையுடையது. அவர்கள்தான் முடிவுகள் எடுத்து வழி நடத்துகிறார்கள் என்கிற அவதூறு இதில் இயங்கிவரும் தோழர்கள் அனைவரையும் இழிவுபடுத்துவதாகும்.

2. பார்ப்பன சனாதன வருணாசிரம சாதிய அமைப்பை முற்றாகத் துடைத்தெறியாமல் இந்த நாட்டின் ஜனநாயகப் புரட்சியோ அதன் ஒரு அங்கமாகிய தேசிய இன விடுதலையோ பூர்த்தியாகாது; இந்த அமைப்பை எப்படியாவது தக்கவைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் அனைவரும் ஜனநாயகப் புரட்சிக்கும் தேசிய இன விடுதலைக்கும் எதிரிகள்தாம். அப்படிப்பட்ட எதிரிகளாகப் பார்ப்பனர்கள் அனைவரையுமே கருத முடியாது. பார்ப்பன மற்றும் பார்ப்பனர் அல்லாத பிற மேல் சாதிகளையும் சேர்ந்த நிலப்பிரபுக்களையும் தரகு அதிகார முதலாளிகளையும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளையுமே எதிரிகளாகக் கருத முடியும். அவ்வாறின்றி பார்ப்பன சாதி - வருணாசிரமப் பிறப்புடைய அனைவருமே எதிரிகள், ''உள்ளிருந்தே அடுத்துக் கெடுக்கும் நரித்தனம்'' அவர்களுடைய பிறவிக்குணம், அதற்கு விதிவிலக்குக் கூட கிடையாது என்பதுதான் தமிழினவாத, திராவிட (பூர்வகுடி) இனவாதக் கட்சிகள், குழுக்களின் நிலைப்பாடு. இது முற்றிலும் தவறானது; பகுத்தறிவுக்கே எதிரானது; மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்துக்கு மாறானது; (பூர்வகுடி) இனவாத சித்தாந்தம் (Racialism) ஆகும்.

''பிறவிக்குணம்'' என்று எதுவுமே கிடையாது; ஒருவரது குண நலன்கள் அவரது சமூக வாழ்வால்தான் உருவாகிறது, தீர்மானிக்கப் படுகிறது, பிறவியினால் அல்ல. பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்று தற்செயலாக நிகழ்வது; அதை வைத்துக் கொண்டு எவரது சமூக, அரசியல் தகுதியையும் தீர்மானிக்கக் கூடாது. இதுதான் பகுத்தறிவு, அரசியல் மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டம்.

குறிப்பிட்ட வருண, சாதிப் பிறப்புத்தான் மனிதர்களது குணநலன்களையும், சமூக - அரசியல் தகுதியையும் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக வைக்க வேண்டும் என்பது உண்மையிலே பார்ப்பன சனாதன சித்தாந்தம் ஆகும். இதுவேதான் நாஜி சித்தாந்தத்தின் மூலகர்த்தா நீட்சே உருவாக்கிய தத்துவம். இதன் அடிப்படையில்தான் ஆரிய இனமே உலகை ஆளும் அறிவும், திறமையும் தகுதியும் உடையது என்ற இட்லரின் கோட்பாடு வகுக்கப்பட்டு ஆரிய இனமல்லாதாரை அடிமைப்படுத்தவும், வேட்டையாடவும் கிளம்பினர். நீட்சே - இட்லரின் சித்தாந்தத்தைப் போன்றதுதான் திராவிட (பூர்வகுடி) இனவாதமும் ஆகும். ஆகவே இதை நா[ம்] ஏற்கவில்லை.

3. பார்ப்பனர்களின் ''அடுத்துக் கெடுக்கும் நரித்தனம்'' பற்றி தமிழர்களை எச்சரித்துவரும் பல்வேறு கட்சிகளும் குழுக்களும்கூட தமது வசதிக்கேற்ப பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்கின்றன. மணியம்மையைப் பொருந்தாத் திருமணம் செய்துகொண்டு ''சொத்துக்களுக்கு வாரிசாக்குவது'' என்ற யோசனையைப் பெரியாருக்குக் கொடுத்த ராஜாஜி அவரது திராவிட இயக்கத்தவரைவிட நம்பிக்கைக்குரியவராகக் கருதப்பட்டார். வி.பி.ராமன் அண்ணாதுரைக்கும் பிறகு கருணாநிதிக்கும் ஆலோசகர்களாக வைத்துக்கொள்ளப்பட்டனர். சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு வீரமணியும், குடும்பத்தின் பத்திரிகை சங்கிலித் தொடரை நடத்துவதற்கு கருணாநிதியும் பார்ப்பனர்களிடம் பொறுப்பளித்தனர். பா.ம.க.வின் கோவை மாவட்டத்துக்கும் ''தினப்புரட்சி'' நாளேட்டிற்கும் பொறுப்பானவர்களில் ஒரு முக்கியப் புள்ளி பிறப்பால் பார்ப்பனர். இது ஒருபுறம் இரு

www.padippakam.com

ர்ப்பனர்களை எதிர்ப்பது. ஆனால் அவர்கள் உருவாக்கிய பார்ப் ன சனாதன வருணாசிரம அடிப்படையிலான சாதிகளை அங்கீக ந்து. ஆதரித்து தம்மை சத்திரியர், வைசியர் என்று பெருமை ராட்டிக்கொள்வதோடு சூத்திரர், பஞ்சமர், சண்டாளர் ஆகிய ருணங்களின் வழிவந்த சாதிகளைச் சேர்ந்த மக்களை இழிவுபடுத் வதும் பார்ப்பனத் தன்மை உடையதுதான்.

4. எல்லாவற்றுக்கும் மேலானது, அரசியல், சித்தாந்தம், காள்கை, நடைமுறை ஆகியவற்றில் பார்ப்பனீயத்துடன் எந்த கையிலாவது சமரசம் செய்து கொள்கிறோமா எதிர்த்துப் போரா மல் இருக்கிறோமா என்பதுதான் முக்கியமானது. நாம் புலிகளை தரிக்காதவர்கள் என்று அறிந்தும் ''இவர்கள் பார்ப்பன எதிர்ப்பா கள்'' எனக் குற்றஞ்சாட்டி நமது தோழர்கள் மீது 'தடா', தேசியப் துகாப்புச் சட்டம் மற்றும் அரச துரோக வழக்குகள் போட்டு றையிலடைக்கப்பட்டனர். ஆனால் எங்களைப் போல ''பார்ப்பன பாசிச எதிர்ப்பு'' முழக்கத்தை முன் வைத்துப் போராடாது மழுப் கட்சிகளும், குழுக்களும் இதைப் பார்ப்பனத் தலைமை என வதூறு செய்கின்றனர். தங்களைப் புலி, சிங்கம், யானையைப் ான்ற புறநானூற்று வீரர்கள் என்று பீற்றிக் கொண்டவர்கள் எல் ம் ராஜீவ் கொல்லப்பட்ட 1991 மே 21-ந் தேதி நள்ளிரவுக்குப் கு எங்கே போனார்கள்? ராஜீவைக் கொன்ற தாணு போதை ந்துக்கும், வரைமுறையற்ற பாலுறவுக்கும் அடிமையானவள்; வளும், சிவராசன், சுபா போன்றவர்களும் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் று எழுதியும் பேசியும் ''நரித்தனமாக'' நடந்து கொள்வதுதான் சியல் விவேகம் என நியாயப்படுத்தினார்கள். அந்த இக்கட் ன நெருக்கடி, அடக்குமுறை நாட்களிலும் துணிந்து பாசிச — ர்ப்பன எதிர்ப்பு, ஈழ ஆதரவு நிலையெடுத்துப் போராடிய எமது மைப்பின் தலைமையையும், தமிழின உணர்வையும் சந்தேகிப்ப த இப்படிப்பட்டவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

— ''பார்ப்பனத் தலைமை'' என்கிற அவதூறுக்கு எதிராக நாம் ரித்த மேற்கண்ட விளக்கத்துக்கும் கேள்விகளுக்கும், அந்த அவ றைப் பரப்பிவரும் எந்தத் தரப்பினரிடம் இருந்தும் இதுவரை ல் வரவில்லை. மாறாக அவதூறைத் தொடர்கின்றனர். அவர்க நேர்மையின்மையை இதுவே அம்பலப்படுத்துகிறது. இதுவே போது பதிலளிக்க எடுத்துக்கொண்ட கேள்விகளுக்கும் விளக்க உள்ளது. மேலும் பார்ப்பனப் பிறப்புடைய அனைவரையும் ி அம்பேத்கார் அவநம்பிக்கை கொண்டிருந்தார் என்பது உண் யானால் அவர் ஏன் ஒரு பார்ப்பனப் பெண்ணை இரண்டாவது மணம் செய்து கொண்டார்? மகாத்மா பூலேவுக்குப் பிறகு, பார்ப் சனாதன வெறியரான திலகருக்கு எதிராக சமரசமின்றிப் போரா மாபெரும் சீர்திருத்தவாதியான ராணடே ஒரு பார்ப்பனர் என் ும் அவரை ஒரு மாமனிதர் என்று ஏன் போற்றினார்?

''அம்பேத்காரைப் போன்று ஒரு தாழ்த்தப்பட்டவரது தலை யில்தான் அச்சமுதாயம் விடுதலை அடைய முடியும்;அத்தலை யினால்தான் தாழ்த்தப்பட்டவர்களது பிரச்சினைகளை உணர , புரிந்துகொள்ளவும் உறுதியாக போராடவும் முடியும். மற்றபிற யினர், குறிப்பாக மேல் சாதிக்காரர்கள் நம்பிக்கை துரோகம் து விடுவார்கள்'' என்று கூறிக்கொண்டு தாழ்த்தப்பட்ட சாதிக ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஒரு தலைமை, ஒரு அமைப்பு ப் பல நூறு அமைப்புகள் தோன்றியுள்ளன. பெரியார் ஈ.வெ.ரா. க்கூட தாழ்த்தப்பட்ட சாதிகள் தமது தலைமையாக ஏற்றுக் ள்ளவில்லை; பெரியாரும் தம்மைச் சூத்திரர்களின் பிரதிநிதியா ், அம்பேத்காரைத் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாகவும் ிப் பேசினார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இப்படியே னால் வன்னியருக்கு ராமதாசும், நாயுடுகளுக்கு கெங்குசாமி ான் தலைவர்கள் என்பதுகூட நியாயமாகிவிடும். இத்தகைய வகுமுறை சமுதாய, இன அரசியல் விடுதலைக்கும் புரட்சிக்கும் ானதுதானா?

இது ஒருபுறம் இருக்கட்டும்: நமது கருவறை நுழைவுப் ராட்டம் திராவிடர் கழகம் உட்பட அனைத்து அரசியல் சமூக கங்களிலும் உள்ள முற்போக்கு, ஜனநாயக சக்திகளிடம் பெருத்த ஆதரவைப் பெற்றிருக்கிறது. பாசிச — பார்ப்பன ஜெயா கும்பலுடன் சமரசம் செய்துகொண்டும், பெரியாரைப் பூசையறைத் தெய்வமாகவும் அவரது போதனைகள் தொழுகைக்குரிய மந்திரங்க ளாகவும் மாற்றி செயலிழக்கச் செய்துள்ள திராவிடர் கழக வீரம ணிக்கு நமது கருவறை நுழைவுப் போராட்டம் கலக்கத்தை ஏற்படுத் தியது. தமது நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சுயவிளக்க மளிக்கும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். குறிப்பாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் முகாமடித்து நமது அமைப்புகளில் ''பார்ப்பனத் தலைமை'' பற்றிய அவதூறு பரப்பி வருகிறார்.

''பார்ப்பனராகப் பிறந்த அனைவருமே நம்பிக்கைத் துரோகம் செய்துவிடுவார்கள். அடுத்துக் கெடுக்கும் நரித்தனம், சூழ்ச்சியும் அவர்களது ரத்தத்திலேயே ஊறியவை; இதற்கு விதிவிலக்கே கிடை யாது'' என்பதுதான் வீரமணி போன்றவர்களது வாதம். ஆனால் திராவிடர் கழகத்தின் அனுபவமும், அணுகுமுறையுமே இதற்கு மாறானது என்பதற்குச் சான்றுகள் கூறமுடியும்.

''1923 டிசம்பர் 15 ஆம் நாள், சட்டசபைத் தலைவராக இருந்த ஸர்.பி.ராஜகோபாலாச்சாரியார் உத்தியோகம் காலாவதி முடிந்து ஓய்வெடுத்துக் கொண்டார். அவர் முதன்முதலில் சட்டசபைத் தலை வரானபோது நமது கட்சியார் பலருக்கு ஆரம்பத்தில் பிடிக்க வில்லை. முதலில் அவர் பொதுவாழ்வில் ஈடுபட்டு அனுபவம் பெறாதவர், வாழ்நாள் முழுவதும் உத்தியோக மண்டலத்தில் வாழ்ந் தவர். ஒரு பிராமனரல்லாதார் கட்சி அதிகாரப் பதவி வகிக்கும் போது, ஒரு பிராமனர் பட்சாதாபமின்றி நடந்துகொள்வாரா என்ற சந்தேகமும் பலருக்கு இருந்தது.

''ஆனால் புத்திமானானான ஸர்.ராஜகோபாலாச்சாரியார் தலைமைப் பதவியேற்ற சொற்ப காலத்துக்குள் எல்லோருடைய சந்தேகங்களையும் நீக்கிவிட்டார். அவர் தலைவராக இருந்த மூன்று வருஷ காலத்தில் எந்த மெம்பரையும் அலட்சியமாக நடத்திய தில்லை. சட்டசபையில் உக்கிரமான விவாதங்கள் நடக்கும் போது உண்டாகக்கூடிய அசம்பாவிதங்களை எவர் மனமும் புண்படாமல் தீர்ப்புக் கூறுவதில் அவர் வெகு சமர்த்தர். பிராமணர் அல்லாதார் என்ற துவேஷம் அவரிடம் எட்டுணையும் கிடையாது.

''பிறப்பால் நான் பிராமணனாயினும், மனத்தால் நான் அல்லா தானே என அவர் வெகு பெருமையாகக் கூறிக்கொள்வாராம். எனவே, அவர் உத்தியோகம் வகித்துப் பிரிந்த கடைசி நாளன்று சர்வகட்சியாராலும் நன்றாகப் பாராட்டப் பெற்றார்.''

**(பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு: நீதிக் கட்சி வரலாறு பக்.66.)**

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் (1937-40) தலை மையேற்று வழிநடத்திய பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி போன்ற தலைவர்களின் வரிசையில் ஒன்பதாவது சர்வாதிகாரியாக - போராட்டத் தளபதியாக இதே ராஜகோபாலாச்சாரியார் இருந் தார். அப்போராட்டத்தில் பங்கு கொண்டு இரண்டு முறை சிறை சென்ற வேலூர் துளசி அம்மாள் பிறப்பால் பார்ப்பனரே; அதற்காக அவர்களது தமிழ்ப்பற்றைச் சந்தேகிக்க முடியுமா? அதே போன்று பிறப்பால் பார்ப்பனரான மறைந்த சென்னை மேயர் எஸ்.கிருஷ்ண மூர்த்தியின் மீது பெரியாரும் அண்ணாதுரையும் மதிப்பு வைத்திருந் தனர் என்பதை மறுக்கமுடியுமா? இல்லை - இப்போது ''முரசொலி'' ஆசிரியர் குழுவில் உள்ள ''சின்னக் குத்தூசி'' பிறப்பால் பார்ப்பன ராக இருந்தாலும் அவர் பார்ப்பனீயத்துடன் சமரசம் செய்து கொண் டார், திராவிட இயக்கத்துக்கு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார் எனக் குற்றஞ்சாட்ட முடியுமா? அதற்கு மாறாக ஆட்சியில் இருந்த போது இந்திரா, ராஜீவுக்கும், பார்ப்பனதாசன் எம்.ஜி.ஆருக்கும் சாமரம் வீசியதோடு பார்ப்பன ஜானகியின் அற்ப ஆட்சிக்கு முட்டுக் கொடுத்தும் பார்ப்பன - பாசிச ஜெயாவிடம் கைநீட்டி ஆதாயம் பெற்று ஆதரவும் காட்டி வருகிறார், வீரமணி. பார்ப்பனரல்லாத பிறப்பு இத்தகைய துரோகங்கள் செய்யாதவாறு அவரைத் தடுக்க வில்லையே! ஆகவேதான் கூறுகிறோம்: பிறப்பு என்பது தலைமை யின் தகுதியாக இருக்க முடியாது. வாக்கும் வாழ்வும்தான் அதற் கான அடிப்படையாக இருக்க முடியும்.

## …றந்தவர்களை நாம் நம்பலாமா?

படிப்பகம்

www.padippakam.com

## ஆர்.எஸ்.எஸ்.-ன் 'தேச'த்துரோக பார்ப்பன - பாசிச பாரம்பரியம்

# இந்து பாசிசப் பரிவாரத்தில் வி.இ.ப. பாத்திரம்

### இந்து மதவெறி பெருந்திரள் வகுப்புவாதத்திற்கான பிரதான வாகனமாக விசுவ இந்து பரிசத் கட்டப்பட்டது

ஹெட்கேவார், கோல்வால்கர் தலைமையின் கீழ் சித்தாந்த மற்றும் அமைப்பு பலம் பெற்று வளர்ந்த ஆர்.எஸ். எஸ்-ம் அதன் துணை அமைப்புகளும் தேவரஸ் சகோதரர்களின் கீழ் இந்து மத பாசிச வெறியூட்டும். தீவிர நடவடிக்கைகளில் இறங்கியது. ஆர்.எஸ்.எஸ்-இன் 'சார் சங் சலக்' 'காக 1973-இல் பாலசாகப் தேவரஸ் நியமிக்கப்பட்டார். இவரது தம்பியான பாளுராவ் தேவரஸ் பின்னணியில் இருந்து இயக்கி வந்தார். குறிப்பாக 80களில் பாலசாகப் நோயுற்று நிரந்தரமாகப் படுக்கையில் வீழ்ந்த பிறகு பாளுராவின் ஆதிக்கம் அதிகரித்தது.

1967 பொதுத் தேர்தல்களில் மத்தியிலும், மாநிலங்களிலும் ஆளும் காங்கிரசு பலவீனமடைந்தது. பலமாநிலங்களில் காங்கிரசு பிளவுபடுவதும், கட்சி மாறுவதும் காரணமாக கூட்டு மந்திரி சபைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் தோன்றின. இதைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் 'செல்வாக்குப் பெறும் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ் -இன் துணை அமைப்புகள் முடுக்கிவிடப்பட்டன. நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளூராட்சித் தேர்தல்களில் மட்டுமன்றி தொழிற்சங்க மற்றும் மாணவர் சங்கத் தேர்தல்களிலும் அக்கறை காட்டப்பட்டது. ஆர்.எஸ். எஸ் -இன் "சகாக்கள்" (அணி அமைப்புகள்) தேர்தல்களுக்கான தொகுதி அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டன.

1967-70 காலகட்டங்களில் நாடு முழுவதும் நிலவிய காங்கிரசு எதிர்ப்பு அலையைப் பயன்படுத்திக் கொள்வதற்காக போலிக் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து போராடவும், கூட்டு மந்திரிசபையில் இடம் பெறவும் கூட ஆர்.எஸ்.எஸ்-இன் துணை அமைப்புகள் இறங்கின. இதே நோக்கத்தோடு 1974-75 காலகட்டங்களில் காங்கிரசு எதிர்ப்பு ஜெயப்பிரகாஷ் நாராயணன் இயக்கத்துக்குள் ஊடுருவி அதன் தலைமையையும் கைப்பற்ற முயன்றது. ஆர்.எஸ்.எஸ். கம்யூனிஸ்டுகளைப் போன்ற சோசலிசவாதி, தேசப்பற்று இல்லாதவர் என்று அதுவரை சாடிவந்த ஜெயப்பிரகாஷ் நாராயணனை ஒரு "துறவி" என்று 1974 டிசம்பரில் ஆர்.எஸ்.எஸ் புகழ்ந்தது. அதுவரை ஆர்.எஸ்.எஸ் -இன் அரசியல் கட்சியான பாரதீய ஜனசங்கத்தை ஒரு பாசிச, வகுப்புவாதக் கட்சி எனக் கூறிவந்த ஜெயபிரகாஷ் நாராயணன் அந்தக் கணிப்பைக் கைவிடுவதாக 1975 மார்ச்சில் அறிவித்தார். பாசிச இந்திரா அரசு அவசர நிலைப் பிரகடனம் செய்த 1975 ஜூன் 25 அன்று ஜெ.பி.அமைத்த "லோக் சங்ரஷ் சமதி" (மக்கள் போராட்ட அமைப்பு)க்கு ஆர்.எஸ்.எஸ். -இன் முக்கியத் தலைவர்களில் ஒருவரான நானாஜி தேஸ்முக் பொதுச் செயலாளராக்கப்பட்டார்.

"1948-49, 1976-77 மற்றும் 1992-93 ஆகிய மூன்று முறை தடைசெய்து ஆர். எஸ்.எஸ்ஸை காங்கிரசு ஒழிக்க முயன்றது; மூன்று முறையும் அதை முறியடித்து தடை நீங்கி வென்றோம்" என்று இப்போது பீற்றிக் கொள்கிறது. ஆனால் 1948-49 இல் செய்ததைப் போலவே 1976-77 இல் தடை செய்து, முக்கியத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டதும் அன்றைய ஆளும் காங்கிரசு தலைமையிடம் சமரசம் பேசத்துவங்கிவிட்டார் 'ஆர்.எஸ்.எஸ். தலைமை குரு பாலசாகப் தேவரஸ். முந்தைய குரு கோல்வால்கர் நேரு-பட்டேலுக்கு எழுதியதைப் போலவே தமது அமைப்பின் மீதான தடை நீக்கப்பட்டால் அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக சிறையிலிருந்தபடியே தேவரஸ் இரகசியக் கடிதங்கள் எழுதினார். ஆளும் வர்க்க "அரசு துறவி" வினோபா பாவே மூலம் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டதோடு இந்திராவின் பாசிச வாரிசு சஞ்சய் காந்தியின் தலைமைக்கும் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு - பாராட்டுத் தெரிவித்தது. அதன் பிறகு காங்கிரசுடன் ஊடலும் கூடலுமாகிய இரட்டை உறவை ஆர். எஸ்.எஸ். வளர்த்துக் கொண்டது.

அவசர நிலை ஆட்சி விலக்கிக் கொள்ளப்பட்டதும் வடநாட்டில் வீசிய காங்கிரசு எதிர்ப்பு அலைக்குத் தக்கபடி எதிர்க்கட்சிகளுடன் ஜனதா கட்சியில் இணைந்து ஆர். எஸ்.எஸ். பிரதிநிதிகள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டனர். ஜனதாக் கட்சி பிளவுபட்டு, ஆட்சி கவிழ்ந்து, செல்வாக்கிழந்த போது, ஆர்.எஸ்.எஸ்-இன் அரசியல் பிரிவு தேர்தல்களில் பின்னடைவைச் சந்தித்தது. ஆனால் ஆர்.எஸ்.எஸ். மளமளவென்று வளர்ந்தது. 1975-இல் 8500 ஆக இருந்த ஆர்.எஸ்.எஸ். சகாக்கள் (அணி அமைப்புகள்) 1977-இல் 11,000 ஆகவும்
1982-இல் 20,000 ஆகவும் உயர்ந்தல
1981-இல் ஜனதாக் கட்சி இறுதியாகச் சி
றிய போது அதிலிருந்து ஆர்.எஸ்.எஸ். பி
திநிதிகள் பாரதீய ஜனதா கட்சியை நிறு
வார்கள். பா.ஜ.க. வின் அமைப்பு பலத்
நிறுவுவதிலும் வாஜ்பாயி போன்ற "மிதவ
தி" களின் தலைமையை மாற்றி அத்வான
ஜோஷி, போன்ற "தீவிரவாதி" களி
பிடிப்பை உறுதிப்படுத்துவதிலும் கவன
செலுத்தினார்கள். அதே சமயம் தன்னை
இன்னொரு இந்துமத வகுப்புவாதக் கட்
யாகப் பகிரங்கப்படுத்திக் கொண்ட காங்
ரசை தேர்தல்களில் ஆர்.எஸ்.எஸ். ஆதரி
தது.

ஆர்.எஸ்.எஸ். தானே, தனது தல
மையில் ஒரு அரசியல் கட்சியாக பா.ஜ
கவை நடத்திவந்தாலும் "அரசியல்வா
கள், கட்சிகள் எல்லாம் தேர்தல் சுயநல
கருதி தேசிய நலன்களில் சமரசம் செய்
கொள்பவர்கள்; எங்களுக்கு அரசிய
லும், அதிகாரத்திலும் நாட்டமில்லை
தேசிய, சமூக, கலாச்சார நெறி, மரபுகளை
கட்டிக் காப்பதும், உறுதிப்படுத்துவது
எங்கள் இலட்சியம்" என்று வசதிக்கே
பேசிவருவது ஆர்.எஸ்.எஸ்-இன் ப
பெரும் உத்தி. அரசியலில் இருந்து வில
நிற்பதாகக் காட்டிக் கொண்டு அதன் குற்ற
குறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசி
சக்தியாக நடித்து ஆதாயம் அடைவது
அதன் நோக்கம். சந்தர்ப்பவாத அரசிய
நாடகமாடுவதற்காக மட்டுமன்றி, நாடா
மன்ற அரசியலுக்கு வெளியே இந்து
வெறி பாசிச அரசியல் சித்தாந்த, அமை
பலத்தை திரட்டுவதற்கும் இதே உத்தி
ஆர்.எஸ்.எஸ். பயன்படுத்துகிறது. இ
நடைமுறைக் கொள்கையை பின்ப
விசுவ இந்து பரிசத் அமைப்பை முன்
குத் தள்ளியது. ஆர்.எஸ்.எஸ். 1
மீனாட்சிபுரம் மதமாற்றம் சம்பவத்
சாக்கு வைத்து இந்து ஒற்றுமை, இந்து
தலைவர்களின் முன்முயற்சி, ரதயாத்தி
கள் என்று தொடங்கி ராமஜென்ம
இயக்கம் வரை இதே உத்தியைத்தான்
பற்றி நாட்டில் மிகப் பெரிய பாசிச
யாக ஆர்.எஸ்.எஸ். வளர்ந்தது.

1980 களில் ஆர்.எஸ்.எஸ்
பரிவாரங்களில் மிகமுக்கிய உறுப்
விசுவ இந்து பரிசத் மாறியது. அது
அமைப்பு ரீதியில் ஒன்று திரட்டிப் ப
விக்கப்பட்ட அணிகளை மட்டுமே செ
டிருந்து இந்துமத வகுப்புவாதம் வ
இந்து பரிசத்தினால் ஒரு பெரும் ம
திரள் வகுப்புவாதமாக மாற்றப்பட்
இதன் மூலம் இந்து சமூகம் முழுவ
மான ஒரே பிரதிநிதியாக ஆர்.எஸ்.
பரிவாரங்கள் உரிமை பாராட்டிக் ெ
கின்றன. இந்து மதம் என்று ஆங்கி
ரால் முதன்முதலாக அழைக்கப்பட்ட
கம் ஆறு பிரதான பிரிவுகளைக் கொண்
அப்பிரிவுகளின் கீழ்வராத சீக்கிய,
மதங்களையும், பல்வேறு சிறு இனச்
பழங்குடிப் பிரிவுகளையும்கூட சேர்த்
துமதம்தான் என்று ஆர்.எஸ்.எஸ்
இந்துமத அமைப்பான வி.இ.ப.
கொள்கிறது. பல ஆயிரக் கணக்கான
களையும், ஒரே குடையின் கீழ் கெ



படிப்பகம்

www.padippakam.com

ந்து. தனது தலைமையை நிறுவிக் கொள்வ
ற்கு வசதியாக இந்துமதம் என்பது பன்மு
க் தன்மையுடையது என்று வி.இ.ப.
ியாக்கியமானம் செய்கிறது. இதற்கு
மைப்பு வடிவம் கொடுப்பதற்கான முயற்
யில் தீவிரமாக ஈடுபட்டும் வருகிறது.

பல்வேறு ''இந்துமத''ப் பிரிவுகளை
ம் ஒரே குடையின் கீழ்கொண்டுவந்து ஒரு
கள் திரள் வகுப்புவாத அணியைக் கட்டி
ழுப்புவதற்காக பல மதத் தலைவர்கள்,
ந்நியாசிகளின் மாநாடு ஒன்றை
64-இல் பம்பாயில் கூட்டி விசுவ இந்து
சத்தை நிறுவுவது என்று கோல்வால்கர்
டிவு செய்தார் என்பதை முன்னமே பார்த்
ாம். இந்த அமைப்பு முதல் பத்தாண்டுக
ல் முக்கியமாக வடகிழக்கிந்திய மாநிலங்
ில் உள்ள கிறித்துவ சேவை நிறுவனங்க
க்கு எதிராக வேலை செய்தது.
81-இல் சில தாழ்த்தப்பட்ட மக்கள் முசு
களாக மதம் மாறியதை சாக்குவைத்து
ஸ்லீம் மதத்திற்கெதிரான செயல்பாடுக
ல் வி.இ.ப. தனது கவனத்தைக் குவித்
. அமைப்புரீதியில் இயங்கிவரும் மதத்
லைவர்களுக்கிடையே முறையான
ாடர்புகளை நிறுவி நாடுமுழுவதற்கு
மான இரு உயர்மட்ட அமைப்புகள் ஏற்ப
டுத்தப்பட்டன. அனைத்து சாமியார்கள், சந்
நியாசிகள், மகந்துகள், மடாதிபதிகள், மத
குருமார்கள் பங்கேற்கும் ஒரு பொதுக்
குழுவை போன்ற ''தர்ம சன்சாத்'' (பஞ்சா
யத்து - பேரவை) அமைக்கப்பட்டது.
இதன் நிர்வாகக் குழுவாக இயங்கும்
''மார்க் தர்ஷக் மண்டல்'' (மார்க்க - சமய
வழிகாட்டும் குழு) என்ற இன்னொரு
அமைப்பும் நிறுவப்பட்டது. ''தர்ம
சன்சாத்'' அவசியத்தைப் பொறுத்து தேவை
யானபோது கூடும்; அதேசமயம் ''மார்க்
தர்ஷக் மண்டல்'' வருடத்துக்கு 2.3 முறை
கூடி முக்கிய முடிவுகள் எடுக்கும். சங்கராச்
சாரிகள் போன்ற தலைமை மடாதிபதிகள்
இதில் முக்கிய பங்கு வகிப்பர். ஆர்.எஸ்.
எஸ். கும்பலின் அரசியல் நோக்கங்கள்,
நடவடிக்கைகளுக்குச் சமயச் சாயம் பூசி
நியாயப்படுத்துவதுதான் இந்த அமைப்புக
ளின் பிரதானப்பணி.

சாதுக்கள், சந்நியாசிகளை இணைத்
துக் கொள்வதன் மூலம் நீண்ட மக்கள் ஆத
ரவு பெற்ற வரலாறுடன் கூடியதாக இந்துத்
துவ சித்தாந்தத்துக்கு ஒரு பின்னணி உரு
வாக்கப்பட்டது. 1984-இலும், 1985-லும்
கூடிய தர்ம சந்சாத்கள் மூலமாக மூன்று
ஜன்மபூமிகள் (அயோத்தியில் ராமன், மது
ராவில் கிருஷ்ணன், காசியில் விசுவநா
தன்) மீட்பதற்கான இயக்கம் துவங்கப்பட்
டது. வி.இ.ப.-இன் ஒளிநாடாக்கள் (வீடி
யோக்கள்) இந்த தர்மசன்சாத்துக்களின் நட
வடிக்கைகளை நீண்ட நேரம் காட்டுகின்
றன; அதன்மூலம் ஒரு தெய்வீகத் தேவை
யின் அவசர அவசியம் காரணமாகவே
ஜன்மபூமி மீட்பு இயக்கம், கோரிக்கைகள்
எழும்பி இருப்பதாகக் காட்டிக் கொள்கி
றது. அரசு நிர்வாகக் கட்டுப்பாடுகளில்
இருந்து ஆலயங்களை மீட்டு சாதுக்கள்,
சன்னியாசிகள், மகந்துகள், மடாதிபதிகளி
டம் ஒப்படைப்பது போன்ற ''துறவி''க
ளின் நலன்களை முன்வைத்து ஆசைகாட்டு
வதன் மூலம் வி.இ.ப. தனது மத அரசியல்
நோக்கங்களுக்கு அவர்களின் ஆதரவைத்
திரட்டிக் கொள்கிறது. இப்படி இருதரப்பும்
ஆதாயம் தேடிக்கொள்கின்றன.

விசுவ இந்து பரிசத் என்பதே சட்டப்
படி ஒரு அறக்கட்டளைதான். நூறுபேர்
அதன் அறங்காவலர்கள்; 51 பேர் அதன்
நிர்வாகக் குழு உறுப்பினர்கள். இதிலும்
பாரதீய ஜனதா கட்சி எம்.பி.யாக உள்ள
சின்மயானந்தா என்கிற ''கவர்ச்சி'' சன்னி
யாசி ஒருவர்தான் உறுப்பினர்; ஆகவே
வி.இ.ப.இன் அதிகாரம் வழக்கமான மதத்
தலைவர்களிடம் கிடையாது; ஆர்.எஸ்.
எஸ். பிரமுகர்களின் கைகளில்தான் உள்
ளது. அறக்கட்டளை என்கிற முறையில்
வி.இ.ப.க்கு யாரும் நேரடியாக உறுப்பின
ராகிவிட முடியாது. அதன் புரவலர்களாகத்
தான் ஆக முடியும்.

வி.இ. பரிசத்தின் அறக்கட்டளை 18
துறைகள், பிரிவுகளைக் கொண்டிருக்கிறது;
அதைப் பட்டியலிட்டாலே போதும், அதன்
நோக்கங்களும் நடவடிக்கைகளும்
தெரிந்து விடும். கோவில்களில் ''பஜனை
கள்'', ''கீர்த்தனைகளை'' ஏற்பாடு செய்வ
தற்கு ''அனுஸ்தான்'' என்கிற பிரிவு, கிறித்
துவர்கள், இசுலாமியர்களை மீண்டும் மத
மாற்றம் செய்வதற்காக உள்ளது ''தர்மபிரச்
சார்'' அமைப்பு. வி.இ.ப. நேரடியாக நடத்
தும் கோவில்களுக்கும், பிறவற்றுக்கும்
பூசாரிகளைப் பயிற்றுவிக்கும் அமைப்பு
''ஆச்சார்ய விபாக்'' எனப்படும். வி.இ.ப.
இன் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாத
பொதுத் திருவிழாக்களை ஒருங்கிணைந்து
நடத்துவதற்கு உள்ள பிரிவு ''பார்வா சமா
னுயாயா'' எனப்படும். சனாதனிகள்,
ஆரிய சமாஜ், சீக்கிய சங்கங்கள் பல்வேறு
புத்த, ஜைன நிறுவனங்கள், தாழ்த்தப்பட்ட
குழுக்களின் வால்மீகி கோவில் கமிட்டிகள்
உட்பட இம்மாதிரியான 72 அமைப்புகள்
டில்லியில் மட்டும் இருப்பதாக வி.இ.ப.
கூறுகிறது.

மேற்கண்ட துணை அமைப்புகள்,
துறைப் பணிகள் மூலமும் பூசாரிகளின் ஒரு
வலைப் பின்னலையும், தனது கட்டுப்பாட்
டில் கோவில்களைக் கொண்டு வருவது,
தானே கோவில்களை நிர்மாணிப்பதன்
மூலமும் ஒரு பொதுவான கடவுளர்கள்,
சடங்குகள், திருவிழாக்களை ஏற்படுத்தி
முஸ்லீம்களுக்கெதிராகப் போரிட்டு, இந்து

**யரளவுக்கே தடை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். தலைவர் தேவரசிடம் பணிவாக அரசு ஆணையை ஒப்படைக்கிறது போலீசு.**




படிப்பகம்

www.padippakam.com

ராஷ்டிரத்தை நிறுவவதற்கு வி.இ.ப வழி வகுக்கிறது. புது டில்லி, ராமகிருஷ்ணபுரத்தில் வி.இ.பரிசத்தின் தலைமையக வளாகத்தைக் கட்டுவதற்கு முன்பு அங்கே ஒரு அனுமார் கோவில் இருந்தது: அதன் பூசாரி வி.இ.ப.வில் உறுப்பினர் ஆனார் பிறகு அனுமார் கோவிலையே எடுத்து விழுங்கி விடுமாறு பாரதமாதா (ஒரு புதுக்கடவுள்) சிலையுடன் ஒரு புதுக்கோவில் நிறுவப்பட்டது. பல்வேறு மத நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மடங்கள், கோவில்களுக்காக வி.இ.ப.வில் ஒரு துறையும் உண்டு.

சமஸ்கிருதக் கல்வியைப் பரப்பும் இன்னொரு பிரிவு. அம்மொழி பேசவும் எழுதவும் 10 நாட்கள் குறுகிய பயிற்சி வகுப்புகள் நடத்துகிறது. சாத்திர - சடங்கு நூல்கள் எல்லாம் சமஸ்கிருத மொழியில் இருப்பதால், அம்மொழியை ஒரு உயிருள்ள, புழங்கும் மொழியாக வளர்ப்பது தனது நோக்கம் என்று வி.இ.ப அறிவித்துள்ளது. இந்து ராஷ்டிரத்தின் மைய அரசியல், சமூகக் கண்ணோட்டத்தை "மனுஸ்மிருதி" மற்றும் "அர்த்த சாஸ்திரம்" ஆகிய இரு சமஸ்கிருத நூல்களில் இருந்து இந்து மதவெறி பாசிஸ்டுகள் எடுத்துக் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம். கெட்டிதட்டிப் போன பார்ப்பன சனாதன வருணாசிரம சாதிய மற்றும் பெண்ணடிமை அமைப்பு பற்றிய வரையறுப்புகளைத் தருவதுதான் "மனுஸ்மிருதி". ஒரு கொடுங்கோன்மை மிக்க சர்வாதிகார ஆட்சிக்கான "சட்ட அரசியல்" நிர்ணய நூல்தான் "அர்த்த சாஸ்திரம்" இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாச புராணங்களுடன் "அர்த்தசாஸ்திர"த்தை எழுதிய "சாணக்கிய"னின் வரலாற்றுத் தொடரையும் ஒலி-ஒளி பரப்புவதன் மூலம் அரசு வானொலி வி.இ.ப இன் நோக்கங்களை பிரச்சாரம் செய்வதை எளிதாக்கி விட்டது.



சாதுக்கள், சந்நியாசிகள், மகந்துகள், மடாதிபதிகள் மத்தியில் வி.இ.ப. பொதுச் செயலர் அசோக் சிங்கால்

இப்படி மதப் பணிகளுக்கான மேல் சாதி சிறப்பாளர்களைத் திரட்டிப் பயிற்றுவிக்கும் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும் அதேசமயம் தாழ்த்தப்பட்டவர்கள், மலை - காடுகளில் வாழும் ஆதிவாசிகளிடையே வேலை செய்வதற்குக் கூட ஒரு தனிப் பிரிவை வி.இ.ப. ஏற்படுத்தியுள்ளது. வடகிழக்கு இந்தியாவில் உள்ள கிருத்துவ ஆதிவாசிகளிடையே வேலை செய்வதற்காக ஆர்.எஸ்.எஸ். ஒரு வலை பின்னலை 1960-களில் ஏற்படுத்தியிருந்தது. பிறகு இதையே டில்லி, கர்நாடகா, ஒரிசா, ஆந்திரா, ம.பி., தமிழ்நாடு, மராட்டியம், கேரளா, உ.பி. மற்றும் பீகாருக்கு விரிவுபடுத்தியது. மீனாட்சிபுரம் மதமாற்ற நிகழ்ச்சிக்குப் பிறகு கீழ்நிலை உழைக்கும் மக்களை இந்துமயப்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவமளிக்கப்பட்டது. பிறகு உ.பி. பீகார் மாநிலங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட சாதிகளிடையிலான வேலையும் திட்டமிட்டு செய்யப்படுகிறது.

ரகுநந்தன் பிரசாத் சர்மா எழுதிய **"வி.இ.ப: நோக்கங்கள், நடவடிக்கைகள், சாதனைகள்"** என்னும் நூல் "வனவாசிகள், கிரிசனங்கள், அரிசனங்கள்" ஆகியோரிடையே மதபோதனை சாலைகளை நிறுவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. அம்மக்களது வழிபாடுகள், நம்பிக்கைகள் பார்ப்பன சனாதன மதத்திற்கு எந்த வகையிலும் சம்பந்தமுடையவையோ, பயன்படக்கூடியவையோ அல்ல. எனவே அந்த வழிபாடுகள், நம்பிக்கைகளை வேரோடு பிடுங்கிவிட்டு இந்து மதமயமாக்கும் பணி செய்யப்படுகிறது. ராமன், பாரத மாதா போன்ற சிலைகள் வைக்கப்பட்டு பூசைகள் நடத்துவதோடு ராமநவமி, வினாயக சதுர்த்தி விழாக்கள் நடத்தப்படுகின்றன. இந்துமத போதகப் பள்ளிகள், யோகாசரமங்கள், பால்வாடிகள், மாணவர் விடுதிகள், நூலகங்கள் நடத்தப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களும் இந்துக்கள் தாம் என்று கூறிக்கொண்டாலும் அவர்களைப் பார்ப்பன அகங்காரத்துடனும், இழிவாகவுமே மேல்சாதி இந்து மதவெறியர்கள் நடத்துகின்றனர். மாற்றுமத செல்வாக்கில் இருந்து ஆதிவாசிகளை மீட்பதோடு, அவர்களை புரட்சிகர எழுச்சிகளில் விடுவிப்பதற்காக ம.பி. யில் பஸ்தார், பீகாரில் சோட்டாநாகபுரி போன்ற இடங்களுக்கும் வி.இ.ப. தனது வேலைகளை விரிவுபடுத்தியது.

மேற்கண்ட அமைப்பு ரீதியில் அணிதிரட்டும் பணிகளோடு போராட்ட வேலைகளிலும் வி.இ.ப. இறங்கியுள்ளது. பழைய "கோசாலைகள்" பாணியில் பசுவதை தடுப்பு இயக்கங்களை நடத்துகிறது. கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் சட்டப்படி மாட்டிறைச்சி விற்பதை எதிர்க்கிறது. இப்படிப்பட்ட போராட்டங்களை நடத்துவதற்கு இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் பஜ்ரங் தள், விவேகானந்தா வாகினி, துர்கா வாகினி (பெண்களுக்கானது) போன்ற அமைப்புகளை நிறுவியுள்ளது. ஆர்.எஸ்.எஸ்.ஐப் போல முறைப்படியான "சகா... கள்" வைத்துக் கொள்வதில்லை என்ற... லும், இந்த அமைப்புகள் தமது குண்ட... படைக்குப் போதிய ஆயுதப் பயிற்... கொடுக்கின்றன. "இந்துக்களைப் பாதுகா... பது" இவற்றின் நோக்கமாக கூறப்படு... றது. அயோத்தி மசூதி இடிப்பு, மதவெறி... கலவரங்கள் நடத்துவது போன்றவைதா... இவற்றின் முக்கிய வேலை. மதவெறி அர... ஜக. வன்முறை நடவடிக்கைகளில் இந்த... குண்டர் படைகளை இறக்கிவிட்டு ஆர்... எஸ்.எஸ். பின்னால் இருந்து இயக்குகிறது...

பெண்களை தமது மதவெறிக்குத் திர... டுவதற்காக "மாதரி மண்டல்" என்னு... வயோதிகப் பெண்கள் அமைப்பும் உ... ளது. "ராஷ்டீரீய சுவயம் சேவிகா சங்..." எனப்படும் பெண்களுக்கான ஆர்.எஸ்.... எஸ். இதை இயக்குகிறது. இதன்மூலம் சி... வர் - சிறுமிகளுக்குப் பள்ளிகள் நடத்தப்... டுகின்றன: மருத்துவ விடுதிகள், ஓய்... நேரத்தொழில் பயிற்சிகள் நடத்தப்படுகி... றன.

இவற்றோடு முக்கி... மாக வெளிநாடுகளி... வாழும் இந்துக்க... ஒருங்கிணைக்கும் தனி... கமிட்டி ஒன்றை வி.இ.... பெற்றுள்ளது. உலக... முழுவதும் வாழும் இ... துக்கள் அனைவரு... "ஒரே நாடு" என்ப... தான் அதன் கண்ணோ... டம். 30 நாடுகளில் அத... கிளைகள் உள்ளன. ... நூறுகோடி ரூபாய்... இதன்மூலம் திரட்டப்ப... டுள்ளது. இவைத... வி.இ.ப. பிரச்சாரங்க... வெளியீடுகளைக் க... ணிப்பது, செய்... தொடர்பு, நிர்வாக அ... வலகப் பணிகளை ... வது ஆகியவற்று... என்று பல தொழில் ... பப் பிரிவுகளையும் வி.இ.ப. கொண்... ளது.

சுருக்கமாகச் சொன்னால், ஆர்.எ... எஸ்.இன் "இந்து ராஷ்டிர" கனவை ... வாக்கும் அரசியல் கடமையை பார... ஜனதா கட்சி மேற்கொண்டிருக்கிறது. ... ஒரு அரசியல் அமைப்பு என்பதால் பத்... கைகள், மக்களது கவனம் அதன்மீது அ... மாகச் செலுத்தப்படுகிறது. ஆனால் அ... அளவு முக்கியத்துவத்தோடு, ஆர... ஓசையின்றி, இரகசியாக மக்களை ச... மதரீதியில் இந்துமத வெறி பாசிசத்து... ஆதரவாக அணிதிரட்டுகிறது விசுவ இ... பரிசத். அதன் நைச்சிமான மதபோத... சித்தாந்த உள்ளடக்கம், பா.ஜ.க. மற்... ஆர்.எஸ்.எஸ். உடன் அதன் நடவடிக்... கள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகி... என்பதை அடுத்துக் காண்போம்.

(தொட...



படிப்பகம்

www.padippakam.com

## எரிட்டீரிய விடுதலை

# ஒடுக்கப்பட்டவர்களின் நம்பிக்கைச் சுடர்

எரிட்டீரியா - ஆப்பிரிக்காவின் கொம்பு நாடுகளுள் ஒன்
ம். ஆப்பிரிக்க கண்டத்தின் வடகிழக்கே செங்கடலை ஒட்டியுள்ள
ரு குட்டி நாடும் ஆகும். கடந்த மே மாதம் எத்தியோப்பியாவிலி
ந்து பிரிந்து தனிநாடாக உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு
னது விடுதலையையும் கொண்டாடியது. 30 வருடகாலமாக
எரிட்டீரிய மக்கள் விடுதலை முன்னணி'' (எ.ம.வி.மு) என்ற
மைப்பின்கீழ் இன விடுதலை கேட்டு எரிட்டீரிய மக்கள் ஆயுதம்
ந்தி போராடினர். 1991-ல் எ.ம.வி.மு. எரிட்டீரியாவை தனது
ழுக்கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்து எல்லை தீர்மானித்து எத்தி
பாப்பியர்களின் பிரவேசத்திற்கு கட்டுப்பாடு - ''விசா'' முறைக
ளயெல்லாம் அமுல்படுத்தி தனி ஆட்சியே செலுத்தியது. குறிப்
ாக எத்தியோப்பியாவின் இரு துறைமுகங்களும் (அஸ்மரா,
சாப்) எரிட்டீரியாவுக்குள் இருந்ததால் கப்பல் போக்குவரத்தை
த்தியோப்பியா இழந்து தவித்தது.

1890-ம் ஆண்டு முதல் இரண்டாவது உலக யுத்தம் வரை
ரிட்டீரியா, இத்தாலியின் காலனியாகவும் அதன் பிறகு 1952
ரை ஐ.நா. சபை போர்வையில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின்
லனியாகவும் இருந்தது. பிறகு மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின்
டிவருடி மன்னன் ஹெய்லி சலாசி ஆட்சி காலத்தில் எத்தியோப்பி
ாவின் தனி மாகாணமாக எரிட்டீரியா வலுக்கட்டாயமாக
ணைக்கப்பட்டது. காலனிய காலத்திலிருந்து சமூகம், அரசியல்,
பாருளாதார ஒடுக்குமுறைகளுக்குள்ளாகி வந்த எரிட்டீரிய மக்
ா இந்த வலுக்கட்டாய
ணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்
னர். தனிநாடு கோரிய ஆயுதம்
ங்கிய அமைப்புகள் தோன்
ன. ஆனால் போலி சோசலிச
தி - சமூக பாசிஸ்டு மெங்
ஸ்து மரியம் ஆட்சிக்கு வந்த
ன்னர் எத்தியோப்பியாவில்
ன விடுதலைக் குழுக்கள் ஒடுக்
பட்ட பொழுது தேசிய சுயநிர்
ய உரிமைப் போராட்டம்
லுத்தது. அமெரிக்கா மற்றும்
ஏகாதிபத்தியங்களாலும்,
பு - முஸ்லீம் நாடுகளாலும்
ளம் - ஆயுத உதவியளிக்கப்
டு தூண்டிவிடப்பட்டன.

சுற்றியுள்ள அரபு நாடு
ளை மிரட்டுவதற்கு ரஷ்யா
ற்கு ராணுவ யுத்த தந்திர கள
கப் பயன்பட்ட ஆப்பிரிக்கா
ன் கொம்பு நாடுகள், சோவி
யூனியன், கி.ஐரோப்பிய
டுகளின் வீழ்ச்சிக்குப் பின்
மெரிக்காவின் கைக்கு மாறி
. அமெரிக்காவும் அதன் அடி
ளான இஸ்ரேலும் இந்நாடுக
ல் கால்பதித்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இரண்டாண்டுக
க்கு முன்பு உள்நாட்டு போரால் மெங்கிஸ்து ஆட்சி கவிழ்ந்ததும்
ாராளிக் குழுக்களில் ஒன்றும் அமெரிக்க ஆதரவுக் குழுவுமான
த்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி'' (எ.ம
ு.மு) ஆட்சியில் அமர்த்தப்பட்டது.

ஆயுத ரீதியாக செல்வாக்கு கொண்ட எ.ம.வி.மு., டிகிரேயன்
கள் விடுதலை முன்னணி மற்றும் ஒரோமா விடுதலை முன்னணி
ிய எத்தியோப்பியாவில் உள்ள இனவிடுதலை அமைப்புகளு
கூட்டணி உறவு கொண்டுதான் எ.ம.பு.ஜ.மு. மெங்கிஸ்து ஆட்
ய வீழ்த்தியது. எனவே எ.ம.பு.ஜ.மு. ஆட்சிக்கு வந்ததும் எரிட்
ப விடுதலைக்கான பேச்சுவார்த்தை வலுத்தது. எத்தியோப்பியா
டரசாங்கத்தில் பங்கெடுக்குமாறே எ.ம.பு.ஜ.மு. மற்றும் அமெ
காவால் எரிட்டீரிய மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். ஆனால் எரிட்
ப மக்கள் சம்மதிக்கவில்லை. கடந்த ஏப்ரல் மாதம் ஐ.நா. சபை
ஆப்பிரிக்கர் ஐக்கிய அமைப்பும் நடத்திய ஓட்டெடுப்பிலும்
ப்பெரும்பான்மையினர் தனி நாடாகுவதையே விரும்புவது
பாக வந்தது.

எரிட்டீரிய மக்களின் உறுதியான போராட்டம், ஆயுத பலம், கடல்வழி மார்க்கத்தை இழந்தது காரணமாக, எத்தியோப்பியாவின் ஆளுமைக்கும் தனிப்பட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரிய நெருக்கடி - தடை இருந்தது. மேலும் எரிட்டீரியா பஞ்சத்தால் உணவுக்காக பிற நாடுகளிடம் கையேந்தி நிற்பதாலும் எ.ம.வி.மு.வின் தலைமை போலி சோசலிசம் பேசி வருவதாலும் எரிட்டீரியா தனி நாடாகுவது தமக்கு பாதகமில்லை என்று கருதியே அமெரிக்கா, எரிட்டீரிய விடுதலையை அங்கீகரித்துள்ளது.

எரிட்டீரியா விடுதலையடைந்தது எத்தியோப்பியா மட்டுமல்ல சோமாலியா, சூடான் முதலான பல ஆப்பிரிக்க நாடுகளில் போராடிவரும் இன விடுதலை குழுக்களுக்கும் தெம்பு கொடுத்துள்ளது. அப்போராளிக் குழுக்கள் எ.ம.வி.மு. அரசுடன் நட்புறவு கொள்ள முனைகின்றன. எனவே, ஆப்பிரிக்கா மேலும் பிளவுறுவதற்கு எவ்வித இடமும் தரக்கூடாது என்ற 'நிபந்தனை' பெயரிலேயே எரிட்டீரிய விடுதலையை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.

32 லட்சம் அளவுள்ள எரிட்டீரிய மக்கள், பல மரபுவழி இனக் குழுக்களாகவும் கிறித்துவ - முஸ்லீம் மத அடிப்படையிலும் பிளவுண்டு கிடக்கிறார்கள். இன - மத மோதல்களும் உள்ளன. எ.ம.வி.மு.வும் அதன் தலைமையும் கிறிஸ்துவ மத அடிப்படையிலானது என்று இதிலிருந்து முஸ்லீம்கள் எரிட்டீரிய விடுதலை முன்னணி என்ற பெயரில் பிரிந்து மோதி வருகின்றனர். எனவே எரிட்டீரியாவை ஆளும் எ.ம.வி.மு. தமக்கிசைவாகாது போனால் இன மோதல்களைத் தூண்டிவிடவும் தமது கைகூலிகளால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தவும் அமெரிக்கா தயாராகவே உள்ளது. இந்த உள் நோக்கத்திலேயே எரிட்டீரிய் விடுதலை அளிக்கப்பட்டுள்ளது.



30 வருட உள்நாட்டுப் போர் காரணமாக வறட்சியும் பஞ்சமுமே எரிட்டீரிய மக்களின் சொத்தாகிவிட்டது. 70 சதவிகிதத்தினர் சர்வதேச நாடுகளின் உணவு உதவியை நம்பியே உள்ளனர். இதுவன்றி அகதிகளாக வெளியேறியவர்களில் 7.5 லட்சம் பேர் மீண்டும் நாடு திரும்பியதால் நிலைமை கொடூரமாகியுள்ளது. இந்நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு உதவி என்ற பெயரில் அமெரிக்கா தனது நவீன காலனித்துவ ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்கிறது.

எ.ம.வி.மு. தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் வெற்றியடைந்திருந்தாலும் அதன் தேசிய முதலாளித்துவ - குட்டி முதலாளித்துவ தலைமையும், போலி சோசலிச கொள்கையும் தனியொரு தேசியப் பொருளாதாரத்தை கட்டியமைக்க உதவாது. பழைய நிலபிரபுத்துவ உறவுகளை அறுத்தெறிந்து அதாவது நளிநப ரிடம் குவிந்திருக்கும் நிலங்களை கூலி-ஏழை விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுப்பது, நவீன காலனித்துவ தாக்குதலுக்கு எதிராக சொந்த நாட்டு மக்களைச் சார்ந்திருந்து போராடுவது மூலமே சுய தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைக்க முடியும். தற்போது எரிட்டீரியா பெற்றிருப்பது அரசியல் விடுதலையைத்தான். பொருளாதார - கலாச்சார விடுதலையை சாதிக்கும் பொழுதுதான் அது முழு விடுதலையை அடைய முடியும். இதை சரியான சித்தாந்தம், பாட்டாளிவர்க்கத் தலைமை கொண்ட அமைப்பினால் மட்டுமே ஊன்றி நின்று போராடி நடைமுறைப்படுத்த முடியும். எனவே எரிட்டீரிய மக்கள் சுயதிருப்தியடைந்து முடங்கிவிடாமல் முழு விடுதலைக்கான போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கத் தலைமைக்கான போராட்டத்தையும் தொடரும்பொழுதே கிடைத்த அரசியல் விடுதலையையும் பாதுகாக்க முடியும். அப்பொழுதுதான் இன - மத மோதல்களை ஒழித்து ஒற்றுமையையும் நிலைநாட்ட முடியும்.

● சுப்பு

படிப்பகம்

www.padippakam.com

# ஆட்சியைப் பிடிக்கும் முன்னே பா.ஜ.க.-வில் பதவிச் சண்டை

பத்திரிகையாளர் ஒருவர் அத்வானியிடம் ''பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்தால் யார் பிரதமர்?'' என்று கேட்டதற்கு அவர் ''வாஜ்பாய்தான் பிரதமர்'' என்றாராம். இதை மேற்கோள் காட்டி ''பா.ஜ.க.-வில் சுயநலம் - பதவியாசை கொண்ட தலைவர்களே இல்லை பார்த்தீர்களா? தேசிய நலனை முழுமூச்சாகக் கொண்டவர்களும் அதற்காக எவ்வித தியாகத்தையும் செய்யக்கூடியவர்களை தலைவர்களாகக் கொண்ட கட்சிதான் பா.ஜ.க.'' என்று கூச்சல் போடுகிறார்கள். காங்கிரசில் அல்லது ஜனதா தளத்தில் இருப்பது போல் பதவி - அதிகாரத்திற்கான கோஷ்டி பூசல்களோ, சாதியப் பிளவுகளோ பா.ஜ.க.-வில் அறவே கிடையாது என்று சாதிக்கிறார்கள். ஆனால் அண்மையில் பா.ஜ.க.-வின் உட்கட்சித் தேர்தலில் நடந்த மோதல்கள், டில்லி, உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், பீகார் ஆகிய மாநிலங்களில் அடிதடி, வெட்டுக் குத்துக்களாகவும், துப்பாக்கிச்சூடு வரையும் போய் சந்திக்கு வந்து நாறியது. முன்னாள் தலைவர் முரளி மனோகர் ஜோஷிக்கும், புதிய தலைவர் அத்வானிக்கும் இடையே தலைமையளவில் குடுமிப்பிடிச் சண்டையாகவும் கீழ்மட்டங்களில் கோஷ்டி மோதல்களாகவும் வெடித்தது.

டில்லியில் கல்காதாஸ் மற்றும் கோஹ்லி கோஷ்டிகளுக்கிடையே நடந்த அடிதடி - மோதலின் காரணமாக கல்காஜி, கீதாகாலனி, அசோக் விஹார் ஆகிய பகுதிகளில் போலீசு தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டிவந்தது. ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதிகள் தேர்தலை நடத்திக் கொடுப்பதோடு நில்லாமல் அனைத்து விசயங்களிலும் தலையிட்டு முடிவுகளை (அத்வானிக்கு சாதகமாக) எடுத்து நடைமுறைப் படுத்தியதற்கு எதிர்ப்பு கிளம்பி கோஷ்டி மோதலில் முடிந்தது. தேர்தலே நடத்த முடியாமல்போய் தள்ளி வைத்தார்கள். பிறகு மர்மமான முறையில் கோஹ்லி போட்டியின்றி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

உ.பி.யில் மதுரா, மீரட், ஆக்ரா, புலாண்ட்ஷாகர், பிஜ்நோர், முசாபர் நகர் ஆகிய பகுதிகளில் நடந்த உட்கட்சித் தேர்தலில் வெட்டுக் குத்துக்களும் இருந்தன. அத்வானி, வாஜ்பாய் ஆதரவோடு கல்ராஜ் மிஸ்ரா தலைமையிலும் ஜோஷி ஆதரவோடு ராஜ்நாத் சிங், ராம் பிரகாஷ் குப்தா, மகேஷ் சந்திரசர்மா ஆகியோர் தலைமையிலும் இரண்டு கோஷ்டிகளாக மோதிக் கொண்டனர்.

மத்தியப் பிரதேசத்திலும் கோஷ்டி மோதல் காரணமாகவும், போலி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்ட மோசடி காரணமாகவும் தேர்தல் நடத்த முடியாமல் போய் தள்ளிவைத்து விட்டார்கள். முன்னாள் முதலமைச்சர் வி.கே.சாக்லேச்சா ஆதரவில் கைலேஷ் ஜோஷி ஒரு கோஷ்டியாகவும் முன்னாள் முதல்வர் சுந்தர்லால் பாட்வா, விஜய ராஜ் சிந்தியா மற்றும் குஷபாயு தாக்கரேயின் ஆதரவுபெற்ற வேட்பாளர் லக்கிராம் அகர்வால் ஒரு கோஷ்டியாகவும் பிரிந்து மோதிக் கொண்டனர். தேர்தல் அதிகாரிகள் உடந்தையோடு அகர்வால் கோஷ்டி தில்லுமுல்லுகள் செய்து இறுதியில் வெற்றியும் பெற்றுவிட்டது.

ராஜஸ்தானில் மு.ம. ஜோஷியின் கோஷ்டியைச் சேர்ந்த லலித் கிஷோர் சதுர்வேதிக்கும் முன்னாள் முதல்வர் ஷெகாவாட் ஆதரவு வேட்பாளரான ராம்தாஸ் அகர்வாலுக்கும் இடையே நடந்த போட்டி மோதலாக - அடிதடியாக வெளிப்பட்டது.

பீகாரில் ஜோஷி, அத்வானி கோஷ்டி வேட்பாளர்கள் மோதிக் கொண்டதில் துப்பாக்கிச்சூடு வரை போனது. அதிருப்தி வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குஜராத்தில் தேர்தலின் போது கோஷ்டி மோதல் முதல் சுற்றாக நடந்து ஓய்ந்தது. தற்போது இரண்டாவது சுற்றாக அத்வானியின் அதிகார துஷ்பிரயோகத்தால் மீண்டும் நடக்கிறது. மாநிலப் பொதுச் செயலாளராக இருந்தவரை மிரட்டி ராஜினாமா செய்ய வைத்து விட்டு தமது ஆதரவாளர் நரேந்திரமோடியை அத்வானி நியமித்தார். இதைத் தொடர்ந்து எதிர்தரப்பினரான மாநிலத் தலைவர் பதவி வகிக்கும் காசிராம் ராணா கோஷ்டியினர் எதிர்த்து மோதி வருகின்றனர்.

தமிழகத்திலோ மாநிலப் பொறுப்புகளிலிருந்து பலரை மாற்றியதிலும் கோஷ்டி பூசல்கள் எழுந்து அதிருப்தியாளர்கள் உருவானார்கள். அனுபவம் வாய்ந்தவர்களும் பல வருடகாலம் பணியாற்றியவர்களும் இருக்கையில் எவ்வித தகுதியுமில்லாத புதிய நபர் சந்திரபோஸ் என்பவர் பதவியிலமர்த்தப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து சடகோபன் என்பவர் பதவி விலகினார்.

— இவையெல்லாம் காட்டுவதென்ன? பிற ஓட்டுக்கட்சிகளைப் பேலவே அடிமுதல் நுனிவரை கோஷ்டி பூசல் பா.ஜ.க.-விலும் விரவியிருப்பதைத்தான். சதித்தனமாக எதிராளியின் காலை இடறிவிடுவது, போலி உறுப்பினர்களை சேர்ப்பது, எதிர் வேட்பாளரை மிரட்டி பணிய வைத்து போட்டியின்றி வெற்றி பெறுவது,



கள்ள ஓட்டு - அடிதடி - வெட்டுக்குத்து - கொலை - ஆள்கடத்த மூலம் வெற்றி பெறுவது... என பொறுக்கி - கழிசடை அரசியல் கலாச்சாரத்திற்கு பா.ஜ.க.-வும் விதிவிலக்கல்ல என்பதை அவர்களே பகிரங்கமாக நிரூபித்துள்ளார்கள்.

''பா.ஜ.க.-வில் தலைவர் பதவி இருந்தாலும் கூட்டுத்த தலைமையும் செயல்பாடும் முடிவுகளுமே உள்ளன; எனவே இரு மாறுபட்ட கருத்துடையவர்களோ, கோஷ்டிகளோ இல்லை'' என் பேட்டியளிக்கிறார் முரளி மனோகர் ஜோஷி. 'இந்து ராஷ்டிரத்தை நிர்மானிக்கின்ற பணியில் கூட்டுத்துவ செயல்பாடும் முடிவுகளு உள்ளன: அதாவது முரண்பாடுகள் இல்லை; ஆனால் கட்சியிலு வெளியிலும் தனக்கென தனிப்பட்ட செல்வாக்கையும் புகழையு உருவாக்கிக் கொள்வதில் இவர்களிடையே போட்டி - குடுமிப்பி சண்டை உள்ளது என்பதுதான் உண்மை. கட்சியில் பதவி கிடை கும் போது அதிகாரத்தைப் பயன்படுத்தி தமக்கென செல்வாக் உருவாக்கிக் கொள்ள கூடுதல் வாய்ப்பு கிடைக்கிறது. கடந்த வருட பதவி காலத்தில் ஜோஷியும் உமாபாரதி, கோவிந்தாச்சார். போன்றவர்களை அத்வானி ஆதரவாளர்கள் என்பதால் பழிவ கினார். கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை 95 லட்சமாக உயர்த் போது ஜோஷி தமது ஆதரவாளர்கள் ஏராளமானவர்களை பொறுக்கியெடுத்தார். இதற்கு அத்வானி, வாஜ்பாய் யாரும் வி

படிப்பகம்

www.padippakam.com

லக்கல்ல. ரதயாத்திரை மூலம் அத்வானிக்கும், காஷ்மீரில் கொடியேற்றியதன் மூலம் ஜோஷிக்கும் பெயர் - புகழ் - தனிநபர் துதியை கட்சி அமைப்பு ரீதியாகவே திட்டமிட்டு பரப்பினார்கள். அதாவது மக்களிடையே நிலவும் தனிநபர் மாயையை பிற ஓட்டுக் கட்சிகள் போலவே சாதகமாக்கிக் கொள்ள முனைந்தனர். ஆனால் அத்வானியும் ஜோஷியும் அப்புகழ் - தனிநபர் துதியை தமது சுயநலனுக்காக கீழ்மட்டம்வரை கோஷ்டி கட்ட பயன்படுத்திக் கொண்டனர்.

ஓட்டுப் பொறுக்கிகளுக்குரிய முக்கிய துருப்புச் சீட்டு சாதி! அத்வானி ஒரு சிந்தி என்பதால் ஆரியப் பார்ப்பனரான ஜோஷி இதையே மூலதனமாக வைத்து கட்சியிலுள்ள பார்ப்பனர்களை தனி அணியாக திரட்டி தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறார். பிற்பட்டவர்களான உமாபாரதி, கல்யாண்சிங் முதலியவர்கள் மீது ஜோஷி சதித்தனமாக நடவடிக்கை எடுத்துப் பழிவாங்கியதும் அவர்களை அத்வானி அரவனைத்துக் கொண்டதும் ஜோஷி பதவிகாலத்தில் நடந்தது. இப்போது அத்வானி தலைவரானதும் ஜோஷியால் பழிவாங்கப்பட்டவர்க்கெல்லாம் மறுவாழ்வு கொடுக்கப்படுகிறது. உ.பி. மற்றும் மஹாராஷ்டிராவில் உள்ள பா.ஜ.க. பொறுப்பாளர்கள் பெரும்பான்மையோர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதால் ஜோஷிக்கு இங்கு பலத்த எதிர்ப்பு உண்டு. கடந்த நவம்பரில் பூவனேஸ்வரியில் நடந்த மாநில மாநாட்டின் போது ஜோஷியை தலைவர் பதவியிலிருந்து நீக்கும்படி தீர்மானமே நிறைவேற்ற முயன்றார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஜோஷி, கட்சியிலுள்ள முஸ்லீம் தலைவர்களோடு நெருங்கிப் பழகுவதையும் முன்பு பாகிஸ்தான் இப்தார்



கட்சியின் உயர் அதிகாரியுடன் விருந்துண்டதையும் பிரச்சினையாக்கி பார்ப்பன வெறியைத் தூண்டிவிட்டு கட்சியிலுள்ள பார்ப்பனர்களை வளைத்துப்போட முயல்கிறார், அத்வானி. இப்படி தனிநபரின் சுயநல வெறிக்காக பா.ஜ.க.-விலும் நடக்கும் சாதீயச் சண்டை, கட்சித் தேர்தலில் நடந்த கோஷ்டி மோதலில் பீகார், உ.பி., மஹாராஷ்டிராவில் வெளிப்படையாகவே தெரிந்தது.

பா.ஜ.க.-வின் கோஷ்டி பூசல் இத்தேர்தலில் சந்திக்கு வந்து நாறிவிட்டதால் கட்சியின் கீழ்மட்ட அளவில் மட்டுமே இருப்பதாக ஒத்துக்கொண்டு பல பொய்க்காரணங்களைக் கூறி மழுப்பவும் நியாயப்படுத்தவும் முயற்சித்தார்கள். தலைமையளவிலோ ஜோஷிக்கும், அத்வானிக்கும் சில விசயங்களில் கருத்து மாறுபாடு மட்டுமே உள்ளதாக முலாம் பூசினார்கள். மேற்கண்ட இரண்டையுமே அதிகாரப்பூர்வமற்ற முறையில் செய்திகளாக - கிசுகிசுக்களாகப் பரப்பினர்.

கீழ்மட்ட அளவில் நடந்த கோஷ்டிப் பூசலுக்கு, அயோத்தி போன்ற இயக்கத்தால் கட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 30 லட்சம் பெருகியதாகவும், புதிதாக வந்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ளாததால் பா.ஜ.க.-வில் ஆர்.எஸ்.எஸ்.-ன் கட்டுப்பாடு போய்விட்டது என்றும், புதியவர்களில் பலர் எதிரிகள், சமூக விரோதிகள் ஊடுருவியிருப்பதாகவும் இப்படி பல காரணங்களை முன்வைக்கிறார்கள். பெங்களூரில் நடந்த கட்சி மாநாட்டில் புதிய உறுப்பினர்களை சோதித்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானமும் போட்டுள்ளனர். யார் காதில் பூ சுத்த நினைக்கிறார்கள்? மாநிலப் பொறுப்பு பதவிக்கு போட்டியிடும் நபர் புதியவரா, ஊடுருவிய நபரா? இல்லை. கோஷ்டி பூசலுக்குத் தலைமைதாங்கிய பலர் ஆர்.எஸ்.எஸ்.-காரர்கள். பல ஆண்டு பா.ஜ.க.-வில் இருப்பவர்கள். ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள், அதன் துணை அமைப்புகளின் தலைவர்கள் பலரது பின்னணியில் தேர்தலில் போட்டியிட்டவர்கள். உ.பி. முதல்வராக இருந்த கல்யாண்சிங்கை அமெரிக்க கைக்கூலி என்று ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையிலேயே எழுதுகிற அளவுக்கு கோஷ்டி பூசல் நாறியதை மறுக்க முடியுமா? உண்மை என்னவென்றால் ஆர்.எஸ்.எஸ்.-லேயே கோஷ்டி பூசல் உள்ளது என்பதுதான்! இத்தேர்தலில் அத்வானிக்கு ஆதரவாக ஆர்.எஸ்.எஸ். இணைப் பொதுச் செயலாளர் ராஜேந்திர சிங், ஹெச்.வி.சேஷாத்திரி முதலானோரும் ஜோஷிக்கு பின்னணியாக சுந்தர் சிங் பண்டாரி, தேங்கடி, சிக்கந்தர் பக்த், பி.எல்.சர்மா முதலியோரும் செயல்பட்டார்கள்.

தலைமையளவில் நடக்கும் மோதலுக்கு காரணமாக, அத்வானி ஒரு 'மிதவாதி'யாம்; ஜோஷி மற்றும் கூட்டாளிகள் (அசோக் சிங்கால், வினய் கத்தியார்) 'தீவிரவாதி'களாம்; அதாவது பாபர் மசூதி இடிப்பதில் அத்வானிக்கு உடன்பாடில்லை, ஜோஷியும் அவரது கூட்டாளிகளுமே தீவிரமாக இருந்து நடைமுறைப்படுத்தினராம்; மேலும் அமெரிக்கா மற்றும் அந்நிய கம்பெனிகளுடன் இந்தியா உறவு கொள்வதில் அத்வானிக்கு விருப்பம் என்றும் ஜோஷியோ எந்த உறவும் தேவையில்லை சுயபொருளாதாரத்தில் நிற்போம் என 'சுதேசி' கொள்கையை 'தீவிரமாக' நடைமுறைப்படுத்தினார் என்றும் இப்படி பலவாறாக கதையளக்கிறார்கள்.

முன்பு வாஜ்பாய் 'மிதவாதி'யாகவும் அத்வானி 'தீவிரவாதி'யாகவும் இருந்தார்கள். தற்போது அத்வானி 'மிதவாதி'யாக சித்தரிக்கப்படுகிறார். மசூதி இடிப்பில் அத்வானிக்கு விருப்பமில்லை - சம்பந்தமில்லை என்று சித்தரிக்கிறார்கள். மசூதி இடிப்புக்கு அத்வானி வக்காலத்து வாங்கிப் பேசியதை அதற்குள்ளாகவா மறந்துவிட முடியும்? இன்று மசூதி இடிப்பினால் அதிருப்தி நிலவுவதை சரிகட்டவே அத்வானிக்கு 'மிதவாத'ப் பூச்சு! அத்வானியின் ரதயாத்திரையால் பல உயிர்களைப் பலிவாங்கியது தொடர்பாக இருந்த அதிருப்தியைப் போக்க ஜோஷியை ''பேராசிரியர் - பண்பாளர் - சிந்தித்து முடிவெடுத்து சரியாக வழிநடத்துபவர்'' என்றெல்லாம் புகழ்ந்து பதவியிலமர்த்தினார்களே, அதைத்தான் மறந்துவிட முடியுமா? சுதந்திரப் போராட்ட காலக்கட்டத்தில் காங்கிரசு கையாண்ட யுக்தி இது.

நாட்டை போண்டியாக்கிய காங்கிரசின் ''திறந்த பொருளாதாரக் கொள்கை''க்கு மாற்று என்கிற முறையில் பா.ஜ.க. அடிக்கும் அரசியல் 'ஸ்டண்ட்'தான் ''சுதேசி கொள்கை'', ''சுதேசி இயக்கம்'' எல்லாம்! இல்லையெனில், வெளிநாட்டு நிறுவனத்தின் ''கார்'' வைத்துக் கொண்டே ''அந்நிய பொருள் பகிஷ்கரிப்பு'' இயக்கத்தில் ஈடுபடும் ஜோஷியை சுதேசி - கொள்கைப் பிடிப்பாளர் என்று வர்ணிக்க முடியுமா? பிர்லா, மோடி, இந்துஜா முதலான தரகு முதலாளிகளின் பின்னணியில் செயல்படும் பா.ஜ.க., தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கப் போகிறோம் என்கிறதே எவ்வளவு பெரிய மோசடி?

பா.ஜ.க. பல வட மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சியைப் பிடிக்கக் கூடிய சூழல் நிலவுகிறது. ஆட்சியதிகாரம் - பதவி என்கிற ''பணம்காய்க்கும் மரம்'' கைக்கெட்டிய தூரத்தில் இருக்கும் போது கட்சிப் பதவிகளில் இப்பொழுதே முந்திக் கொண்டால்தானே பலன்?! ஏற்கனவே ம.பி., உ.பி., ராஜஸ்தான் என சில மாநிலங்களில் பதவிக்கு வந்து சுவைகண்ட பூனைகளாகவும் இருப்பதால் கோஷ்டி மோதல் உக்கிரமாக வெளிப்படுவதில் ஆச்சரியமும் இல்லை. பிற ஓட்டுப் பொறுக்கி கட்சியைப் போலத்தான் பா.ஜ.கவும் என்றாலும் அதன் இந்துவெறி பாசிச கொள்கையை மறந்துவிட முடியாது. ஏனெனில் இவர்கள் தமக்குள் அடித்துக் கொண்டாலும், ஒன்றுபட்டு இந்துவெறி பாசிசத்தை அரங்கேற்றி வருகிறார்கள். பாசிச அமைப்பு வடிவங்களுடன் நிறுவன பலத்தையும் பெற்று ''இந்து ராஷ்டிரத்தை'' நோக்கி முன்னேறி வருகிறார்கள். இவர்களின் பதவி - சுயநலவெறி - பொறுக்கி அரசியல் கலாச்சாரத்தை அம்பலப்படுத்துவதோடு இந்து மதவெறி பாசிசத்தை தாங்கி முறியடிக்கவும் வேண்டும்.

● ராசு

படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024. Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com





இங்கே தொட்டியம் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சிவபதியையும் அவரால் துப்பாக்கி சூடு நடத்தி படுகாயமுற்ற நான்கு விவசாய இளைஞர்களையும் காண்கிறீர்கள். அந்த இளைஞர்கள் செய்த குற்றம் என்ன? உள்ளூர் அ.தி.மு.க., தி.மு.க. பிரமுகர்கள் இருவர் லஞ்சம் கொடுத்து காவிரியில் மணல் வாரிக் கொள்வதற்காக ஆற்றில் பாதை போட்டனர். அந்த மணல் மேடு காரணமாக விவசாயத்துக்கு நீர்வரும் வாய்க்கால் அடைபட்டது; தடையை அகற்றக் கோரி எம்.எல்.ஏ. சிவபதி வீட்டு முன் திரண்டனர் விவசாயிகள். இந்த உதவி கூட செய்ய மறுத்த சிவபதி, விவசாயிகள் மீது தானே துப்பாக்கி சூடு நடத்தி நான்கு பேரைக் கொல்ல முயன்று பயங்கர பீதியை ஏற்படுத்தினார். ஆத்திரமுற்ற விவசாயிகள் சிவபதியின் கார், வீட்டுப் பந்தலை எரித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்; வேறு வழியின்றி கைது செய்யப்பட்ட சிவபதி 'நெஞ்சு வலி' என்று பொய் கூறி பிணையில் விடுதலை பெற்றார். இதே சிவபதி சில மாதங்களுக்கு முன்பு சட்டக் கல்லூரி தேர்வில் காப்பியடித்த போது தடுத்த ஆசிரியரை ஆபாசமாக ஏசி கலவரம் செய்துள்ளார்.

கீழே மனைவி, குழந்தையுடன் மகிழ்ந்து குலாவிக் கொண்டிருப்பவர் கோவை இராமகிருட்டினன். திராவிடர் கழகம் (இரா) குழுவையும், ஒரு சிறு பொறியியல் தொழிலையும் நடத்திக் கொண்டிருந்த இவரும், இவரது கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் ஆறுச்சாமியும் கடந்த இரண்டாண்டுகளாக கொடிய 'தடா'ச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கு வெடி மருந்தும், ஆயுதத் தளவாடங்களும் தயாரித்துக் கொடுத்ததாக பொய் வழக்குப் போட்ட அரசு, இவர்களைப் பிணையில் விடமறுத்து வருகிறது. இன்னொரு பொய் வழக்கில் தமிழ் அறிஞர் பெருஞ்சித்திரனாரும் 'தடா' வின் கீழ் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அராஜகம், ரௌடித்தனத்தின் மொத்த உருவமான ஆளும் கட்சி எம்.எல்.ஏ. சிவபதி கிரிமினல் கொலை முயற்சிக்குப் பின்னரும் சர்வ சுதந்திரமாக உலா வருகிறார். ஆனால் ஈழ விடுதலைக்கும், தமிழின உணர்வுக்கும் போராடியதற்காக இராமகிருட்டினன், ஆறுச்சாமி, பெருஞ்சித்திரனார் ஆகியோர் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு கொடுஞ்சிறையில் வாடுகின்றனர். இத்தகு அநீதி, கொடுமைகளுக்கு முடிவு கட்ட வேண்டாமா?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்